
வருட வந்த
தென்றல்
சத்யா இராஜ்குமார்
வருட வந்த தென்றல் * சத்யா இராஜ்குமார்
வருட வந்த
தென்றல்
சத்யா இராஜ்குமார்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : வருட வந்த தென்றல் |
| ஆசிரியர் | : சத்யா இராஜ்குமார் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : மே, 2010 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள். |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 140 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அறிவாலயம்<br>தபால் பெட்டி எண்: 667,<br>பு.எண்: 32/7, ப.எண்: 107/7,<br>கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.50.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : எஸ்.எஸ்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |




# வருட வந்த தென்றல்

# வருட வந்த தென்றல்



## 1

"குட்மார்னிங்மா."

"வாடா கண்ணா, என்ன இன்னைக்கு நேரத்துலயே எழுந்துட்ட?"

"ஏன், நீங்க மட்டும் தான் எப்பவும் நேரத்துல எழுந்திருக்கலாமாக்கும்?"

"எனக்கு அஞ்சு மணிக்கு மேல சுட்டுப் போட்டாலும் தூக்கம் வராது, நீ இந்த வயசுலயே அதிகாலைல தூங்கற சுகத்த ஏன்டா மிஸ் பண்ற?"

"இப்படியொரு அம்மா கிடைக்க நான் ரொம்பவும் குடுத்து வெச்சிருக்கணும்."

''அது சரி.''

''உண்மையச் சொல்லணும்னா எனக்கும் இன்னைக்குத் தூக்கமே வரலமா.''

''ஏன்?''

''இண்டர்வியூக்குப் போறத நினைச்சா பயமா இருக்கு.''

''பயமெதுக்கு? ஆனாப் பாரு இல்லேன்னா இன்னொன்னு.''

''அப்படிப் போய்ட்டே இருந்தாலும் கூட உலகத்துல வேலைக்குப் பஞ்சம் வராது தான், ஆனா நான் உடனே ஏதாவதொரு வேலைக்குப் போயே ஆகணும்மா.''

''இதே மென்டாலிட்டியோட இருக்காதன்னு உனக்கு நிறைய முறை சொல்லிட்டேன் ஸ்ருதி. ஏதோ நானும் வேலைக்குப் போனதுக்கப்புறம் வீட்ல நீ மட்டும் தனியா மொட்டு மொட்டுன்னு உக்காந்துட்டு இருக்கறையேங்கற ஒரு காரணத்துக்காக மட்டும் தான் நீ வேலைக்குப் போறதயே நான் என்கரேஜ் பண்றேன்.''

''நீங்க மட்டும் குடும்பத்துக்காக மெழுகுவர்த்தியாத் தேயலாமாக்கும்?''

''இன்னும் சம்பாதிக்கவே ஆரம்பிக்கல, அதுக்குள்ள கம்பேரிஸனெல்லாம் போட ஆரம்பிச்சுட்ட?''

''ஸாரிமா.''

''உடனே ஸாரியாக்கும், முதல்ல போய் பிரஸ் பண்ணிட்டு வா காபி போட்றேன்.''

''சரி மம்மி.''

மகள் உண்மையிலேயே இன்றைக்கு மிகவும் பரபரப்புடன் இருக்கிறாளே என்று நினைத்த காவேரிக்குச் சிரிப்பு தான் வந்தது.



மற்றபடி காலையில் படுக்கையை விட்டு எழுந்தாலானால் பிரஸ் செய்வதற்கு முன்பு ஒரு வார்த்தைகூட நின்று பேச மாட்டாளே.

எவ்வளவு அன்பான, அழகான மகள் தனக்கு இருந்தும் என்ன செய்ய, தன்னால் நன்கு வைத்துக் கொள்ள முடியவில்லையே.

தன்னுடைய கணவன் மட்டும் உயிருடன் இருந்திருந்தால்,

அதுதான் தனக்குக் கொடுத்து வைக்கவில்லையே.

பிறகு அதையே நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதால் மட்டும் என்ன லாபம், மிஞ்சிக் கிடைக்கப் போகும் மனபாரத்தைத் தவிர.

பத்து நிமிடங்களில் மகள் வர, தயாராக இருந்த காபியை ஊற்றிக் கொடுத்தார்.

''உங்களுக்குமா?''

''எனக்கும் தான், என்ன டிபன் பண்ணட்டும் கண்ணா?''

''நீங்க என்ன செஞ்சாலும் எனக்கு ஓகே தாம்மா. ஆனா என்னக் கேக்கறதுக்காக சொல்றேன், லஞ்ச்சுக்கு நீங்க செஞ்சிருக்கற சாப்பாட்டையே இப்பவும் சாப்பிட்டுக்கலாம்.''

''அதனால தான் நானும் உங்கிட்ட ஒபீனியனே கேக்கறதில்ல, மதியத்துக்காக செஞ்ச காளான் கிரேவி நிறைய இருக்குமா சப்பாத்தி மட்டும் போட்டு ஹாட் பாக்ஸ்ல எடுத்து வெச்சுடறேன்.''

''சரிமா.''

எட்டு மணிக்குத் தான் கிளம்பியாக வேண்டுமென்பதால், அதற்குப் பிறகு காவேரிக்கு வேலையே சரியாக இருந்தது.

ஸ்ருதி வந்து இனி தான் மேல் வேலைகளைப் பார்த்துக் கொள்வதாக சொல்லித் தாயைக் குளிப்பதற்கு அனுப்பினாள்.

அனைத்தையும் எடுத்து டைனிங் டேபிள் மேல் வைத்தாள், தாய்க்கு மதிய உணவை டிபன் பாக்ஸில் போட்டுத் தயாராக எடுத்து வைத்தாள்.

மேலும் சிறிது நேரத்தில் கிளம்பிய காவேரி, பொறுமையாகக் கிளம்பி காலை உணவை முடித்துக் கொண்டு பத்திரமாகச் சென்று இண்டர்வியூவை அட்டெண்ட் செய்து விட்டு வருமாறு ஒரு முறைக்கு இரண்டு முறையாக மகளிடம் சொல்லிவிட்டுப் புறப் பட்டார்.

தாய் சென்றதும் தன்னுடைய காலை உணவை முடித்துக் கொண்ட ஸ்ருதி, பிறகு தானும் குளித்துக் கிளம்பி ஒன்பது மணிக்கு இண்டர்வியூவுக்காக வீட்டை விட்டுப் புறப்பட்டாள்.

# 2



"ஸ்ருதி."

தன் முறை வர, சற்றே படபடத்த மனதுடன் எழுந்து உள்ளே போனாள் ஸ்ருதி.



ஸ்ருதி எலக்ட்ரானிக்ஸில் டிப்ளமோ முடித்திருந்தாள். மேலே பி.இ. படிக்க ஆசை தான், ஆனால் குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு அதை அவள் தனது தாயிடம் சொல்லவில்லை.

வேலைக்குப் போய்க் கொண்டே பார்ட் டைமில் படித்துக் கொண்டால் போகிறது என்ற எண்ணம். என்ன டிப்ளமோ முடித்த பிறகும் எந்தப் பலனும் இல்லாமல் இடையிலே கழிந்து விட்ட ஒரு வருடத்தை நினைத்தால் மட்டும் மனதிற்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும்.

சரி இப்பொழுதாவது இந்த வேலை கிடைத்து அனைத்தும் நல்லதாக நடந்தால் சரி என்ற எண்ணத் துடன் இண்டர்வியூவை அட்டெண்ட் செய்தாள்!

கடவுள் புண்ணியத்தில் ஸ்ருதி வேலைக்குத் தேர் வாகிவிட, அப்பொழுதே சம்பளம் முதல் மற்ற அனைத் தையும் சொல்லி விட்டிருந்தனர்.

எம்.டி. அறுபது வயது மதிக்கத்தக்கவராக இருக்க, அவருடைய சாந்தமான முகத்திலும் அன்பான வார்த்தை களிலும் மேலும் இருந்த கொஞ்ச நஞ்ச பயமும் போய் ஸ்ருதியை உற்சாகம் தொற்றிக் கொண்டது.

எது எப்படியோ முதல் தடவையாக் இண்டர்வியூக்கு வந்த இடத்திலேயே வேலையும் கிடைத்து விட்டதோடு ஓரளவு நல்ல சம்பளமும் அறிவிக்கப்பட, சந்தோஷத் துடனேயே வீட்டுக்குத் திரும்பினாள்.

ஸ்ருதி வேலைக்குத் தேர்வாகி இருந்த இடம் ஒரு பேக்டரி கம் ஷாப்.

வீட்டு உபயோகப் பொருட்கள் முதல் இன்னும் நிறைய எலக்ட்ரானிக்ஸ் சாதனங்களை அவர்களே உற்பத்தி செய்து விற்றுக் கொண்டும் இருந்தார்கள்.

அவர்களுடைய தயாரிப்புகள் அனைத்துமே முதல் தரம் வாய்ந்தவையாக இருந்தன.

அதனால் நாளுக்கு நாள் உற்பத்தியைத் தான் அதிகரிக்க வேண்டியிருந்ததே தவிர, விற்பனையில் தேக்கம் இருந்ததே இல்லை.

ஃபேக்டரி பின்புறம் இருக்க, முன்புறம் கடை இருந்தது. அதாவது ஷோரூம்.

ஷோரூமில் ஏழெட்டுப் பேர் வேலை செய்து கொண்டிருக்க, ஃபேக்டரியில் முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் இருந்தார்கள்.

ஸ்ருதியை ஷோரூமில் நியமித்திருந்தார்கள்.

எப்போதாவது ஃபேக்டரியில் வேலை அதிகமாக இருந்தால், ஷோரூமில் இருப்பவர்களும் அங்கு செல்ல வேண்டியிருக்கும் என்றார்கள்.

மறுநாளே நல்ல நாளாக இருக்க அன்றைக்கே வேலையில் சேர்ந்து விட்டிருந்தாள் ஸ்ருதி.

மகள் சொல்வதை வைத்துப் பார்த்தால் எந்த மாதிரி இடமோ எப்படியோ என்று தாள் கவலைப்பட்டுக் கொண்டிருந்ததற்கு நேர் மாறாக அனைத்தும் அமைந்து விட்டிருந்ததில், காவேரிக்கும் மனதில் ஒரு நிம்மதி.

# 3



ஸ்ருதி வேலைக்கு சேர்ந்து பத்து நாட்கள் ஆகியிருந்தன.



குலதெய்வக் கோவிலுக்குச் சென்று வரலாமென்று காவேரி சில நாட்களாகவே சொல்லிக் கொண்டிருக்க, அன்றைக்கு ஞாயிற்றுக் கிழமையென்று அதிகாலையிலேயே கிளம்பி விட்டிருந்தனர்.

''ஸ்ருதி.''

''என்னமா?''

''கோவிலுக்கு ஸ்கூட்டிலயே போய்ட்டு வந்துடலாம்மா, இல்லன்னா அங்க போய் மூணு கிலோ மீட்டர் நடக்க வேண்டியிருக்கும்.''

''சரிமா, சும்மா போனாக் கூட பொடிநடையா நடக்கலாம். நீங்கதான் வேண்டுதல்னு என்னென்னவோ எடுத்துட்டு வர்றீங்களே'' என்றாள் பெண்.

அவர்கள் எட்டு மணிக்குக் கோவிலை அடைந்திருக்க, அங்கு ஏற்கனவே கூட்டம் நிறைந்திருந்தது.

ஒரு குழந்தைக்கு முடியெடுத்து காது குத்துவதற்காக நிறையப் பேர் வந்திருந்தார்கள்.

ஸ்ருதியும், அவளது தாயும் பொங்கல் வைப்பதற்காக தாங்கள் எடுத்துச் சென்ற பொருட்களை எடுத்து வெளியே வைத்துக் கொண்டிருக்க, அவர்கள் இருவரையும் வந்து டிபன் சாப்பிட அழைத்தார்கள்.

எவ்வளவு மறுத்தும் அவர்கள் விடாததால், மகளை மட்டும் அனுப்பி வைத்தார் காவேரி.

நேராக டிபன் சாப்பிடச் சென்றால் நன்றாக இருக்காதென்று, குழந்தைக்கு முடியெடுத்துக் காது குத்தும் இடத்திற்குப் போனாள் ஸ்ருதி.

முடியெடுப்பதற்காகக் குழந்தையின் தலையை சிலர் ஆடி விடாமல் பிடித்திருக்க, குழந்தை பயத்தில் தேம்பித்

தேம்பி அழுது கொண்டிருப்பதைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

அங்கிருந்த தன் வயதையொத்த பெண்ணொருத்தி சினேகமாய் சிரிக்க, அவளுடன் சென்று இணைந்து கொண்டாள் ஸ்ருதி.

ஒரு வழியாக முடியெடுத்து முடிய, அவ்வளவுதான் எங்க சிரி பார்க்கலாம் என்று குழந்தையை சமாதானப் படுத்த ஆரம்பித்திருந்தார்கள்.

அதுவரை குழந்தையை மடியில் வைத்துக் கொண் டிருந்தவன் ''டேய் போதுன்டா'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து சற்று தள்ளிப் போய் நின்று தனது துணியை தட்டிவிட்டுக் கொண்டிருந்தான்.

''என்ன சிவா, மாமா மடில உட்கார வெச்சு முடி யெடுத்திருக்கோம், குழந்தைக்கு என்ன கொண்டு வந்திருக்க'' என்று அங்கிருந்த ஒருவர் அந்த சிவாவிடம் கேட்டார்.

''இதப்பார்ரா, என் டிரஸ்ல அழுக்குப் பண்ணி முடி யெல்லாம் மேல விழுந்ததுக்கு நீங்கதான் எனக்கு ஏதாவது கொடுக்கணும்.''

''அதுவும் நேத்து சாயங்காலம் தான் ஃபாரினிலிருந்து வந்திருக்கான் பையன், எதுக்கும் விடாம காலைலயே இங்க கூட்டிட்டு வந்துட்டோம்'' என்று மற்றொருவர் சொல்ல, ''அதான'' என்று சென்று கைகளைக் கழுவித் துடைத்துக் கொண்டு வந்தான் அவன்.

அங்கிருந்த அனைவரும் அந்த சிவாவைச் சுற்றியே பேசிக் கொண்டிருக்க, ஸ்ருதிக்கு அங்கு அனைத்துமே புதிதாக இருந்தது.



''எனக்கு இந்த ஃபங்ஷனுக்கு என்ன வாங்கிட்டு வரணுங்கறதெல்லாம் ஐடியாவே இல்ல, இத அப்பா குடுக்கச் சொன்னார்'' என்று தனது பேன்ட் பாக்கெட்டி லிருந்த ஒரு சிறிய நகை டப்பாவில் இருந்து ஒரு தங்கச் செயினை எடுத்துக் குழந்தையின் கழுத்தில் அணிவித் தான் அந்த சிவா.

தன்னருகில் இருந்த அந்தப் பெண் சாப்பிட அழைக்க, உடன் சென்றாள் ஸ்ருதி.

மேலும் சிறிது நேரத்தில் அனைவரும் சாப்பிட்டு முடித்து விட்டு எழ, கடைசியாகத் தானும் சென்று கை கழுவிக் கொண்டிருந்த ஸ்ருதி 'ஹலோ' என்ற குரலில் திரும்பினாள்.

தன்னுடன் இருந்த அந்தப் பெண் கிளம்புவதாக சொல்லிவிட்டு ஏற்கனவே சென்றிருக்க, அங்கு தன்னைத் தவிர கை கழுவுவதற்காக அந்த சிவா மட்டுமே நின் றிருப்பதைக் கண்டாள்.

ஸ்ருதி என்ன என்பதைப் போல அவனைப் பார்க்க, ''உங்க ஷால் கீழ விழுது பாருங்க'' என்றான் அவன்.

ஸ்ருதி அணிந்திருந்த சுடிதாரின் துப்பட்டா ஒரு புறமாக நிறைய சரிந்து கீழே விழுந்து உரசிக் கொண் டிருந்தது.

''தேங்க்ஸ்'' என்று சரி செய்து கொண்டாள் ஸ்ருதி.

''எம்பேர் சிவானந்தன், உங்க பேர் தெரிஞ்சுக்க லாமா?''

அவன் உரிமையாய்க் கேட்ட விதத்தில் சற்றே எரிச் சல் குமிழியிட, ''எம்பேர, நீங்க எதுக்குத் தெரிஞ்சுக் கணும்?'' என்று கேட்டாள் ஸ்ருதி.

''சும்மா தெரிஞ்சுக்கத்தான்.''

''ஸாரி, பழக்கமில்லாதவங்ககிட்ட நான் அதெல்லாம் சொல்றதில்ல.''

''சொல்லி தொடர்ந்து பேசினீங்கன்னா தான பழக்கமே ஆகும்'' என்று ஆச்சரியமான குரலில் ஸ்ருதியைப் பார்த்தான் அந்த சிவானந்தன்.

''எனக்கு அவசியமில்ல.''

''அட, எண்ணெய்ல போட்ட கடுகு மாதிரி பொறிய நீங்க, நான் உங்க பேரத் தெரிஞ்சுக்காம விட மாட்டேன்.''

''பாக்கக் கொஞ்சம் நல்லா இருந்தா உடனே நாக்கத் தொங்கப் போட்டுட்டு பின்னாடி அலையறவங்களையெல்லாம் நானென்ன செய்ய முடியும்?''

''உங்களுக்கு தான் எங்கூடப் பேசிட்டே இருக்க ஆச போலிருக்கு. பேர மட்டும் சொல்லியிருந்தா நான் அப்பவே போயிருப்பேனே.''

என்ன திமிர் சும்மா இருந்தவளை சீண்டியதுமில்லாமல், அவனோடு வழிய தனக்கு ஆசையாமா?

''ஹலோ மிஸ்டர் இந்தத் திமிரெல்லாம் எங்கிட்ட வேணாம், உங்கள மாதிரி கேவலமான ஆளுங்களப் பாத்தாலே எனக்குப் புடிக்காது.''

ஸ்ருதியின் கோபத்தைப் பார்த்துக் கண்களால் சிரித்தவன், ''உங்களப் பத்தித் தெரிஞ்சுக்கணுங்கற ஆவல் இன்னும் அதிகமாயிடுச்சு'' என்றான் அவன்.

ஸ்ருதிக்கு வந்த கோபத்தில் தன்னை மேலும் கட்டுப்படுத்திக் கொள்வது சற்றுச் சிரமமாயிற்று.



''நான் ஒன்னத் தீவிரமா நினைச்சா அது எப்பவுமே நடக்கும், கண்டிப்பா நாம திரும்பவும் மீட் பண்ணுவோம்.''

''அப்படியொரு பேட் லக் எனக்கு வர வேண்டாம்னு நான் கடவுள வேண்டிக்கறேன்'' என்றாள் ஸ்ருதி.

''ரியலி யூ ஆர் வெரி இன்ட்ரஸ்டிங் கேர்ள்'' என்று சிரித்துவிட்டுப் போனான் அந்த சிவானந்தன்.

'பெயரைப் பார் பெயரை, சிவானந்தன் கந்தன் என்று.

சரியான ஜொள்ளுப் பேர்வழி போலிருக்கிறது.

சை எங்கிருந்துதான் வருகிறான்களோ.'

நல்ல வேளையாகக் கை கழுவும் இடம் சற்று தூரத்திலிருக்க, அவ்வளவாக யாரும் கவனித்திருக்க மாட்டார்களென்று நினைத்துக் கொண்டாள் ஸ்ருதி.

''என்னடாம்மா முகமெல்லாம் இப்படி வேர்த்திருக்கு?''

''அங்க சாப்புட்ற இடத்துல பேன் கூட இல்லமா, கப்புன்னு அடைச்ச மாதிரியிருக்கு அதான்.''

''பொங்கல் பொங்கி வரப் போகுது பாரு, எல்லாம் நல்லதா நடக்கணும்னு கடவுள வேண்டிக்கோம்மா'' என்றார் காவேரி.

'எங்க போய் வேண்டிக்கறது? கோயிலுக்கு வந்து இருக்கற நிம்மதியும் போனது தான் மிச்சம் போலிருக்கு.'

''என்னமா, திரும்பவும் என்ன யோசனை?''

''நான் உங்களுக்காகத்தான் வந்தேம்மா, எனக்கு இந்த மாதிரி சாமியெல்லாம் கும்புட்றதுல கொஞ்சமும் விருப்பமே இல்லன்னு உங்களுக்குத் தெரியுந்தான.''

''சரிடாம்மா.''

பாவம் கடைசியாகத் தனது தந்தையுடன் சேர்ந்து வந்த ஞாபகம் போலிருக்கிறது என்று மகளிடம் மேலும் எதையும் கேட்காமல் விட்டு விட்டார் காவேரி.

## 4



அன்றைக்குத் தான் வேலை செய்யுமிடத்தில் அனைவரும் பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்த ஸ்ருதிக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

அங்கிருப்பவர்கள் அனைவரும் இன்னும் கொஞ்சம் வேகத்துடனும், உயிர்த்துடிப்புடனும் வேலை செய்தால் நன்றாக இருக்குமோ என்று ஸ்ருதியே கூட நிறைய முறை நினைத்திருக்கிறாள்.

எப்படியோ தன் பங்குக்குத் தன் வேலைகள் அனைத்தையும் பார்த்துப் பார்த்து செய்து அந்த அளவில் திருப்திப்பட்டுக் கொள்வாள் ஸ்ருதி.

''என்ன ஸ்ருதி ஆச்சரியமாப் பாக்கற?''

பல வருடங்களாக அங்கே தொடர்ந்து வேலை செய்து கொண்டிருக்கும் சங்கீதா ஸ்ருதியைப் பார்க்க, தான் நினைத்ததையே கேட்டாள் ஸ்ருதி.

''அதையேன் கேக்கற? இனிமேல் இங்க எல்லார் பாடும் திண்டாட்டம் தான்.''

''ஏன், எதுக்கு அப்படிச் சொல்றீங்க?''



''ஆமாம் பின்ன, சதாசிவம் ஸாரோட சன் ஃபாரின்ல படிச்சு முடிச்சுட்டு இந்தியாவுக்கு வந்துட்டார். இனிமேல் நிர்வாகமெல்லாம் அவர்தான் பாக்கப் போறாராம்.''

''அதனாலென்ன?''

''அதனாலென்னவா? அவர் ஸ்பீடுக்கு அவர் எதிர் பார்க்கற அளவுக்கு வேல செய்யறது எவ்வளவு சிரமம் தெரியுமா?''

அப்பாடா இனிமேலாவது வாங்குகிற சம்பளத்திற்கு முழுமையாக வேலை செய்தோமென்ற நிம்மதியுடன் இருக்கலாம் போலிருக்கிறதே என்று ஸ்ருதியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''அத நீயும் தான் நேர்லயே பாக்கப் போறியே'' என்றவள், ''ஆனா நீதான் சின்சியர் சிகாமணியாச்சே அதனால உனக்கு எந்தப் பிரச்சனையுமில்ல'' என்றும் அவளே சொல்லிக் கொண்டாள்.

ஆனாலும் ஸ்ருதிக்கும் மனதிற்குள் சற்றுப் பயமாகத் தான் இருந்தது.

இப்பொழுதுதான் வேலைக்கு சேர்ந்திருக்கும் தன்னிடமும் அவன் நிறைய எதிர்பார்த்தால் என்று நினைத்தவள், சரி தானும் முயன்று அனைத்து வேலைகளையும் விரைவில் கற்றுக் கொண்டால் போகிறதென்று நினைத்துக் கொண்டாள்.

ஆனால் சிறிது நேரத்தில் ''குட்மார்னிங் டு எவ்ரிபடி'' என்று அவனே வந்து நின்றபோது, ஸ்ருதிக்குத் தனது கால்களின் கீழ் பூமி நழுவியது.

கடவுளே தெளிந்த நீரோடையைப் போலப் போய்க் கொண்டிருக்கும் தனது வாழ்க்கையில் பாறாங்கல்லா வந்து விழ வேண்டும்?

சும்மாவே வாயைப் பிடுங்கி வழிந்தவன், அதிகாரத்துடன் வேறு வந்து நின்றால்.

ஆம் எம்.டி.யின் மகனென்று வந்து நின்றவன் சிவானந்தன்.

நேற்று கோவிலில் பார்த்த அதே சிவானந்தன்.

சரி இனி இந்த வேலைக்கு டாடாதான் என்று ஸ்ருதி கவலையுடன் நினைத்துக் கொண்டிருக்க, பழைய ஸ்டாஃப்களுடன் பேசிக் கொண்டிருந்தான் அந்த சிவானந்தன்.

அடுத்ததாக அவன் ஸ்ருதியைப் பார்க்க, என்ன செய்வதென்றே தெரியாத ஒரு சங்கடமான நிலையில் அவளது மனம் தவித்தது.

''உங்களப் பத்தித் தெரிஞ்சுக்கலாமா?'' என்று அவன் ஆங்கிலத்தில் கேட்க, முகபாவனை மாறி விடாமல் காத்தவாறு அனைத்தையும் சொல்லி முடித்தாள் ஸ்ருதி.

ஆனால் சிவானந்தனின் முகத்தில் கேலி, கிண்டல் போன்ற எதையும் காணவில்லை.

'நிச்சயமாக மறந்திருக்க மாட்டான், தொழில் செய்யுமிடத்தில் அதைப் பற்றிப் பேச விருப்பமில்லாதிருக்கலாம்.

ஏதோ அந்த மட்டுமாவது புத்தியிருந்தால் சரிதான்.

எது எப்படியோ இனி இங்கு தொடர்ந்து வேலை செய்வது சந்தேகம்தான்.'

''ஹலோ'' என்ற அவனது அழைப்பில் தான் நடப்புக்கு வந்தாள் ஸ்ருதி.

அவன் தன்னிடம் எதையோ கேட்டிருக்கிறான் போலிருக்கிறது.



''டியூட்டில இருக்கும்போது வேற எந்த யோசனையும் இருக்க வேண்டாம்னு நினைக்கறேன்'' என்றான் அவன்.

ஓ, அவனும் நேற்று நடந்ததை அப்போதைக்கு எடுக்கப் போவதில்லையென்று மறைமுகமாக சொல்கிறானோ.

தனக்கு அருகிலிருந்த லேண்ட்லைன் போன் ஒலிக்க, தப்பித்தால் போதுமென்று எடுத்துப் பேசினாள் ஸ்ருதி.

ஆனால் பேசியது பெரிய எம்.டி. சதாசிவம்.

அவர் சிவானந்தனைக் கேட்க, அவனிடம் விஷயத்தைச் சொல்லி ரிஸீவரைக் கொடுத்தாள்.

''கால் மணி நேரத்துல நான் அங்க வர்றேன்'' என்று கையிலிருந்த ரிஸீவரை வைத்திருந்தான் சிவானந்தன்.

நாட்கள் சில சென்றிருந்தன.

அந்த சிவானந்தனின் வேகம் உண்மையிலேயே அனைவரையும் திகைக்க வைத்தது.

அவனுடைய எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்து பரவாயில்லை என்ற வார்த்தையைப் பெறுவதற்கே அனைவரும் வழக்கத்தை விடவும் இரண்டு மடங்கு உழைக்க வேண்டியிருந்தது.

அதே சமயம் உண்மையான திறமையை உணர்ந்து பாராட்டவும் செய்தான்.

அவனைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்த இந்த சில நாட்களில், அன்றைக்குக் கோயிலில் வைத்து இவனா அப்படியெல்லாம் பேசினானென்று ஸ்ருதியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அந்த அளவிற்குக் கண்ணியமாக நடந்து கொண்டான்.

பிரச்சனை எப்பொழுது வெடிக்குமோ என்பதைப் போல தன்னுடன் வேலை செய்பவர்களில் சிலர் பயத்துடன் தங்களுக்குள் பேசிக் கொண்டது தான் ஸ்ருதிக்குப் புரியாத புதிராகவே இருந்தது.

## 5



''சிவா.''

கார் சாவியை ஆள்காட்டி விரலால் சுற்றிக் கொண்டே ஹாலைக் கடந்து வந்தவன், தந்தையின் அழைப்பில் நின்று திரும்பினான்.

''சொல்லுங்கப்பா.''

''நீ கார் ஓட்ற வேகம் ரொம்ப அதிகம்பா. உங்க இள வயசுக்கு அப்படித்தான் இருப்பீங்கன்னாலும் உன் வேகம் அசாதாரணமா இருக்கு, கொஞ்சம் வேகத்தக் குறைச்சுக்கோயேன்.''

தந்தை தயங்கிக் கொண்டே சொல்வதைப் போலத் தோன்ற, ''என்னப்பா நீங்க அத சொல்லக்கூட உங்களுக்கு உரிமையில்லையா?'' என்று குறைபட்டுக் கொண்டான் மகன்.

''அது சரிதான், எங்கேயோ வெளிய கிளம்பிட்ட போலிருக்கு.''

''ஆமாம்பா ஒரு மணி நேரத்துல வந்துடுவேன், நீங்க சாப்டாச்சா?''



''ஆமாம் பின்ன கல்யாணத்துக்குப் போய்ட்டு சாப்பிடாம விடுவாங்களா, நான் வயிறு நிறைய சாப்டாச்சு.''

''நீ வந்ததுக்கப்புறமே எனக்கு எவ்வளவோ நிம்மதியா இருக்கு சிவா, இப்பவே பிஸினஸ் நல்லாப் போக ஆரம்பிச்சுடுச்சுப்பா உன்னால.''

''இதெல்லாம் சுத்தமாப் பத்தாதுப்பா, இன்னும் சேஞ்சஸ் நிறைய செய்ய வேண்டியிருக்கு. இத்தன நாளா நடந்த வேலைக்கு இப்ப இருக்கறவங்கள்ள பாதிப்பேர் இருந்திருந்தாக்கூடப் போதும், இனியும் ஸ்டாஃப்ஸக் குறைக்க வேண்டாம் வேலைய அதிகமாக்கிக்கலாம்.''

''நீ எது செஞ்சாலும் சரியாதான் இருக்கும் சிவா. செலவெல்லாம் கட்டுபடியாகாமே பேங்க் பேலன்ஸ் சுத்தமாத் தீந்ததுப்பா, அதுக்கும் மேலயும் கடன் வேற நிறைய இருக்கு.''

''போனதையெல்லாம் நினைச்சுக் கவலைப்படாதீங்க, இனிமேல் எல்லாத்தையும் சரி பண்ணிக்கலாம்'' என்று தந்தைக்குத் தைரியம் சொன்னான் மகன்.

உண்மையிலேயே இப்பொழுது தொழில் இருக்கும் நிலையைப் பார்த்தால், போகிற விலைக்கு விற்று விட்டால் என்னவென்று கூடத் தோன்றியது.

அந்த அளவிற்குத் தொழில் படு நஷ்டத்தில் போய்க் கொண்டிருந்தது.

வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கும் தந்தையின் குணத்திற்கு, இன்றைய கால கட்டத்தின் போட்டிகளுக்கிடையே தொழில் நடத்துவது சுத்தமாக முடியாத காரியம் என்று சிவானந்தனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

கிட்டத்தட்ட படுத்து விட்ட தொழிலை இனி லாப கரமாகக் கொண்டு செல்வதென்பது மிக மிக சிரமமான ஒன்றே.

ஆனால் அதைத்தானே வெளிப்படையாகக் காட்டிக் கொண்டால் ஏற்கனவே உள்ளுக்குள் கலங்கிக் கொண்டிருக்கும் தந்தை மேலும் மனமுடைந்து போவாரென்று அதைத் தனக்குள்ளேயே வைத்துக் கொண்டான் சிவானந்தன்.

வேறு யாரும் என்றால் இனி நிமிர்வுக்கு வழியே இல்லையென்று தான் சொல்லியிருப்பார்கள், ஆனால் அந்த இடத்தில் தன்னை இருத்திப் பார்த்த சிவானந்தன் தான் எப்பாடு பட்டாயினும் தொழிலைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்து லாபகரமாகவும் கொண்டு சென்றாக வேண்டுமென்று மனதிற்குள் உறுதி கொண்டான்.

''நீ இருக்கும்போது எனக்கென்னப்பா கவல, ஆனா தொழிலப் பாத்துக்கறதோட நீயும் உன் ஹெல்த்தையும் நல்லாப் பாத்துக்கோ.''

''எனக்கென்னப்பா இந்த வயசுல?''

''இல்ல பாக்க ரொம்பவும் மெலிஞ்சு போன மாதிரி தெரியற, அதான் சொல்றேன்.''

''அதெல்லாமில்லப்பா, ஆனாலும் நீங்க சொல்றத கவனத்துல வெச்சுக்கறேன்.''

''சரிப்பா அப்ப நான் கிளம்பறேன்'' என்று தந்தையிடம் சொல்லி விட்டுக் கிளம்பினான் சிவானந்தன்.



# 6



எப்பொழுதும் வேலை நேரம் ஆரம்பிப்பதற்கு பத்து நிமிடம் முன்னரே வந்து விடுவது ஸ்ருதியின் வழக்கம்.

அன்று ஷோரூமிற்குள் செல்லும் போதே சிவானந்தன் இருக்க, விஷ் செய்து விட்டுத் தனது வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள் ஸ்ருதி.

'போன வாரம் தான் வாங்கிச் சென்றேன். ஆனால் அதற்குள் எரிய மாட்டேன் என்கிறது' என்று அவர்களது தயாரிப்பான ஒரு எமர்ஜென்ஸி லைட்டை எடுத்துக் கொண்டு காலையிலேயே முதல் ஆளாக வந்து நின்றார் ஒரு வாடிக்கையாளர்.

வாடிக்கையாளரை உபசரித்து அமரச் சொல்லிவிட்டுத் தானே அந்த எமர்ஜன்ஸி லைட்டை வாங்கிப் பார்க்க ஆரம்பித்தான் சிவானந்தன்.

பிரச்சனை உள்ளே தான் என்பதை உறுதி செய்து கொண்ட பின், தானே ஒரு ஸ்க்ரூ ட்ரைவரை எடுத்து அதைத் திறக்கவும் ஆரம்பித்து விட்டான்.

சிவானந்தனின் செய்கையில் அங்கிருந்த அனைவருமே ஸ்தம்பித்து நிற்க, சூப்பர்வைஸர் ராஜாராமின் முகம் பயத்தில் வெளுத்து விட்டது வெளிப்படையாகவே தெரிந்தது.

லைட்டைத் திறந்து பார்த்த சிவானந்தன் நேராக அதை உள்ளே சர்வீஸ் அறைக்கு எடுத்துச் சென்று,

ஐந்தே நிமிடங்களில் அதை மீண்டும் கொண்டு வந்து கஸ்டமரிடமும் கொடுத்திருந்தான்.

''ஒரு சின்ன லூஸ் கான்டேக்ட் தான் இப்ப சரியா யிடுச்சு, இத பெரிசா எடுத்துக்க வேண்டாம்'' என்ற வேண்டுதலோடு.

சிவானந்தனின் நல்ல அணுகுமுறையில் சற்று கோபமாக வந்த அந்த வயதான வாடிக்கையாளர், ''அத னாலென்னங்க தம்பி உங்க தயாரிப்புகள் எல்லாமே நல்லா இருக்கும்னு நம்பித்தான நாங்க எப்பவுமே உங்கள்தயே வாங்கிட்டிருக்கோம்'' என்று தனது சரியாகி விட்ட லைட்டுடன் திருப்தியுடன் திரும்பியும் சென்றார்.

சிறிது நேரத்தில் சூப்பர்வைஸர் ராஜாராமைத் தனது அறைக்கு அழைத்தான் சிவானந்தன்.

உள்ளே சென்றவர் அரை மணி நேரம் கழித்துத் திரும்பி வர, அவரது முகத்தைப் பார்க்கப் பேயறைந்தாற் போல இருந்தது.

வெகு நேரமாகியும் பழைய நிலைக்குத் திரும்பா மலே பழைய ஃபைல்களைப் புரட்டிக் கொண்டிருந்தவ ரிடம், யாரும் எதையும் தூண்டித் துருவிக் கேட்டுக் கொள்ளவில்லை.

அவரைத் தொடர்ந்து ஒவ்வொருவராக மற்றவர்களும் சிவானந்தனின் அறைக்குச் சென்று விட்டு வர, அனை வருடைய முகங்களையும் பார்த்த ஸ்ருதிக்கு ஏதோ பிரச்சினையென்பது மட்டும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

மறுநாளும் காலையிலேயே வந்து விட்டிருந்த சிவானந்தன், கடையிலும், ஃபேக்டரியிலும் இருந்த சூப்பர்வைஸர்களை அழைத்துப் பேசினான்.



பூர்த்தியாகாமல் ஒரு சிறு வேலையிருந்தாலும் அதற்கு ஒரு லிஸ்ட் தயாரித்து அது இன்னும் ஒரு மணி நேரத்திற் குள் தனது டேபிளுக்கு வந்தாக வேண்டுமென்றான்.

தங்களது சிறிய எம்.டி.யின் கட்டளையில், அனை வரும் அந்த அட்டவணையைத் தயாரிப்பதற்காகப் பதறிக் கொண்டு ஓடி வந்தனர்.

ஆனால் சிவானந்தன் சொல்லியிருந்த அந்த ஒரு மணி நேரம் முடிந்து விட்டிருக்க, அந்த அட்டவணை தயாரிக்கும் வேலை மட்டும் பாதியளவு கூட முடிந் திருக்கவில்லை.

என்ன செய்வதென்று தெரியாமல் கைகளைப் பிசைந்தபடி அனைவரும் ஒருவருக்கொருவர் பயத்துடன் பார்த்துக் கொண்டனர்.

மேலும் சில நிமிடங்களில் மீண்டும் சிவானந்தனே அவர்கள் அனைவரையும் அழைத்துப் பேசினான்.

எவ்வளவு நேரமானாலும் சரி அன்று முழுவதும் இருந்து பெண்டிங் லிஸ்டை எடுத்துக் கொடுத்த பிறகே, அனைவரும் வீட்டுக்குச் செல்ல வேண்டுமென்று சொல்லியனுப்பினான்.

தவிர்க்க முடியாத வேலைகளை மட்டும் பார்த்துக் கொண்டு, அன்று முழுவதும் தீவிரமாக வேலை செய்து தங்களது சிறிய எம்.டி. கேட்டிருந்த லிஸ்டை ஒரு வழி யாக அனைவரும் சேர்ந்து தயார் செய்து முடித்தார்கள்.

மறுநாள் காலையில் வந்த உடனேயே, தானே ஃபேக் டரிக்குக் கிளம்பிச் சென்று அனைத்து பெண்டிங் வேலை களையும் பார்க்க ஆரம்பித்தான் சிவானந்தன்.

மற்ற அனைவருமே சிவானந்தன் சொல்லியிருந்த மற்ற வேலைகளை முடிப்பதற்காக மும்முரமாக வேலை செய்து கொண்டிருக்க, செய்வதற்கு முக்கியமான வேலையென்று எதுவுமில்லாத ஸ்ருதியை தனது உதவிக்கு அழைத்துக் கொண்டான் சிவானந்தன்.

பழுதென்று வந்திருந்த எலக்ட்ரானிக் சாதனங்கள், பழுது சரியாகி விட்டதென்று தெரிவிக்கப்பட்ட பின்னரும் வாடிக்கையாளர்களால் திருப்பி எடுத்துச் செல்லப் படாதவை, எலக்ட்ரானிக்ஸ் ஸ்பேர்ஸ் இல்லாததால் அல்லது கிடைக்காததால் வேலை பூர்த்தியாகாமலிருந்த சாதனங்கள், என்ன பழுதென்றே கண்டுபிடிக்கப்படாமல் அதாவது அங்கிருப்பவர்களால் சரி செய்ய முடியாதவை.

இப்படி இன்னும் எத்தனையோ பிரச்சனைகளால் எலக்ட்ரானிக் சாதனங்கள் மலைபோலக் குவிந்து கிடந்தன.

அவையனைத்தையும் ஒட்டு மொத்தமாகப் பார்த்த ஸ்ருதி மலைத்துப் போய் நின்று விட, அங்கிருந்த அனைவரையும் அழைத்துப் பிரச்சனை வாரியாக அவற்றைப் பிரிக்க ஆரம்பித்திருந்தான் சிவானந்தன்.

அவற்றில் சர்வீஸ் செய்யப்பட வேண்டியவையே முக்கால் பங்கு இருக்க, அதில் ஒவ்வொன்றாக எடுத்து சர்வீஸ் செய்யவும் ஆரம்பித்தான்.

உடனிருந்த ஸ்ருதி அவன் கேட்பதையெல்லாம் எடுத்துக் கொடுத்துக் கொண்டே இருக்க, அன்று ஒரு நாளிலேயே பாதி வேலைகளை முடித்திருந்தான் சிவானந்தன்.

முழு வேலைகளையும் அவனே செய்ய, அவன் கேட்பதைக் குறிப்பறிந்து எடுத்துக் கொடுத்துக் கொண்டிருப்பதே ஸ்ருதிக்கு மிகப் பெரிய சவாலாக இருந்தது.



மேலும் மூன்று நாட்களும் அப்படியே கழிய, நான்காவது நாள் மதிய வேளையில் தொன்னூறு சதவிகித வேலைகள் முற்றுப் பெற்றிருந்தன.

எம்.டி.யே நேரடியாக வேலையில் இறங்கி விட்டிருந்ததில், அங்கிருந்த மற்றவர்களும் முழு ஈடுபாட்டுடனும், பயத்துடனும் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

தொடர்ந்து சில நாட்களாக சிவானந்தனின் திறமையை அருகிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த ஸ்ருதிக்கு அவன் மீது பெருமதிப்பு ஏற்பட்டிருந்தது.

தொழிலைப் பற்றி நூறு சதவிகிதமும் முழுமையாகத் தெரியாமல் நிச்சயமாக நான்கு நாட்களாக அவன் செய்யும் வேலைகள் சாத்தியப்படாது என்பதில் ஸ்ருதிக்கு ஆயிரத்தில் ஒரு பங்காகக் கூட சந்தேகமிருக்கவில்லை.

அவன் வருகையை நினைத்து அனைவரும் பயப்பட்டதற்கான காரணமும் புரிந்தது.

எது எப்படியோ இரண்டு வார்த்தைகள் சிரித்துப் பேசினால் குறைந்தா போய் விடுவான் என்று ஸ்ருதியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அதோடு அவன் வேண்டுமென்றே பேசாமல் இருக்கவில்லை என்பதும் புரியவே செய்தது.

இனி மதிய உணவை முடித்துக் கொண்டு மீதி வேலையைப் பார்க்கலாமென்று சிவானந்தன் சொல்ல, சரியென்று அங்கிருந்து நகர்ந்தவளை மீண்டும் அவனே அழைத்தான்.

''ஸார்.''

''எங்கூட உக்காந்து சாப்டாக்கூட நான் பங்கெதுவும் கேக்க மாட்டேன்'' என்று ஸ்ருதியைப் பார்த்தான் சிவானந்தன்.

''அது சரிதான் ஸார், என் சாப்பாடெல்லாம் உங்களுக் குப் புடிக்குமா? அதோட நான் இப்ப இருக்கற நிலைல நீங்கதான் எனக்குப் பங்கு தரணும், ஏன்னா என் லஞ்ச் பேக் கடைல இருக்கு.''

''நீ இவ்வளவு நீளமாக்கூடப் பேசுவியா!''

''அதெல்லாம்.''

''ஏன் கேக்கறேன்னா பாக்க நல்லா இருக்கற உன்ன மாதிரி பொண்ணுங்க பின்னாடி நாக்கத் தொங்கப் போட் டுட்டு அலையறது தான எங்கள மாதிரி ஆளுங்களோட வேல.''

''அது...''

''அதுலயும் என்ன மாதிரி...''

''ஸாரி ஸார், நான் அன்னைக்கு அப்பிடிப் பேசினது தப்புதான்.''

''அடடா இப்பிடி விட்டுக் குடுத்துட்டியே, நீ சண்டப் போடுவேன்னு நான் ஆவலா எதிர்பார்த்தேன்.''

..................

''என்ன எதுவும் பேச மாட்டேங்கற? ஏன்னா எனக் கெல்லாம் உள்ள ஒன்ன வெச்சுக்கிட்டு வெளிய ஒன்னப் பேசத் தெரியாது'' என்றான் சிவானந்தன்.

''ஓ அப்ப எங்களுக்கெல்லாம் தொழிலே அதுதான்னு சொல்றீங்களா?''

''அச்சச்சோ நானில்லப்பா'' என்ற சிவானந்தன் பயந் தவன் போல நடிக்க, ''ஆமாமா ஸார் உங்களுக்கு ரொம் பத்தான் பயம் அதுவும் என்னப் பாத்து'' என்று நன்றா கவே சிரித்தாள் ஸ்ருதி.



அதற்குப் பிறகு சந்தர்ப்பம் கிடைத்தால் கேலியாக ஒருவருக்கொருவர் காலை வாரி விட்டுச் சிரிப்பது வழக்கமாயிற்று.

தொடர்ந்து தொழிலில் நிறைய மாற்றங்களைக் கொண்டு வந்தான் சிவானந்தன்.

அந்த மாற்றங்களினால் படுத்து விட்டிருந்த தொழில் எழுந்து அமர்ந்து மெதுவாக நடக்கவும் ஆரம்பித்தது.

# 7



''ஸ்ருதி.''

''என்னமா?''

''ஏம்மா, ஏன் இப்படி சன்டே காலைல டல்லா உக் காந்துட்ட?''

விடுமுறை நாளின் வழக்கமான உற்சாகமில்லாமல் எதையோ வெறித்தபடி அமர்ந்திருந்த மகளைப் பார்க்கக் காவேரிக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

''ஸ்ருதி.''

ஏதோ கனவிலிருந்து விடுபட்டவள் போல விழித்த மகளிடம், ''என்னமா?'' என்று அருகில் சென்று அமர்ந் தார்.

''ஒண்ணுமில்லமா நைட் ஒரு கனவு கண்டேன்.''

''என்ன கனவு?''

''அதுதான் எவ்வளவு யோசிச்சும் ஞாபகமே வரமாட்டேங்குது. ஆனா ரொம்ப பயங்கரமா இருந்தது.''

''இதுக்குத்தான் த்ரில் நாவல்ஸையெல்லாம் நைட் தூங்கப் போகும்போது படிக்காதன்னு சொல்றது'' என்று குறைபட்டுக் கொண்ட தாயின் கழுத்தை ''ஓகே. இனி மேல் இல்ல மம்மி'' என்று கட்டிக் கொண்டு செல்லம் கொண்டாடினாள் பெண்.

''சரிசரி டிபன் சாப்பிட வாம்மா.

''என்னமா எழுந்துட்டிங்க?''

''ஆமாம்மா, லீவு கிடைக்கறதே ஒரு நாள். போய் வேலையப் பாக்கறேன்.''

காவேரி எழுந்து செல்ல, ''சரிமா நான் குளிச்சுட்டு வந்து சாப்புட்றேன்'' என்று ஸ்ருதியும் குளிப்பதற்கு சென்றாள்.

என்னதான் தாயிடம் சமாளித்து விட்டாலும் தனிமையில் ஸ்ருதியின் மனம் மீண்டும் தவிக்க ஆரம்பித்தது.

அன்று தனது ஸ்கூட்டியைப் பார்க் செய்து விட்டு ஸ்ருதி உள்ளே வர, வழியிலேயே அவளை எதிர்கொண்டான் சிவானந்தன்.

''குட்மார்னிங் ஸார்.''

''வெரி குட்மார்னிங் ஸ்ருதி, என்ன இன்னைக்கு வழக்கத்த விடவும் கூட பத்து நிமிஷம் முன்னாடியே வந்துட்ட?''

''ஆமா ஸார், மம்மி எட்டு மணிக்கே வீட்ட விட்டுக் கிளம்பிடுவாங்க. சரி நான் மட்டும் எதுக்கு வீட்ல போரடிச்சுட்டு உக்காந்திருக்கணும்னுதான் நேரத்துலையே வந்துட்றது.''



''ஓ, நீ தினமும் நேரத்துலயே வர்றதுக்கு இதுதான் காரணமா? நான் என்னடான்னா சின்ஸியாரிட்டி, பங்க்சுவாலிட்டின்னு தப்புத் தப்பா நினைச்சுட்டிருக்கேன்.''

சிரிப்பு வர அடக்கிக் கொண்டு, ''நீங்க சொல்ற காரணங்களும் கூடத்தான்'' என்றாள் ஸ்ருதி.

''சரி நம்பிக்கறேன்.''

''அட ஆமா ஸார், இல்லேன்னா மட்டும் இந்த உலகத்துல டைம் பாஸ் பண்றதுக்கு வழியா இல்ல?''

''அது சரிதான்'' என்றவன், ''ஏன் டல்லா இருக்க?'' என்று கேட்டான்.

''இல்லையே, நான் நல்லாதான் இருக்கேன்.''

இருவரும் பேசிக்கொண்டே கடையை நெருங்கியிருக்க, தான் சொன்னதை அவன் நம்பவில்லையென்பதை அவனது சிரிப்புக் காட்டிக் கொடுத்தது.

அதற்குள் கடைக்குள் சென்றிருந்தான் சிவானந்தன்.

அனைவருக்கும் கொடுத்திருந்ததைப் போல சிவானந்தன் தனக்கும் ஒரு வாரத்திற்குள் முடித்தாக வேண்டுமென்று ஒரு வேலையைக் கொடுத்திருக்க, பிறகு அதில் மூழ்கிப் போனாள் ஸ்ருதி.

வாடிக்கையாளர்களிடமிருந்து நிறைய அதிருப்திகள் வந்தபடியே இருக்க, அடுத்தபடியாக பேக்டரியில் உற்பத்தியின் பக்கம் தனது கவனத்தை செலுத்த ஆரம்பித்து விட்டான் சிவானந்தன்.

எப்பொழுதுமே தானுண்டு, தன் வேலையுண்டு என்றிருக்கும் ஸ்ருதிக்கு, தனக்கு வேலை அதிகமாக இருந்ததில் சற்று நிம்மதியாகக் கூட இருந்தது.

மேலும் ஒரு வாரம் கழிந்திருக்க, அன்று முழுவதும் சிவானந்தன் கடையிலேயே இருந்தான்.

இனி இங்கு என்ன மாற்றம் வரப்போகிறதோ என்று அனைவரும் சற்றுப் பயத்துடன் எதிர்பார்க்க ஆரம்பித்தார்கள்.

அன்று மாலை வேலை முடித்துக் கிளம்பப் போன ஸ்ருதி, இண்டர்காம் வர எடுத்துப் பேசினாள்.

சிவானந்தன் தான் பேசினான், கிளம்புவதற்கு முன்னர் தன்னை வந்து பார்த்து விட்டுப் போகச் சொன்னான்.

தனது அறைக்குள் வந்திருந்த ஸ்ருதியை, வரவேற்றான் சிவானந்தன்.

''என்ன கிளம்பியாச்சா?''

''ஆமா ஸார்.''

''உக்காரு.''

''பரவாயில்ல சொல்லுங்க ஸார்.''

''அதுக்கு முதல்ல நீ உக்காரணும்.''

அவனது குரலில் உடனே அமர்ந்து விட்டாள் ஸ்ருதி.

பின்புறம் சாய்ந்தவாறு ஆசுவாசமாக அமர்ந்திருந்த சிவானந்தன், தனக்கு முன்னால் அமர்ந்திருந்தவளைப் பார்த்தான்.

''சொல்லுங்க ஸார்.''

''உனக்கு என்ன பிரச்சனை?''

''ஸார்.''

''உனக்கு என்ன பிரச்சனைன்னு கேட்டேன், சில நாளாவே நீ பார்க்கவே வித்யாசமா இருக்க.''



''அதெல்லாமில்ல.''

தான் பதில் சொல்லாததைப் போலப் பாவித்து தன முகத்தை சிவானந்தன் பார்க்க, அதற்கு மேல் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விழித்தாள் ஸ்ருதி.

''ம் சொல்லு.''

''நீங்க கேக்கறீங்கன்றதுக்காக இல்லாதத இருக்குன்னு சொல்ல முடியுமா ஸார்?''

''நல்லாப் பேசற, ஆனா உண்மையப் பேச மாட்டியா?''

''உம்மேல எனக்கென்ன அக்கறைன்னு நீ நினைக்கலாம், ஆனா எந்தக் காரணத்துக்காகவும் என் வேலைல குறைகள் வர்றத நான் விரும்பல.''

...............

''நீ கண்டிப்பா எங்கிட்ட சொல்லியாகணுங்கற அவசியமெல்லாம் எதுவுமில்ல, டியூட்டி டைம்ல உன் கவனம் சிதறாம பாத்துக்கோ அவ்வளவுதான்.

''ஒகே. ஸார்.''

''சரி நீ கிளம்பு.''

''தேங்க்யூ ஸார்'' என்று சொல்லிவிட்டு வெளியே வந்திருந்தாள் ஸ்ருதி.

# 8



''அப்பா.''

''வா சிவா, வெளிய கொஞ்சம் வேலையிருக்குன்னு சொல்லிட்டிருந்த. என்னால வந்து உன்ன ரிலீவ் பண்ணவே முடியலப்பா.''

''பரவாயில்லப்பா உங்களால முடியும்போது வாங்க, எனக்கும் பேக்டரில வேலை நிறைய இருக்கு.''

''வேற எதுவா இருந்தாலும், நீ மனசுக்குள்ள வெச்சுக் காம சொல்லு சிவா.''

''அதையேதான் நானும் உங்ககிட்ட சொல்றேன்'' என்றான் மகன்.

''அப்புறம் கண்ணா, ஸ்ரீநிதி நம்மகிட்ட வேலைக்கு வர்றேங்கறா.''

............

''என்னப்பா யோசிக்கற, வேண்டாமா?''

''யாரது ஸ்ரீநிதி?''

''என்னப்பா நீ?'' என்று சிரித்த தந்தையைப் பார்த் தான் சிவானந்தன்.

''அவ என்னடான்னா உன்னப் பத்தி எல்லாமே தெரிஞ்சு வெச்சிருக்கா, நீ அவள யாருன்னு கேக்கற.''

''எப்பிருந்து வர்றதா சொன்னா?''

''உனக்கு அவள ஞாபகம் வந்துடுச்சா சிவா?''

''லோகநாதன் மாமாவோட பொண்ணத்தான சொல் றீங்க?''

''ஆமா அவளே தான், ஓ நாந்தான் ரொம்பவும் சுத்தி வளைச்சு சொல்லிட்டேன் போலிருக்கு. நீயெல்லாம் நல்லா ஞாபகம் வெச்சுட்டிருக்க'' என்றார் சதாசிவம்.



''அவளவிட்டா நாளையிலிருந்தே வந்துடுவா போலி ருக்கு சிவா, சொல்லு நான் என்ன சொல்லட்டும்?''

''அவ வேலைக்கு வர வேண்டிய அவசியமென்ன?''

''வீட்ல போரடிக்குதாம், பொழுது போகணுங்கறா.''

'பொழுதைக் கழிக்க வேலைக்கு வருவதா? ஏற்கனவே தொழில் போகும் போக்கில் இந்த மாதிரி ஆட்களை ஊக்கப்படுத்தினால், உள்ளதும் கெட்டு விடாதா?'

''என்னப்பா யோசிக்கற?''

''பிஸினஸ் இப்பதாம்பா மெதுவா டெவலப் ஆக ஆரம்பிச்சிருக்கு, இப்ப நாம இருக்கற நிலமைல புதுசா யாரையும் வேலைக்கு எடுக்கறதப் பத்தி நினைச்சுக் கூடப் பாக்க முடியாது.''

''வேலைக்குன்னு ஏம்பா நினைக்கற? உரிமையா ஃபேக்டரிக்கு வந்துட்டுப் போகட்டும். நாமளும் சம் பளமா இல்லாம வேற ஏதாவது செஞ்சு குடுத்துட்டாப் போகுது.''

இந்தத் தந்தை எப்பொழுது தான் மாறுவார் என்று சிவானந்தனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அதிலும் இருக்கிற ஆட்களையே குறைத்தாக வேண் டிய இந்த நேரத்தில்.

''என்னப்பா எப்பிருந்து வரச் சொல்லட்டும்?''

''அது அவங்க இஷ்டம்பா, எப்ப வேணும்னாலும் வரட்டும்'' என்ற மகனின் குரலில் இருந்த வித்யாசம் சதாசிவத்திற்கு வெளிப்படையாகவே தெரிந்தது.

# 9



''ஹாய் மாமா.''

''வாம்மா, நீ மட்டும் தான் வந்தியா?''

''ஆமா, எங்க யாரையும் காணோம்?''

''யாரு சிவாவத் தான கேக்கற? அவன் கொஞ்சம் முன்னாடி தான் வெளிய கிளம்பிப் போனான். மத்தபடி இந்த வீட்ல அதிகப்படியா இருக்கற ஒரே ஆள் வேலைக் காரப் பாட்டி, அவங்க ஆறு மணிக்கே கிளம்பிப் போய் டுவாங்க.''

''அடடா, சிவா எங்கன்னு நான் நேரடியாவே கேட்டிருக்கலாம் போலிருக்கே'' என்று சிரித்தவளை அமரச் சொன்னார் சதாசிவம்.

''நானும் போன் பண்ணிட்டே வந்திருக்கலாம், ஸ்வீட் சர்ப்ரைஸா இருக்கட்டும்னு நினைச்சு வந்தது தப்பாப் போயிடுச்சு'' என்றாள் அந்த ஸ்ரீநிதி.

''வேணும்னா மொபைல்ல கூப்பிடு ஸ்ரீநிதி, அவன் கிளம்பிப் போய் பத்து நிமிஷந்தான் ஆச்சு.''

மகன் வேலையை விட்டு விட்டுத் திரும்பி வருவது சந்தேகம் தானென்றாலும், சும்மா ஒரு பேச்சுக்காக சொன்னார் சதாசிவம்.

''அதெல்லாம் வேண்டாம், எனக்கும் வேலையிருக்கு போய்ட்டு காலைல வர்றேன்'' என்று சொல்லி விட்டுக் கிளம்பினாள் அவரது தங்கை மகள் ஸ்ரீநிதி.



சொன்னது போல மறுநாள் காலையிலேயே வந்து விட்ட ஸ்ரீநிதியை ஹாலில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த சதாசிவம் வரவேற்றார்.

''வாடாம்மா.''

''இப்பவாவது ஸார் இருக்காரா மாமா?'' என்று நக்க லாகக் கேட்டவளிடம், ''ஆமாம்மா அவன் ரூம்ல கிளம் பிட்டிருப்பான்'' என்றார்.

''நானே போய்ப் பாத்துக்கறேன்'' என்று எழுந்து சிவானந்தனின் அறைக்கு வந்தாள் ஸ்ரீநிதி.

கதவைத் தட்டிவிட்டு சில வினாடிகளில் உள்ளே வந்தவளை சிவானந்தன் திரும்பிப் பார்க்க, அறைக்குள் வந்திருந்த ஸ்ரீநிதியும் அவனைப் பார்த்து ஆச்சரியத் துடன் கண்களை விரித்தாள்.

''அட சிவா நிஜமாவே நீங்கதானா? ஒல்லியா முருங் கக்காய்க்குக் கையும் காலும் முளைச்ச மாதிரி இருந்த நீங்களா இவ்வளவு ஸ்மார்ட் ஆயிட்டிங்க?''

''நீ யாரு? நேரா என் ரூமுக்கு வந்து என்னையே கேள்வி கேக்கற?''

''என்னது நிஜமாவே உங்களுக்கு என்னத் தெரிய லையா!'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் ஸ்ரீநிதி.

யோசிப்பது போல சில வினாடிகள் பாவனை செய்த சிவானந்தன், ''ஓ கோமளவள்ளி'' என்றான்.

''எம்பேர் ஒண்ணும் அதில்ல, எனக்கு என் பேரண்ட்ஸ் அழகா பேர் வெச்சிருக்காங்க.''

''அது சரிதான், பேராவது அழகா இருக்கட்டுமேன்னு வெச்சிருப்பாங்க.''

''ஹலோ என்ன நக்கலா? நிஜமா என்னத் தெரியல உங்களுக்கு?''

''ஓ, இப்ப ஞாபகம் வந்துடுச்சு'' என்று சிவானந்தன் சொல்ல, ''அநான, எங்க என் பேரச் சொல்லுங்க பாக்க லாம்'' என்றாள் ஸ்ரீநிதி.

''உம்பேர் கோமளவள்ளியே தான். உனக்கு சின்ன வயசா இருக்கும்போது ஸ்கூல்ல லீவ் விடும்போதெல் லாம் இங்க வருவியே, எப்பப் பாத்தாலும் மூக்க ஒழுக் கிட்டு உங்க அம்மா முந்தானையப் பிடிச்சுட்டே சுத்திட் டிருப்பியே அந்தப் பொண்ணு தான நீ?''

''வ்வே சான்ஸே இல்ல, நானொன்னும் அப்படியெல் லாம் இருந்ததே இல்ல.''

''ஓ, அதையெல்லாத்தையும் விட்டுட்டு இப்பப் பொய் பேச ஆரம்பிச்சுட்டயாக்கும்?''

''நானொன்னும் பொய் பேசல, எம்பேர் ஸ்ரீநிதி.''

''சரி.''

''என்ன சரி, நடிச்சதெல்லாம் போதும் நடப்புக்கு வாங்க'' என்றாள் ஸ்ரீநிதி.

''யாரு நானா? ஆமா எனக்கொரு சந்தேகம்.''.

''என்ன?''

''முகத்துக்கு சர்ஜரி ஏதாவது பண்ணியிருக்கயோ, ஏன்னா பாக்கக் கொஞ்சம் நல்லார்க்க.''

''ஹலோ மிஸ்டர் சிவானந்தன் நான் அழகா இருக்கேன்னு நீங்க நேரடியாவே கூட சொல்லியிருக்கலாம். ஆனா நானெல்லாம் உங்கள மாதிரி சுத்தி வளைக்க மாட்டேன்பா, நிஜமாவே நீங்க ரொம்ப ஸ்மார்ட்டா இருக்கீங்க.''



''ஏதோ அப்பப்ப உண்மையும் பேசற, ஆமா வீட்ல அத்த மாமா எல்லாரும் எப்படியிருக்காங்க?''

''ரொம்ப நல்லார்க்காங்க.''

''என்ன காலைலயே விஜயம்?''

''நான் இன்னைலிருந்து ஃபேக்டரிக்கு வரப் போறேன், நான் மாமாகிட்ட ஏற்கனவே எல்லாம் சொல்லியிருந் தேனே அவரு உங்ககிட்ட ஒன்னுமே சொல்லலையா?''

''இன்னைக்கே வருவேன்னு சொல்லல, சரி வா பெண்டிங் வொர்க் நிறைய இருக்கு யாரு தலைலடா கட்றதுன்னு யோசிச்சுட்டிருந்தேன்.''

''ரொம்ப எக்ஸ்பெக்ட் பண்ண வேண்டாம் சிவா, ஆனா என்னால முடிஞ்ச அளவுக்கு கண்டிப்பா செய் வேன்'' என்று சொல்லிக் கொண்டே சிவானந்தனோடு வெளியே வந்தாள் ஸ்ரீநிதி.

## 10



வேலைகளை செய்து முடிக்க சிவானந்தன் தனக்குக் கொடுத்திருந்த ஒரு வாரத்தின் கடைசி நாள் அன்று.

மீதியிருக்கும் வேலைகளை அன்று மதியத்திற்குள் ளாக முடித்து விட எண்ணி, காலையில் வழக்கத்தை விட வும் அரை மணி நேரம் முன்னதாகவே வந்து வேலையை ஆரம்பித்தாள் ஸ்ருதி.

வேலையை ஆரம்பிக்க மட்டும் தான் அவளால் முடிந்தது.

அன்று எம்.டி. சிவானந்தனோடு வந்திருந்த அந்தப் பெண் அனைவரையும் மிரட்டித் தள்ளிக் கொண்டிருக்க, அதிலிருந்து ஸ்ருதியும் தப்பவில்லை.

அதிலும் ஸ்ருதி தான் நிறைய மாட்டிக் கொண்டாள் எனலாம்.

அந்த அளவிற்கு அது என்ன? இதை ஏன் இப்படிச் செய்கிறாய்? ஏன் ஜம்பமாக உட்கார்ந்த இடத்திலேயே வேலை செய்து கொண்டிருக்கிறாய்? என்று கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தாள்.

தொண்ணூற்று ஒன்பது சதவிகித வேலைகளை முடித்திருந்த ஸ்ருதிக்கு அதுவரை தான் எடுத்திருந்த குறிப்புகளனைத்தையும் மற்றுமொரு முறை சரி பார்த்து விட எண்ணி முழு கவனத்தையும் செலுத்தி வேலை செய்து கொண்டிருந்த அந்த நேரத்தில், அந்த ஸ்ரீநிதி யின் தொணதொணப் பேச்சு மிகுந்த எரிச்சலை ஊட்டிக் கொண்டிருந்தது.

ஆனாலும் முயன்று அதை வெளிக்காட்டிக் கொள் ளாமல், சிரித்த முகத்துடன் பதில் சொல்லிக் கொண்டே தனது வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மதியத்திற்கு முன்னரே சிவானந்தன் வெளியே கிளம்பிச் சென்றிருக்க, அந்த ஸ்ரீநிதி மேலும் சற்று அதிகப்படியாகவே உரிமையெடுத்துக் கொண்டாள்.

ஒரு வழியாக அந்த நச்சரிப்புக்கு இடையேயும் தனது வேலையை முடித்தவள், அந்தக் குறிப்புகள் அனைத் தையும் ஒரு ஃபைலில் போட்டுத் தயாராக எடுத்து வைத் தாள்.

நல்லவேளையாக சிவானந்தன் வருவதற்குள்ளேயே ஸ்ரீநிதி கிளம்பி விட்டிருக்க, அவன் அழைப்பதற்கு



முன்னரே தயாராக இருந்த ஃபைலை அவனது டேபி ளுக்கு எடுத்துச் சென்றாள் ஸ்ருதி.

கடந்த ஒரு வாரமாக சில வினாடிகளைக் கூட வீணாக் காது சிரத்தையுடன் அந்த வேலையை முடித்திருந்தவ ளுக்கு, அவன் என்ன சொல்லப் போகிறானோ என்ற பயத்தில் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது.

ஏனென்றால் சிவானந்தனின் வாயிலிருந்து ஒரு பாராட்டைப் பெறுவது எத்தனை சிரமமென்பதை அவனை அறிந்திருந்த இத்தனை நாட்களில் ஸ்ருதியும் நன்கு அறிந்திருந்தாள்.

சிவானந்தன் ஸ்ருதிக்கு கொடுத்திருந்த வேலையும் ஒன்றும் சாதாரணமானதல்ல.

கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தங்களது தயாரிப்புகள் ஒவ்வொன்றும் எத்தனை முறை பழுது பார்க்கப்படுவ தற்காக வந்திருக்கின்றன என்ன பழுது, பழுது முடிந்து எத்தனை நாட்கள் கழித்துத் திருப்பிக் கொடுக்கப்பட்டன, பழுது யாரால் சரி செய்யப்பட்டது இப்படி இன்னும் நிறைய விவரங்களை ஒரு அட்டவணையாக எடுத்துத் தரச் சொல்லியிருந்தான் சிவானந்தன்.

அதைத் தான் கேட்டிருந்ததை விடப் பிரமாதமாக ஸ்ருதி எடுத்துக் கொடுத்திருக்க, மனதாரப் பாராட்டினான்.

ஒரே சாதனம் ஐந்து முறை வந்திருந்தால் ஒவ்வொரு முறை வந்திருந்த பொழுதும் அது எத்தனையாவது முறை என்பதை அதற்கும் தனியாக ஒரு கட்டம் பிரித்து குறிப்பிட்டிருந்தாள்.

அவனே கேட்டிருக்காத இப்படி இன்னும் நிறைய விவரங்களைப் பார்த்ததும் எளிதாகப் புரிந்து கொள்ளும்

விதமாக அந்த அட்டவணையைத் தயாரித்திருந்தாள் ஸ்ருதி.

''கேட்டதுக்காக பேருக்கு ஒரு லிஸ்ட் எடுத்துத் தருவியோன்னு நினைச்சேன். ஆனா நான் எதிர்பார்க்காத அளவுக்குப் பிரமாதமாப் பண்ணியிருக்க.''

''தேங்க்யூ ஸார்.''

''இந்த மாதிரி இன்னும் சில வேலைகள இதே மாதிரி நீ செஞ்சு தர வேண்டியிருக்கு ஸ்ருதி. அப்ப தான் நான் இல்லாத இந்த சில வருஷங்கள்ள இங்க என்னென்னவெல்லாம் நடந்திருக்குன்றதை என்னால புரிஞ்சுக்க முடியும்.''

''ஓ.கே. ஸார்.''

கடந்த சில வருடங்களாகத் தொழிலில் நிறைய குளறுபடிகள் நடந்திருப்பது நன்றாகவே தெரிந்தது.

ஆனாலும் ஓரளவு நிமிர்ந்து விட்டிருந்த தொழில் பழைய நிலைக்கு வரும்வரை அதை சிறிய அளவாகக் கூட வெளியே காட்டிக் கொள்ளக் கூடாது என்பதில் சிவானந்தன் உறுதியாக இருந்தான்.

அதே சமயம் சந்தேகத்திற்குரிய ஆட்களிடம் கவனத்தை இரு மடங்காக்கி, பொறுப்புகளை அதிகமாகக் கொடுத்து அதை அவர்கள் அறிந்து கொள்ளாதவாறு ஒரு எல்லைக்குள் வைத்துக் கொண்டான்.

நயமாகப் பேசி, தாங்கள் செய்திருந்த தவறுகளை தங்களது வாயாலேயே ஒத்துக் கொள்ளும்படி செய்திருந்தான்.

எப்படியோ நிலைமை படு மோசமாவதற்கு முன்னரே அவற்றைத் தெரிந்து கொண்டு விட்டதில், அதற்கு



மேலும் ஒரு துளி அளவாகக் கூட தொழிலை சரிய விடாமல் வைத்துக் கொள்வதில் முனைந்தான் சிவானந்தன்.

தன்னருகே பக்கவாட்டில் ஒரு கார் வந்து நிற்க, சற்று உள்ளே நகர்ந்து திரும்பிப் பார்த்தாள் ஸ்ருதி.

சிவானந்தன்!

அவன் ஸ்ருதிக்குப் பக்கமாக இருந்த முன் பக்கக் கார்க் கதவைத் திறந்துவிட, என்ன என்பதைப் போலப் பார்த்தாள்.

''என்ன அப்படிப் பாக்கற? ரோட்டுக்குக் கிடைக்கற அந்த பாக்கியம் என் காருக்குக் கிடைக்கக் கூடாதா?''

அவன் கேட்ட பாவனையில் சிரிப்பு வந்தாலும், எதுவும் பேசாமல் ஏறிக் கொண்டாள் ஸ்ருதி.

ஏறி அமர்ந்தபின் கார்க் கதவை மூடிவிட்டு சிவானந்தனைப் பார்த்தவள், ''ஏன் சிரிக்கறீங்க?'' என்று கேட்டாள்.

''சுதந்திர நாட்ல சிரிக்கறது கூடவா தப்பு?''

''அது தப்பில்ல, என்னப் பாத்து ஏன் சிரிக்கறீங்கன்னு தான் கேட்டேன்.''

''என்ன நடந்து போயிட்டிருக்க?''

''இன்னைக்கு பஸ்ல வந்தேன்'' என்றவளின் விழிகள் சற்று பயத்துடன் வெளியே பார்த்துவிட்டு மீள, என்னவென்று கேட்டான் சிவானந்தன்.

''ஸார் உங்களால எனக்கொரு சின்ன உதவி செய்ய முடியுமா?''

''முடியாது.''

ஸ்ருதி எதுவும் பேசாமல் அவனைப் பார்க்க, ''யார் யாருக்கோ நான் எதுக்கு உதவி செய்யணும்?'' என்று கேட்டான் சிவானந்தன்.

''ப்ளீஸ்'' என்று மீண்டும் அவனைப் பார்த்தாள்.

''இப்ப உதவி பண்ணலாம்னு தான் தோணுது. ஆனாலும் முடியாது.''

''ப்ளீஸ் சிவா.''

''ம் இப்ப தாராளமா செய்யலாம், என்ன சொல்லு?''

''இன்னைக்கொரு நாளைக்கு என்ன வீட்ல ட்ராப் பண்ண முடியுமா, ப்ளீஸ்.''

''அட இவ்வளவுதானா?'' என்றவன் காரை நேராக ஒரு ட்ரைவ் இன்னுக்குள் விட்டான்.

''ஒரு காபி'' என்று அவன் சொல்ல, மறுக்க முடியாமல் தலையசைத்தாள் ஸ்ருதி.

காரில் இருந்தபடியே ஆடர் கொடுத்தவன், ''சொல்லு உனக்கென்ன பிரச்சனை?'' என்று ஸ்ருதியைப் பார்த்தான்.

..............

''ஏதாவது லவ் ஃபெயிலியரா இருந்தாக் கூடப் பரவாயில்ல சொல்லு, நான் பாத்து ஹெல்ப் பண்றேன்.''

''ஹலோ என்னப் பாத்தா உங்களுக்கு எப்படியிருக்கு?'' என்று சற்றுக் கோபத்துடன் கேட்டாள் ஸ்ருதி.

''விட்டா அடிக்க வந்துடுவ போலிருக்கு. பின்ன பிரச்சனைய நீயா சொல்லாத வரைக்கும் நான் என்ன வேணும்னாலும் தான் நினைக்க வேண்டியதிருக்கு.''

''என்னாச்சுமா?''

அவனது பரிவான கேள்வி மனதை என்னவோ செய்ய, சில வினாடிகள் எடுத்துத் தன்னை சமாளித்துக் கொண்டு பேச வாயைத் திறந்தாள் ஸ்ருதி.



அதற்குள் காபி வர, ஒன்றை ஸ்ருதியின் பக்கமாக நகர்த்தி வைத்த சிவானந்தன் மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டான்.

''சிவா ஒரு பத்து நாளா எனக்கு ஒருத்தன் டார்ச்சர் குடுத்துட்டே இருக்கான். என் மொபைல் நம்பர எப்படியோ தெரிஞ்சு வெச்சுக்கிட்டு எப்பப் பாத்தாலும் போன் பண்ணிட்டே இருக்கான்.''

''அவன் யாருன்னு தெரியுமா?''

''அவனப் பத்தி டீடெய்லாவெல்லாம் எதுவும் தெரியாது, ஆனா அவனோட வீடு எங்க வீடு இருக்கற ஏரியால தான் இருக்கு.''

''அப்படி என்னதான் சொல்றான்?''

''உன்ன ரொம்பப் பிடிச்சிருக்கு. உன்ன நேர்ல பாத்துப் பேசணும் அப்படின்னு இன்னும் வளவளன்னு பேசிட்டே இருக்கான்.''

''ஒருவேள அவன் உன்ன நிஜமாவே லவ் பண்றானோ என்னவோ?''

''அவனொரு பொறுக்கித் தெரிஞ்சிருக்கோங்க, அவன நிறைய பொண்ணுங்க கூட நானே பாத்திருக்கேன்.''

''சரி சரி முறைக்காத.''

''அதுக்கும் மேல ரெண்டு நாளைக்கு முன்னாடி நான் வேலை முடிஞ்சு திரும்பி வரும்போது என் வண்டிய மறிச்சே பேச ட்ரை பண்ணினான். நான் வேகத்த இன்னும் அதிகமாக்கிட்டு நிக்காமப் போயிட்டேன்.''

''எங்கிட்ட சொல்லிட்ட தான, இனிமேல் நீ இந்த விஷயத்தப் பத்திக் கவலையே படாத. எனக்கும் கை

துறுதுறுன்னு தான் இருக்கு, அவன யாருன்னு மட்டும் எனக்குக் காட்டிக் கொடுத்துடு நான் பாத்துக்கறேன்.''

''ரொம்ப தேங்க்ஸ் சிவா, ஆனா இப்ப அவன எதுவும் செய்ய வேண்டாம் நானே நேத்துக் கண்டபடி திட்டி விட்டிருக்கேன்.''

''நீ பயப்படாத. முதல்ல அவனுக்குக் கொஞ்சம் பயம் மட்டும் தான் காட்டி வைக்கப் போறேன், அதுக்கும் திருந்தலேன்னா தான் அப்புறம் மத்ததெல்லாம்.''

..............

''ஆமா, உங்க அம்மாகிட்ட சொல்லிட்டயா?''

''ம்கூம், அவங்ககிட்ட தான் கண்டிப்பா சொல்லவே கூடாது.''

''ஏன்?''

''அவங்க தேவையில்லாம ரொம்ப பயந்துக்குவாங்க சிவா!''

''சரி அப்ப சொல்லாத, நீயும் இந்தப் பிரச்சனைய மறந்துடு, எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன்.''

''ரொம்ப தேங்க்ஸ் சிவா.''

''அவ்வளவுதானா?''

''பின்ன வேறென்ன?''

''ஒண்ணுமில்ல. அவன ஒரு வழி பண்ணிட்டு அப்புறமாப் பேசிக்கலாம்.''

''அச்சச்சோ பெரிசா எதுவும் செஞ்சுட வேண்டாம் சிவா, சும்மா ஒரு மிரட்டு மிரட்டுங்க அது போதும்.

''ஆசைக்கும் ஒரு அளவு வேண்டாம், அவனுக்கு உள்ளக் கேக்குதாக்கும்?''



''ஏன் அப்படிச் சொல்றீங்க?'

''பின்ன உன்ன மாதிரி ஒரு அழகான பொண்ணுக்குப் பொருத்தமா வர்றவனும் இருக்க வேண்டாமா?''

''ஓ அப்பப் பொருத்தம் அப்படி மட்டும் இருந்தாப் போதும்னு சொல்றீங்களா?''

''அதுக்கு மேலயும் நிறைய வேணும் தான், கடைசிக்கு என்ன மாதிரி இருக்கற ஒருத்தன் மனுப் போட்டாலாவது ஓ.கே.ன்னு சொல்லலாம்.''

''போதும் தயவு செஞ்சு நிறுத்திக்கோங்க.''

''ஏன் நானும் ஓ.கே. இல்லையா?''

''சிவா இதுதான் உங்க லிமிட். நானே மனசு நொந்து போய் தான் வேற வழி தெரியாம உங்ககிட்ட உதவி கேக்கறேன், இந்த விஷயத்துல விளையாடாதீங்க.''

விட்டால் அழுது விடுவாள் போலிருந்தவளிடம் மேலும் எதையும் கேட்டுக் கொள்ளாமல் காரை ஸ்டார்ட் செய்தான் சிவானந்தன்.

ஆனால் ஸ்ருதியின் மனம் வேறு மாதிரி தவிக்க ஆரம்பித்திருந்தது.

பாவம் கேட்கிறாளே என்று உதவி செய்ய வந்தவன், தனது இறுக்கத்தைக் குறைப்பதற்காக இரண்டு வார்த்தைகள் விளையாட்டாகப் பேசியிருக்கிறான்.

அதைப் புரிந்து கொள்ளா விட்டாலும் பரவாயில்லை, எரிந்து வேறு விழுந்தோமே என்று மிகவும் ஒரு மாதிரியாகி விட்டது ஸ்ருதிக்கு.

சிவானந்தன் கோபித்துக் கொண்டானோ என்று சற்றே திரும்பி வேறு எங்கோ பார்ப்பதைப் போல அவனது முகத்தைப் பார்த்தாள்.

ஆனால் அவன் சாதாரணமாகக் காரை ஓட்டிக் கொண்டிருப்பது போலத்தான் தெரிந்தது.

ஆறடி உயரத்தில் கம்பீரமாக பார்ப்பதற்கு எவ்வளவு பிரமாதமாக இருக்கிறான்.

அதிலும் அவனது அதிகார தோரணைக்கும், அலட்சியப் போக்கிற்கும் எத்தனையோ பெண்கள் அவனை மேலும் ஒரு முறை திரும்பிப் பார்ப்பதை ஸ்ருதியே கண்டிருக்கிறாள்.

ஏன் அதற்குக் கம்பெனியில் வேலை செய்யும் சில பெண்களே சாட்சியாயிற்றே.

ஒன்றுமே இல்லாத சின்ன விஷயங்களையெல்லாம் கூட சிவானந்தனிடம் பேசும் ஆசையினாலேயே எடுத்துச் சென்று சந்தேகம் கேட்டதாக அவர்கள் பேசிக் கொண்டதை ஸ்ருதியே கேட்டிருக்கிறாள்.

என்னதான் ஒருவன் அழகனாக இருந்தாலும் இப்படியெல்லாம் நடந்துகொள்ள இவர்களால் எப்படி முடிகிறது என்று எரிச்சலுடன் நினைத்துக் கொள்வாள் ஸ்ருதி.

''ம், ஊருக்கொரு சட்டம் நமக்கொரு சட்டமாக்கும்'' என்ற சிவானந்தனின் பேச்சுக் குரலில் தான், தான் இன்னும் அவனையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தாள்.

''என்ன?'' என்று கேட்டாள் ஸ்ருதி.

''அச்சச்சோ நானெல்லாம் மத்தவங்க மாதிரி இல்லப்பா, ஏன்னா ஒரு தடவ திரும்பிப் பாக்கற அளவுக்குக் கூடவா நாம இல்லன்னு நான் மனசுக்குள்ள ரெம்ப ஃபீல் பண்ணியிருக்கேனாக்கும்.''



சிவானந்தனின் பாவனையில் சிரிப்பு வந்தாலும் அதை முழுமையாக மறைத்துக் கொண்டு, ''வேண்டாம்'' என்று ஆள்காட்டி விரலால் பத்திரம் காட்டி முறைத்தாள் ஸ்ருதி.

# 11



ஒரு வாரம் கடந்திருந்தது.

அன்றைக்குக் காலையில் ஷோரூமிற்குள் காலடி எடுத்து வைக்கும் போதே வாடிக்கையாளர்கள் சிலர் வந்திருக்க, அவர்களை கவனித்துக் கொண்டிருந்தான் சிவானந்தன்.

கூடவே ஸ்ரீநிதியும்.

தங்களது தயாரிப்புகளின் சிறப்புகளை சிவானந்தன் இருப்பதை இருப்பது போல உரிய விதத்தில் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தான்.

''கண்டிப்பா ஸார், அதனால தான் நாங்களும் உங்க தயாரிப்புகளத் தேர்ந்தெடுத்தோம்'' என்று ஒரு பெரிய ஆடர் லிஸ்ட்டை எடுத்துக் கொடுத்தார்கள் வந்திருந்த வாடிக்கையாளர்கள்.

''இதுக்கெல்லாம் ஒரு கொட்டேஷன் மட்டும் எங்களுக்கு இன்னைக்கே அனுப்புங்க ஸார், வேணும்னா அட்வான்ஸ் தொகையா ஒரு பத்தாயிரம் குடுத்துட்டுப் போறோம்.''

சிறிது நேரம் அவர்களைக் காத்திருக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்ட சிவானந்தன் தானே பத்து நிமிடங்

களில் ஒரு கொட்டேஷனைத் தயார் செய்து கொண்டு வந்து கொடுத்தான்.

அதை வாங்கிப் பார்த்ததில் திருப்தியடைந்த வாடிக்கை யாளர்கள் கையிலிருந்த ஒரு பெரிய தொகையை அட் வான்சாகக் கொடுத்துவிட்டு, இரண்டு நாட்களில் வந்து மீதித் தொகையையும் கொடுத்து விட்டு டெலிவரி எடுத்துக் கொள்வதாகச் சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

சிறிது நேரத்தில் தன் அறைக்கு வந்த சிவானந்தன் ஃபேக்டரியில் இருக்கும் ஹெட் சூப்பர்வைஸரை வரச் சொல்லி சற்று முன் வந்திருந்த ஆடர் லிஸ்ட்டின் நகலைக் கொடுத்து அனைத்தையும் தயாராக எடுத்து வைக்கச் சொன்னான்.

''இன்னும் ஒன் அவர்ல ரெடி பண்ணிட்டு, உங்க கிட்ட வந்து சொல்றேன் ஸார்.''

''வேண்டாம் ஒன் அவர்ல நானே அங்க வர்றேன், நீங்க எல்லாத்தையும் தயாரா எடுத்து மட்டும் வைங்க.''

''ஒ.கே. ஸார்.''

''மேல கொஞ்சம் நேரம் எடுத்துக்கிட்டிங்கன்னாலும் கூடத் தப்பில்ல ஆனா எனக்கு எதுலயும் ரெண்டு வேல வரக் கூடாது'' என்று சிவானந்தன் சொல்ல, ''ஓ.கே. ஸார்'' என்று பணிவுடன் சொல்லிவிட்டுச் சென்றார் அந்த சூப்பர்வைஸர்.

அவர் சென்றதும் உடனே இன்டர்காமை எடுத்து ஸ்ருதியை தனது அறைக்கு வந்துவிட்டுப் போகச் சொன்னான்.

ஸ்ருதி உள்ளே வர, ஸ்ரீநிதியிடம் பேசிக் கொண் டிருந்த சிவானந்தன் 'ஒரு நிமிஷம்' என்று சொல்லி விட்டுத் திரும்பி ஸ்ருதியைப் பார்த்தான்.



''சொல்லுங்க ஸார்'' என்றாள் ஸ்ருதி.

''நான் குடுத்திருக்கற வேல எந்த அளவுல இருக்கு?''

''இன்னும் ரெண்டு நாள்ல முடிச்சுடுவேன் ஸார்.''

''முடிஞ்ச அளவுக்கு எனக்கு நாளைக்கு ஈவினிங் முடிச்சுக் குடுத்துடு.''

''ஓ.கே. ஸார்.''

''ஏன் இன்னைக்கே உன்னால முடிக்க முடியாதா?'' என்று ஸ்ரீநிதி கேட்க ''ட்ரை பண்றேன்'' என்றாள் ஸ்ருதி.

என்ன திமிர், பெயருக்காவது முடித்துத் தருகிறேன் என்று சொல்கிறாளா பார் என்று ஸ்ரீநிதியின் உள்ளம் பொறுமியது.

''இன்னைக்கே வேலைய முடிச்சுக் குடுத்துட்டு தான் நீ கிளம்பணும்'' என்றாள் ஸ்ரீநிதி.

அதற்கும் சிரித்த முகத்துடன் ''ட்ரை பண்றேன்'' என்றாள் ஸ்ருதி.

''இன்னைக்கே தரணுமேன்னு அரை குறையா குடுத் துடாத, திரும்பவும் ஒரு நாள் அதிகமா ஆனாலும் பரவா யில்ல.''

சிவானந்தன் சொல்ல சரியென்றாள் ஸ்ருதி.

''லாஸ்ட் டைம் நீ முடிச்சுக் குடுத்த லிஸ்ட் மாதிரி இதுவும் நீட்டா நல்லா இருக்கணும்.''

''ஓ.கே. ஸார்.''

''ஆமா எனக்கொரு சின்ன டவுட்'' என்று ஸ்ரீநிதி ஸ்ரு தியைப் பார்க்க, என்ன என்பதைப் போலப் பார்த்தாள் ஸ்ருதி.

"நீ ஏன் எப்பவும் கைத்தறி சேலையே கட்ற?"

இது என்ன கேள்வி என்பதைப் போல ஸ்ரீநிதியைப் பார்த்தாள் ஸ்ருதி.

"இன்னைக்கே வேலைய முடிக்கணும்னு சொல்லிட்டு இப்படி ஜாலியா பேசிட்டிருந்தா எப்படி?" என்ற சிவா னந்தன், "சரி நீ போய் வேலையப் பாரு ஸ்ருதி" என்று அனுப்பி வைத்தான்.

"உனக்கும் ஒரு வேலையிருக்கு ஸ்ரீநிதி."

"போங்க சிவா, எனக்கு இப்ப வேல செய்யற இன்ட் ரஸ்டே இல்ல" என்று அலுத்துக் கொண்டவளைப் பார்த்துச் சிரித்தான் சிவானந்தன்.

"ஏன் சிரிக்கறீங்க?"

"வந்து பத்து நாள் கூட ஆகல அதுக்குள்ள போரடிக்க ஆரம்பிச்சுடுச்சாக்கும்?"

"அதெல்லாமில்லையே."

"என்ன வேலைன்னு சொல்லிடறேன் வா, உனக்கு செய்யத் தோணும் போது செய்."

"பரவாயில்லையே எல்லாருக்கும் போட்ற மாதிரி எனக்கும் ஆடர் போடுவீங்களோன்னு நினைச்சேன்."

"நீதான் பொழுதப் போக்க வேலைக்கு வந்தவளாச்சே, போரடிக்கும் போது தான செய்வ" என்றவன், ஸ்ரீநிதி யிடம் அவள் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றி எடுத்துச் சொன்னான்.

அதற்குப் பிறகு சிவானந்தன் தனது வேலைகளில் மூழ்கிவிட இனி பேசினாலும் பயனிருக்காதென்று, கையோடு கொண்டு வந்திருந்த கதைப் புத்தகத்தில் மூழ்கிப் போனாள் ஸ்ரீநிதி.



இரண்டு மணி நேரம் கடந்திருக்க "என்ன சிவா நீங்க?" என்று அருகில் வந்தவளைப் பார்த்தான் சிவானந்தன்.

"என்ன?"

"என்ன நீங்க எப்பப் பார்த்தாலும் உங்க வேலையே குறியா இருக்கீங்க?"

"ஓ, அப்ப நீ இவ்வளவு நேரமா என்ன பண்ணிட் டிருந்த?"

"ஸ்டோரி புக் படிச்சுட்டிருந்தேன், படிச்சு முடிச்சுட் டேன்" என்று சிரித்தாள் ஸ்ரீநிதி.

"பேசாம? நீ ஏதாவது லைப்ரரில போய் உக்காந் துட்டா உனக்கு இன்னும் நல்லா டைம் பாசாகும்னு நினைக்கறேன்."

"உங்க ஐடியாவுக்கு நன்றி சிவா, ஆமா என்ன பண்ணிட்டிருக்கீங்க?"

"சர்வீஸ் பண்ணிட்டிருக்கேன்."

"உங்களுக்கு இதெல்லாம் கூடத் தெரியுமா சிவா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் ஸ்ரீநிதி.

"நல்லாக் கேட்ட போ."

"ஏன்?"

"ஆமா நீயும் எலக்ட்ரானிக்ஸ்ல தான இன்ஜினியரிங் முடிச்சிருக்க, எங்க இந்த சர்க்யூட் போர்ட்ல என்ன பிரச் சனைன்னு சொல்லு பாக்கலாம்."

"நானா?"

"நீதான், என்ன இவ்வளவு ஆச்சர்யம்?"

"பின்ன இதுக்கெல்லாம் அனுபவம் வேண்டாமாக் கும்?"

''அந்த அளவுக்குப் பெரிய பிரச்சனையா இருந்தா நானே உங்கிட்டக் கேக்க மாட்டேன், கண்ணுக்குத் தெரி யற ஒரு சின்னப் பிரச்சனைதான் பாத்தாலே கண்டுபிடிச் சுடலாம்.''

சிவானந்தன் சொன்னதைத் தொடர்ந்து சில வினாடி கள் அந்த எலக்ட்ரானிக் போர்டை உற்றுப் பார்த்தாள் ஸ்ரீநிதி.

''என்ன கண்டு பிடிச்சுட்டயா?''

''தெரியல சிவா, என்ன விட்ருங்க.''

''ட்ரை பண்ணாமலே சொல்றேன்னு நினைக்கறேன்.''

''ஹலோ கண்ல பாத்தே சர்க்யூட்ல என்ன பிரச் சனைன்னு யாரால சொல்ல முடியும்? சான்ஸே இல்ல'' என்றாள் ஸ்ரீநிதி.

அந்த சமயம் பார்த்து அந்த சர்வீஸ் அறைக்குள் ளிருந்த ஒரு ஃபைலை எடுப்பதற்காக ஸ்ருதி உள்ளே வர அவளை அருகில் அழைத்தான் சிவானந்தன்.

''அவளுக்கெங்க தெரியப் போகுது?'' என்று ஸ்ரீநிதி சிரிக்க, சில வினாடிகளில் ''சொல்லுங்க ஸார்'' என்று அருகில் வந்திருந்தாள் ஸ்ருதி.

''இந்த எலக்ட்ரானிக் போர்ட்ல என்ன பிரச்சனைன்னு சொல்ல முடியுமா?'' என்று ஸ்ருதியைப் பார்த்தான் சிவானந்தன்.

''தெரியலன்னாலும் பயப்படாம சொல்லு ஒன்னும் சொல்ல மாட்டார்'' என்று ஸ்ரீநிதி சொல்லிக் கொண் டிருக்க, சிவானந்தன் தனக்கு முன்பாகத் தள்ளி வைத் திருந்த அந்த போர்டை சில வினாடிகள் பார்த்தாள் ஸ்ருதி.



''கடைசில இது என்னன்னு கேக்காம இருந்தா சரி'' என்று ஸ்ரீநிதி சிரிக்க பதிலுக்காக ஸ்ருதியின் முகத்தை ஏறிட்டான் சிவானந்தன்.

''இங்க ஒரு ரெஸிஸ்டர் எரிஞ்சு போயிருக்கு, அப் புறம் இங்க சர்க்யூட் ட்ரேக் விட்டுப் போயிருக்கு'' என்று ஸ்ருதி சிவானந்தனைப் பார்த்துச் சொல்ல, ''எக்ஸலன்ட்'' என்றான் சிவானந்தன்.

''சரியா சொன்ன, இதுதான் ப்ராப்ளம்.''

ஸ்ருதியின் சரியான பதிலுக்காக சிவானந்தன் அவளைப் பாராட்ட, ஸ்ரீநிதியின் முகம் சின்னதாகி விட்டது.

ஆனால் அது சில வினாடிகள் தான், உடனே பேச்சை மாற்றினாள்.

''நீ வந்து எவ்வளவு நாளாச்சு, அதனால நல்லாக் கத்துக்கிட்ட'' என்று ஸ்ரீநிதி ஸ்ருதியைப் பார்க்க, ''சரி நீ போய் உன் வேலையைப் பாரு'' என்று சிவானந்தன் சொல்ல அதற்காகவே காத்திருந்தாற் போல அங்கிருந்து நகர்ந்தாள் ஸ்ருதி.

ஸ்ருதி வெளியே சென்றதும், ஸ்ரீநிதியைப் பார்த்தான் சிவானந்தன். ''முடியும்னு நினைச்சுப் பாத்திருந்தா நீயும் சொல்லியிருக்கலாம்'' என்றவன் அந்த எலக்ட்ரானிக் போர்டை சர்வீஸ் செய்ய ஆரம்பித்திருந்தான்.

''இந்த வேலையெல்லாம் நீங்கெதுக்கு சிவா செய்ய நீங்க? யாராவது ஸ்டாஃப்ஸ செய்யச் சொல்ல வேண் டியதுதான?''

''அவங்கள விட்டா டைம் கிடைக்கலன்னோ இல்ல ப்ராப்ளம் என்னன்னு தெரியாமலோ பெண்டிங் கூட வைப்பாங்க. அப்புறம் பெண்டிங் பாட்டுக்கு சேந்துட்டே போயிட்டிருக்கும்.''

''அது சரிதான், அப்புறம் அந்த ஸ்ருதிக்கு சம்பளத்தக் கொஞ்சம் அதிகமாக் குடுத்துடுங்களேன் சிவா.''

''இதென்ன அவமேல உனக்கு இப்படியொரு அக்கறை.''

''பாவம் நல்லா டிரஸ் பண்ணிட்டு வரக்கூட அவளுக்கு வசதியில்ல போலிருக்கு, அதான் சொன்னேன்.''

'இல்லையே, ஸ்ருதி அணிவது என்னதான் கைத்தறிச் சேலைகள் என்றாலும் அவை நல்ல விலை மதிப்புடையவை போலத்தானே தோன்றுகிறது.

பார்ப்பவர்களின் கண்களை உறுத்தாமல், அதே சமயம் பாரதி கண்ட புதுமைப் பெண் போல நாகரீகமாகவும் உடுத்தும் ஸ்ருதியைப் பார்த்தாவது சில ஜென்மங்கள் திருந்தினால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று சிவானந்தனே கூட நிறைய முறை நினைத்திருக்கிறான்.

என்ன செய்வது, இன்றைய சில இளைய தலைமுறைப் பெண்களுக்கு சேலை உடுத்துவதே நகைப்புக்குரிய செயலாகத் தோன்றும் போலிருக்கிறது' என்று நினைத்தவனுக்குச் சிரிப்பு தான் வந்தது.

அதே சமயம் ஸ்ருதியின் மேல் அவனுக்கிருந்த சுவாரஸ்யமும், மதிப்பும் மேலும் கூடியது.

''என்ன சிவா, நான் கேட்டது உங்க காதுல விழுந்ததா இல்லையா?''

''விழாம என்ன, ஸ்ருதியப் பத்தி தான என்னவோ கேட்ட. ஆமா நீ ஏன் எப்பப் பாத்தாலும் அவளப் பத்தியே பேசிட்டிருக்க?''

'பாயிண்டைப் பிடித்து விட்டானே.'



''அந்த ஸ்ருதியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்க எனக்கு மட்டும் என்ன வேண்டுதலா?''

அவள் மட்டும் இவ்வளவு அழகாக இருந்து தொலைக்காமல், சிவானந்தனின் நேரடிப் பார்வையில் வேலை செய்யாமலும் இருந்திருந்தால் அவளைப் பற்றி நான் ஏன் நினைக்கப் போகிறேன்?

அதிலும் கொடுக்கின்ற வேலைகளை நன்றாகச் செய்து தொலைத்து வேறு சிவானந்தனின் கவனத்தை மேலும் மேலும் தன் மேல் விழ வைக்கிறாளே அந்த ஸ்ருதி. தனக்கு சம்பந்தமே இல்லாததை ஏன் தன்னிடம் கேட்கிறான் என்பதைப் போல காட்டிக் கொண்டு, ''என்ன கேட்டிங்க சிவா?'' என்று நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் ஸ்ரீநிதி.

''பரவாயில்லையே ரொம்ப மும்முரமாகக் கூட வேலை செய்ய ஆரம்பிச்சுட்ட.''

''என்ன பண்றது, உங்க காத்து எம்மேலயும் அடிச்சிடுச்சு போலிருக்கு. ஆமா ஸ்ருதின்னு என்னவோ கேட்டிங்களே.''

ஸ்ரீநிதியின் பாவனையில் சிரிப்பு வர, ''அப்படியே இன்னும் கொஞ்சம் யோசிச்சா நான் கேட்டதும் ஞாபகத்துக்கு வந்துடும்'' என்றான் சிவானந்தன்.

''அதையெல்லாம் விடுங்க சிவா, மத்தவங்களப் பத்தி நாம எதுக்குப் பேசணும்?'' என்று எழுந்து சென்ற ஸ்ரீநிதியைப் பார்த்து மனதிற்குள் மேலும் சிரித்துக் கொண்டான் சிவானந்தன்.

# 12



''என்ன ஸ்ருதி நீ, நானும் காலைலிருந்து பாத்துட்டிருக்கேன், ஒரேயடியா தோட்டத்துலயே வேல செஞ்சுட்டிருக்க.''

''சன்டே தான மம்மி?''

''சன்டேன்னா கொஞ்சம் ரெஸ்ட் கூட எடுக்கலாம்.''

''பின்ன வந்து குளிச்சுட்டு, மதியம் சிக்கனையும் மீனையும் ஒரு கை பாத்துட்டு அதுக்கப்புறம் என்ன பண்ணப் போறேனாம்?''

''சரி என்னவோ பண்ணு.''

''ஜஸ்ட் இன்னும் ஒன் அவர் மம்மி, ப்ளீஸ்.''

''சரிமா'' என்று உள்ளே சென்றார் காவேரி.

வீட்டைச் சுற்றிலும் தோட்டம் வைத்தாலும் வைத்தோம், தினமும் சில மணி நேரங்கள் வேலை வாங்கி விடுவதோடல்லாமல் ஞாயிற்றுக்கிழமை முழுவதையும் கூட அதுவே இழுத்துக் கொள்கிறதே.

அதிலும் அவர்களது வீட்டின் பரப்பளவைப் போல இருபது மடங்கு வீட்டைச் சுற்றிலும் இருக்கும் இடமனைத்தும், பல வகையான செடி, கொடி, மரங்களால் பூத்துக் குலுங்கி பார்ப்பதற்கு ரம்மியமாகக் காட்சியளித்தது.



ஒரு அழகிய சோலைவனத்திற்கு நடுவே குட்டி மாளிகை போல உங்கள் வீடு பார்ப்பதற்கு வெகு அழகாக இருக்கிறது என்று மற்றவர்கள் சொல்லக் கேட்கும் போது சற்றுப் பெருமையாகக் கூட இருக்கும்.

ஆனால் அதை அந்த அளவிற்கு நன்றாக வைத்துக் கொள்வதற்காக உழைக்கும் உழைப்பு தான் எவ்வளவு!

அதிலும் விடுமுறை நாட்களென்றால் உச்சி வெயில் வரும் வரை அவர்களின் பொழுது கழிவதே அங்கே தான்.

தாயும், மகளும் அரட்டையடித்துக் கொண்டே அந்த வாரம் முழுக்க விழுந்திருக்கும் இலைகளைப் பெருக்கி சுத்தம் செய்து, செடிகளை ட்ரிம் செய்து, உரம் வைத்துத் தண்ணீர் பாய்ச்சுவார்கள்.

ட்யூப் வழியாக தினமும் தான் தண்ணீர் பாய்ச்சுவார்கள் என்றாலும், விடுமுறை நாட்களில் மட்டும் தான் சற்று நின்று ரசித்து அழகு பார்க்க நேரம் கிடைக்கும்.

மேலும் ஒரு மணி நேரமும் தோட்டத்தில் வேலை செய்த ஸ்ருதி, மனதே இல்லாமல் வீட்டிற்குள் வந்தாள்.

''மம்மி ஒரு கப் காபி.''

''உடம்பெல்லாம் கசகசன்னு இருக்குமே, போய் குளிச்சுட்டு வந்துடேன் கண்ணா.''

''அதுவும் சரிதான்'' என்று குளிக்கச் சென்றாள் ஸ்ருதி.

வீடு முழுக்கக் கூட்டித் துடைத்து அனைத்து மேல் வேலைகளையும் முடித்திருந்த காவேரி, பிறகு தானும் குளித்து விட்டு வந்து மதிய உணவு வேலையை ஆரம்பித்திருந்தார்.

அரை மணி நேரம் சென்றிருக்க மும்முரமாக சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தவர், தங்களது வாசலில் கேட்ட ஏதோ ஓர் கார் வந்து நிற்கும் ஓசையில் வெளியே வந்து பார்த்தார்.

உண்மையிலேயே ஒரு கார் வந்து நின்றிருக்க, ஒரு இளைஞன் ஒருவன் அதிலிருந்து இறங்கிக் கொண்டிருப் பதைக் கண்டார்.

ஸ்ருதி சொன்னவராக இருப்பாரோ என்று நினைத்துக் கொண்டே, உள்ளே வர ஆரம்பித்திருந்த அந்த இளை ஞனை அடையாளம் தெரிந்து கொள்ளும் ஆவலில் பார்த்தார் காவேரி.

''எம் பேரு சிவானந்தன், ஸ்ருதியோட எம்.டி.''

''வாங்க ஸார்'' என்று சந்தோஷமாக வரவேற்ற காவேரி, அவனுக்கு முன்பாக வீட்டிற்குள் வந்து உள்ளே வந்திருந்தவனை அமருமாறு உபசரித்தார்.

''உங்களப் பாத்ததுல எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. ஸ்ருதி ரெண்டு நாளைக்கு முன்னாடி தான் நடந்ததையெல்லாம் சொன்னா, ரொம்ப நன்றிங்க'' என்று மனதார சொன்னார் காவேரி.

''பரவாயில்ல ஆன்ட்டி, நான் செஞ்சது ஒரு சின்ன உதவி தான்.''

''இல்ல தம்பி, எங்களப் பொறுத்த வரைக்கும் நீங்க செஞ்சது ரொம்பப் பெரிய உதவி. டிபன் சாப்பிடலாம் வாங்க.''

''நான் ஆச்சு ஆன்ட்டி, ஸ்ருதி எங்க?''

''குளிக்கப் போனா'' என்று அவர் சொல்லிக் கொண் டிருக்கும் போதே, ''மம்மி காபி ரெடியா?'' என்று கேட்டுக் கொண்டே ஹாலுக்கு வந்தாள் ஸ்ருதி.



அதற்குப் பிறகு தான் அங்கிருந்த சிவானந்தனைக் கண்டாள்.

நம்ப முடியாத ஆச்சரியத்தில் ஒரு வினாடி பார்த் தவள், பிறகு சந்தோஷமாக வரவேற்றாள்.

உடனே தனது தாயை நோக்கித் திரும்பி ''அம்மா இவர் தான்...'' என்று ஸ்ருதி அவனை அறிமுகப்படுத்து வதற்காக வாயைத் திறக்கப் போக, ''ஆன்ட்டிக்குத் தெரியும்'' என்று சிரித்தான் சிவானந்தன்.

ஓ சொந்தம் கொண்டாடும் அளவுக்கு வந்தாகி விட்டதா என்று ஸ்ருதி மனதிற்குள் நினைத்து சிரித்துக் கொள்ள, ''பேசிட்டிருமா நான் இதோ வர்றேன்'' என்று கிச்சனுக்கு சென்றார் காவேரி.

மிகவும் பழைய சுடிதார் ஒன்றை மாட்டிக் கொண்டு ஈரம் சொட்டும் கூந்தலை விரித்துப் போட்டிருந்தாள் ஸ்ருதி.

''இதோ ஒன் மினிட்ல வந்துட்றேன்'' என்று ஸ்ருதி உள்ளே போக எத்தனிக்க, ''எங்க போற?'' என்று கேட் டான் சிவானந்தன்.

ஸ்ருதியின் பார்வை தன்னிச்சையாக தான் அணிந் திருந்த துணியைப் பார்க்க, ''கேசுவலா சன்டேவ சன்டே மாதிரி என்ஜாய் பண்ணிட்டிருக்க இதுதான் நல்லார்க்கு உக்காரு'' என்றான் சிவானந்தன்.

''அப்ப சரிதான்'' என்று அருகில் டிபாயின் மேலிருந்த ஒரு ஹேர் க்ளிப்பை எடுத்து மாட்டிக் கொண்டு, அவ னுக்கு எதிராக இருந்த சோபாவில் அமர்ந்தாள்.

''ரொம்ப தேங்க்ஸ் சிவா.''

''எதுக்கு?''

''நீங்க செஞ்ச உதவிக்கு தான், அந்தப் பொறுக்கி பத்து நாளா என் கண்ல கூடப் படல'' என்று சந்தோஷமாக சொன்னாள் ஸ்ருதி. ''ரூட்டில வெச்சும் பேச முடியல, உங்களுக்கு ஒரு தேங்க்ஸ் கூடச் சொல்ல முடியலையேன்னு இப்பக்கூட நான் ரொம்ப ஃபீல் பண்ணினேன்'' என்றாள்.

''அடடா, இதுக்காகவாவது நான் அவனுக்கு நன்றி சொல்லணும் போலிருக்கே.''

''ஹலோ, என்ன நக்கலா?''

''இல்ல சீரியஸா தான் சொல்றேன்'' என்று ஸ்ருதியைப் பார்த்தவன், ''சும்மா ஒரு மிரட்டு தான் மிரட்டினேன் அதுக்கே ஆடிப் போய்ட்டான் போல'' என்றான்.

''அப்படித்தான் போலிருக்கு.''

''ஒரேயடியா அப்படித்தான்னு சொல்லிட முடியாது, எதுக்கும் கொஞ்சம் பாத்து பத்தரமாவே இரு. ஆமா அம்மாகிட்ட சொல்லமாட்டேன்னு சொல்லிட்டிருந்த, ஆனா அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கு.''

''ஆமா சிவா, ஆனா நான் சொல்லல.''

''பின்ன?''

''அங்க அந்தாளு வீட்ல வேல செய்யற வேலைக்காரம்மா தான், இங்க நம்ம வீட்டுக்கும் வந்து ஏதாவது வேலைன்னா செஞ்சு குடுப்பாங்க. அவங்க அம்மாகிட்ட சொல்லியிருக்காங்க.''

''ஓ. உங்க வீடு கட்டின விதம், இன்டீரியர் டெகரேஷன் எல்லாமே ரொம்ப நல்லார்க்கு'' என்று மனதிற்குள் பட்டதை சொன்னான் சிவானந்தன்.



''தேங்க்ஸ், வீட்டோட ப்ளான் எல்லாம் மம்மி டாடியோடது. ஆனா இன்னர் வொர்க் எல்லாம் என்னோடது'' என்று சந்தோஷமாக சொன்னாள் ஸ்ருதி.

காவேரி ஸ்நேக்ஸ் கொண்டு வந்து வைத்து சிவானந்தனை உபசரிக்க, கூடவே தானும் உபசரித்தாள் ஸ்ருதி.

''பயப்படாம எடுத்துக்கோங்க, எங்க மம்மி செஞ்சது தான். ரொம்ப நல்லார்க்கும்.''

கொஞ்சம் முறுக்கை உடைத்து வாயில் போட்டு சுவைத்த சிவானந்தனும், ''சரிதான் ரொம்ப பிரமாதமா இருக்கு'' என்றான்.

''எங்க மம்மியோட லஞ்ச் இதவிட நல்லார்க்கும்.''

''அதுதான் தெரியுதே, வாசனையே கமகமன்னு மூக்கத் துளைக்குது.''

''லஞ்ச் மேக்ஸிமம் ஆயிடுச்சு தம்பி, நீங்க கண்டிப்பா இருந்து சாப்டுட்டு தான் போகணும்'' என்று சந்தோஷமாக உபசரித்தார் காவேரி.

''அப்பாடா, எங்க சொல்லாம விட்ருவீங்களோன்னு பயந்துட்டிருந்தேன்'' என்று சிவானந்தன் சொன்ன பாவனையில் மற்ற இருவருமே சிரித்தனர்.

''கண்ணா நான் லஞ்ச் வேலையப் பாக்கறேன் நீ வந்து காபிய எடுத்துட்டு வந்துட்றயா?'' என்று காவேரி மகளை அழைக்க, ''சரிமா'' என்று தனது தாயுடன் கிச்சனுக்குப் போனாள் ஸ்ருதி.

இரண்டு காபி கப்புகளுடன் திரும்பி வந்தவள், ஒன்றை சிவானந்தனுக்குக் கொடுத்து உபசரித்து விட்டு மன்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டாள்.

இருவரும் காபி குடித்து முடிந்ததும், ''உங்க வீட்டச் சுத்தியும் தோட்டம் பிரமாதமா இருக்கு பாக்கலாமா?'' என்று சிவானந்தன் எழ, தானும் சந்தோஷமாக அவனுடன் சென்றாள் ஸ்ருதி.

அங்கிருந்த ஒவ்வொரு செடி, கொடி, மரங்களைப் பற்றியும் அதன் நினைவுகளை அவனிடம் ஆசையுடன் பகிர்ந்து கொண்டாள்.

''விட்டா இன்னும் சொல்லிட்டே இருப்ப போலிருக்கே'' என்று சிவானந்தன் சிரிக்க, ''ஆமா அந்தளவுக்கு எனக்கு ரொம்பப் பிடிக்கும்'' என்றாள் ஸ்ருதி.

ஒரு முறை தோட்டம் முழுவதையும் சுற்றிப் பார்த்த சிவானந்தன், ''நிஜமாகவே ரொம்பக் குளுமையா பசுமையா பிரமாதமா இருக்கு'' என்று உணர்ந்து சொன்னான்.

''ஆனா இத இந்தளவுக்கு மெய்ன்டெய்ன் பண்றதுக்கு, நீங்க ரொம்பவும் உழைக்கணுமே ஸ்ருதி.''

''அது சரிதான் சிவா, வாங்க உக்காருங்க'' என்று தான் அமர்ந்த கல் பெஞ்ச்சையே அவனுக்கும் காட்டிச் சொன்னாள்.

''இன்னைக்குக் காலைல கூட ஃபைவ் அவர்ஸ் வேல செஞ்சேன், அப்புறம் மம்மி போதும் வான்னு திட்டினதுக்கப்புறம் தான் குளிக்கவே போனேன். ஏன் சிவா அப்படிப் பாக்கறீங்க?''

''அதனால தான் ரொம்ப ஸ்லிம்மா அழகா இருக்க.''

''ம்'' என்று விளையாட்டுக்கு முறைத்தவள், ''கேசுவல் வேர்ல நீங்க கூட ரொம்ப ஸ்மார்ட்டா இருக்கீங்க'' என்றாள்.



''கூம் ரொம்ப லேட், ஆனா இதுவே ஒரு நல்ல ஆரம்பமா இருக்கட்டும்.''

''என்ன சொல்றீங்க புரியல'' என்று ஸ்ருதி கேட்க, ''ஒன்னுமில்ல, இது ரொம்பக் காஸ்ட்லி ஏரியா இல்லையா?'' என்று கேட்டான் சிவானந்தன்.

''ஆமா சிவா, இங்க ஒரு செண்ட் இருபத்தஞ்சு லட்சம்.''

''நாப்பது செண்ட்டுக்கு மேல இருக்கும் போலிருக்கு, அப்பக் கணக்குப் பாத்தா நீ ஒரு பெரிய கோடீஸ்வரின்னு சொல்லு.''

''அப்படியெல்லாமில்ல'' என்று மறுத்தவள். ''போன மாசத்தோட தான் வீட்டோட லாஸ்ட் பேங்க் இன்ஸ்டால்மெண்ட் கம்ப்ளீட் ஆச்சு'' என்றாள்.

''பதினஞ்சு வருஷத்துக்கு முன்னாடி இங்க இடம் வாங்கும்போது செண்ட் வெறும் அம்பதாயிரம் தானாம் சிவா. வீடு வீடுன்னு அதையே பாத்துப் பாத்து உங்களுக்குன்னு எதையுமே சேத்து வெக்காம விட்டுட்டேன்னு டாடி.. இருக்கும்போது ரொம்பக் கவலப்படுவார்.''

''கவலைப்படாதீங்க, பணமா சேர்த்திருந்தாக் கூட இன்னைக்கு இந்த வீட்டோட வேல்யூல நால்ல ஒரு பங்கக் கூட நம்மால சேத்திருக்க முடியாதுன்னு அப்பா படுக்கைல இருக்கும்போது மம்மி அவர சமாதானப் படுத்துவாங்க. ஆனா இப்ப வீட்டோட கடன ஃபுல்லா அடைச்சதுக்கப்புறம் உனக்கு வீட்டத் தவிர எதையும் சேத்து வெக்காம விட்டுட்டனேன்னு அம்மா புலம்பலோட திசையவே மாத்திட்டாங்க'' என்று சிரித்தாள் ஸ்ருதி.

''ஆமா, பெத்தவங்களுக்கு பாசம் இருக்கத்தான செய்யும்.''

''அதுக்காக? எங்க என்ன நல்லாப் பாத்து சொல்லுங்க, பணமிருந்தாத் தான் என்னக் கல்யாணம் பண்ணிக் குடுக்க முடியும்னு அவங்க நினைக்கறாங்க. இல்லன்னா என்ன யாரும் ஏத்துக்க மாட்டாங்களாக்கும்?''

''யார் சொன்னது? நீ மட்டும் சரின்னு ஒரு வார்த்தை சொன்னா நான் இந்த நிமிஷமே கூட உனக்காக என்ன வேணும்னாலும் செய்யத் தயார்.''

''ஹலோ'' என்று சற்றுக் கோபத்துடன் நிமிர்ந்து பார்த்தவள், அவனது முகத்தில் தெரிந்த சிரிப்பைக் கண்டாள்.

சும்மா விளையாட்டுக்கு சீண்டியிருக்கிறான்.

''நான் சும்மா விளையாட்டுக்கு சொல்றேன்னு நினைச்சுக்க வேண்டாம், உன் மனசுல அந்த மாதிரி ஒரு சின்ன ஆச இருந்தாக் கூட சொல்லு...''

அவன் சொல்லி முடிப்பதற்குள் ''போதும் இதோட ஸ்டாப் பண்ணிக்கோங்க'' என்று தனது ஆள்காட்டி விரலால் பத்திரம் காட்டி முறைத்தவளுக்கு, வார்த்தைகளில் இருந்த கடுமை முகத்தில் வராததோடு சிரிப்பும் வந்து விட்டது.

''சரிசரி உனக்காக வேணும்னா இனி இதப்பத்திப் பேசல, ஆனா நானெல்லாம் ஃபர்ஸ்ட் டைம் பாத்த உடனேயே விழுந்துட்டேனாக்கும்.''

திரும்பி அருகிலிருந்த மல்லிகைச் செடியின் ஒரு மொட்டைப் பறிப்பதைப் போல பாவனை செய்தவளுக்கு, அவனது வார்த்தைகளில் லேசாக முகம் கூடச் சிவந்து போனது.



அதற்குப் பிறகு இருவரும் சாதாரண விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள்.

ஸ்ருதி தனது கல்லூரி, தனக்குப் பிடித்த விஷயங்களைப் பற்றிச் சொல்ல, சிவானந்தன் தனது ஃபாரின் அனுபவங்களை சுவைபடச் சொன்னான்.

காவேரி வந்து சாப்பிட அழைக்கும் வரை இருவருக்கும் பேச்சு சுவாரஸ்யத்தில் நேரம் போனதே தெரியவில்லை பிகு பண்ணிக் கொள்ளாமல் சிவானந்தன் உடனே சாப்பிட வந்ததில், ஸ்ருதியை விடக் காவேரிக்குத் தான் மிகவும் சந்தோஷமாக இருந்தது.

எத்தனை பெரிய உதவி செய்திருக்கிறான், அதிலும் ஸ்ருதியின் எம்.டி.யாக இருந்து கொண்டு.

பெப்பர் சிக்கன் ஃப்ரை, சிக்கன் கிரேவி, ஃபிஸ் ஃப்ரை என அனைத்துப் பதார்த்தங்களும் மிகவும் சுவையாக இருக்க, தான் வழக்கத்தை விட அதிகமாக உண்டதோடு அதை வெளிப்படையாகவும் சொன்னான் சிவானந்தன்.

''இந்த அளவுக்கு டேஸ்டா நான் என் வாழ்க்கைல சாப்டதே இல்ல'' என்று சிவானந்தன் சொல்ல, ''சும்மா பொய் சொல்லாதீங்க'' என்றாள் ஸ்ருதி.

''அட ஆமாம்மா, அங்க நம்ம வீட்ல எப்பவும் சைவம் தான். எனக்கு அசைவம் சாப்பிடத் தோணும்போது என்னைக்காவது ஹோட்டல்ல தான் போய் சாப்பிடுவேன்.''

''ஏன் வீட்ல சாப்பிட மாட்டாங்களா?''

''வீட்ல யாருக்கும் அசைவங்கற வார்த்தையே சுத்தமா ஆகாது. ஆனா என்னால இதெல்லாம் சாப்பிடாம இருக்கவே முடியாது.''

''பின்ன நீங்க மட்டும் எப்படிச் சாப்பிட்டுப் பழகி னீங்க?''

ஸ்ருதி கேட்க, தனக்கு எதிரில் அமர்ந்திருந்த அவளை நிமிர்ந்து பார்த்தான் சிவானந்தன்.

''நான் அவங்க தத்துப்பிள்ளை.''

இப்பொழுது ஸ்ருதி அவனை ஆச்சரியத்துடன் பார்க்க, ''சரியா ஃப்ரேங்கா சொல்லணும்னா என்னோட எட்டு வயசு வரைக்கும் நானொரு அனாதை'' என்றான்.

''விளையாடாதீங்க சிவா.''

''ஏன் நம்ப முடியலையா?''

அதே நேரம் அவனுக்கு போன் வர அட்டெண்ட் செய்து பேசினான்.

சில வினாடிகளில் இருவரும் சாப்பிட்டு முடித்து விட்டு எழ, அப்பொழுதுதான் உள்ளே வந்திருந்த காவேரி தான் எடுத்து வந்த கை துடைக்கும் டவலை வாஷ் பேஷின் ஹேங்கரில் மாட்டினார்.

''ஸ்ருதி.''

''என்ன மம்மி?''

''டூத் பிக் கப் போர்ட்ல இருக்கும், எடுத்து வைம்மா.''

என்னதான் தாயுடன் பேசிக் கொண்டிருந்தாலும் சற்று முன் சிவானந்தன் சொன்னது தான் மனதிற்குள் ஓடிக் கொண்டிருந்தது ஸ்ருதிக்கு.

'சும்மா விளையாடுகிறான்.'

'அதற்காக இப்படியெல்லாம் கூடவா?'

சிவானந்தன் கிளம்புவதாகச் சொல்ல, மற்றொரு முறையும் மனதார நன்றியுரைத்தார் காவேரி.



''அந்தப் பையனோட அப்பா ரொம்பவும் அரசியல் செல்வாக்கு இருக்கறவர் தம்பி, அதனால அவனும் கொஞ்சம் எல்லை மீறித்தான் எப்பவுமே ஆடுவான். நீங்க மட்டும் உதவாம இருந்திருந்தீங்கன்னா உண்மை லயே நாங்க என்ன கதி ஆகியிருப்போமோ தெரியல.''

''இனிமேல் அவன் வாலாட்ட மாட்டான்னு தான் நினைக்கறேன், நீங்க கவலப்படாம தைரியமா இருங்க ஆன்ட்டி.''

''சரி தம்பி, நீங்க எப்ப வந்தாலும் வீட்டுக்கு வாங்க.''

''கண்டிப்பா ஆன்ட்டி'' என்று சிவானந்தன் கிளம்ப, அவனை வழியனுப்பக் கார் வரை வந்தாள் ஸ்ருதி.

அவனைக் கார் ஏற விடாமல் மறித்து நின்றவளை ஆச்சரியத்துடன் பார்த்தவன், என்னவென்று கேட்டான்.

''விளையாட்டுக்கு ஒரு அளவில்லையா?''

''என்ன விளையாட்டு?''

''பின்ன அனாத அது இதுன்னு ஜோக் அடிக்கறீங்க.''

''ஓ, அதுவா?''

ஸ்ருதியின் கோபம் மனதிற்கு இதமாக இருக்க, ''நான் சொன்னது முழு உண்மைதாம்மா எனக்கு எட்டு வய சிருக்கும்போதுதான் சதாசிவம் அங்கிள் என்னத் தத் தெடுத்தாரு'' என்றான்.

அவன் சொன்னதைக் கேட்ட ஸ்ருதியின் கண்கள் லேசாகக் கலங்கிவிட, ''ஹலோ என்னாச்சு?'' என்று அவ ளுக்கு முன்பாக சொடக்குப் போட்டான் சிவானந்தன்.

அவன் கார்க் கதவைத் திறப்பதற்கு வழிவிட்டு நகர்ந்து நின்றவள், சில வினாடிகளில் தன்னை சமாளித்துக் கொண்டு நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''என்னமா ஆச்சு?'' என்றவனின் கனிவான அழைப்பில், ''ஒன்னுமில்ல கண்ல தூசி விழுந்துடுச்சு'' என்றாள்.

''சரி, ஆனா இன்னும் கொஞ்சம் சிரிக்கலாமே'' என்று கேட்டுக் கொண்டே சிவானந்தன் காரை ஸ்டார்ட் செய்ய, நன்கு மலர்ந்த முகத்துடன் அவனுக்குக் கையசைத்து விடை கொடுத்தாள் ஸ்ருதி.

## 13



என்னதான் தூங்குவதற்காகப் படுக்கையில் விழுந்திருந்தாலும், சிவானந்தனுக்குத்தான் அன்று இரவு தூக்கம் அருகில் கூட வரமாட்டேன் என்றது.

அதுவும் அன்று மதியம் ஸ்ருதி தனக்காகக் கண் கலங்கியது தான் அவனுக்கு ஞாபகத்திற்கு வந்து கொண்டே இருந்தது.

யாரோ ஒரு சிவானந்தனுக்காக அவள் ஏன் அழ வேண்டும்?

இல்லை, தன்னைப் போலவே அவளுக்கும் தன் மேல் அன்பு இருக்கிறது.

மேலும் அதே வழியில் யோசிக்க யோசிக்க, சிவானந்தனுக்கு சந்தோஷத்தில் துள்ளிக் குதிக்க வேண்டும் போலிருந்தது.

ஸ்ருதிக்குத் தன் மேல் ஒரு ஈர்ப்பு நிச்சயமாக இருக்கிறது.



அது நிச்சயம் காதலாகவும் மாறும்.

தான் முதன் முதலில் பார்த்த போதே மனதைப் பறித்துக் கொண்ட பெண்ணே தனது வாழ்க்கைத் துணையாக வருவதைப் போல நினைத்துப் பார்த்த சிவானந்தனுக்கு எல்லையில்லாத சந்தோஷத்தில் உள்ளம் நிறைந்தது. மற்றபடி தன்னை யாராவது பரிவாகப் பார்த்தாலே மூக்கிற்கு மேல் கோபம் வரும் தனக்கு ஸ்ருதி தனக்காக அழுதது மட்டும் ஏன் இவ்வளவு சந்தோஷத்தைத் தர வேண்டுமென்று நினைத்துக் கொண்டான்.

ஆனால் நெஞ்சம் நிறைந்த காதலுடன் ஸ்ருதியே தன்னை நாடி வந்தாலும், தான் அவளை விலக்க நேரிடுமென்பதை அறியாத சிவானந்தனின் கண்களை ஒரு வழியாகத் தூக்கம் வந்து தழுவிக் கொண்டது.

இரண்டு வாரங்கள் கடந்திருந்தன.

ஸ்ருதிக்கு வேலை நன்றாகவே பழகியிருந்தது.

இப்பொழுதெல்லாம் சிவானந்தனின் பார்வை ஸ்ருதியை மிகவும் இம்சித்தது.

அவன் வழக்கம் போல சாதாரணமாகப் பேசினாலும் கூடத் தன் மனம் அதை வேறு மாதிரி எடுத்துக் கொள்வது ஸ்ருதிக்கும் புரியவே செய்தது.

ஆனால் அதுவே பிடித்திருந்தது.

அவன் இன்னும் கூட விளையாட்டாகப் பேச மாட்டானா என்று மனம் ஏங்கவும் செய்தது.

அன்று காலையில் சிவானந்தன் வரும்போதே, அவன் சற்றுக் கோபத்தில் இருப்பதை அவனது முகம் காட்டிக் கொடுத்தது.

பாவம் என்ன பிரச்சனையோ என்று நினைத்துக் கொண்டாள் ஸ்ருதி.

ஆனால் வருகிற நாட்களிலும் அதுவே தொடர, தன்னிடம் சிரித்துப் பேசுவதைக் குறைத்துக் கொள்ளத் தான் அப்படி நடந்து கொள்கிறானோ என்று நினைக்கத் தோன்றியது ஸ்ருதிக்கு.

இப்பொழுதெல்லாம் அவன் உழைக்கும் நேரம் மிகவும் அதிகமாகி விட்டது நன்றாகவே தெரிந்தது.

அந்த அளவிற்குக் காலையில் நேரத்திலேயே வந்து விடுபவன், இரவு வெகு நேரம் கழித்துத் தான் வீட்டிற்குச் செல்கிறானென்று மற்றவர்கள் பேசிக் கொள்வது காதில் விழுந்தது.

ஆர்டர்கள் மிகவும் அதிகமாகி விட்டதுதான் அதற்குக் காரணமென்றாலும், ஸ்ருதியால் அதை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

சில நாட்களாக அந்த ஸ்ரீநிதியின் வருகையும் சுத்த மாக நின்று விட்டிருந்தது.

வேலை விஷயத்தில் சிவானந்தன் என்னதான் சற்றுக் கடுமையாக நடந்து கொண்டாலும், சிரித்துப் பேசுவ திலும், உண்மையான திறமைகளைத் தட்டிக் கொடுப்ப திலும் அவன் என்றைக்குமே குறை வைத்ததில்லை.

அதிலும் அவனது வாயிலாகப் பாராட்டைப் பெற்று விட, அனைவரும் மேலும் இரண்டு மடங்கு சிரத்தை யுடன் வேலை செய்தார்கள் எனலாம்.

சிவானந்தன் கொடுத்திருந்த வேலையில் சந்தேகம் ஒன்று வர, அதைத் தெளிவு படுத்திக் கொள்வதற்காக அவனது அறைக்குச் சென்றாள் ஸ்ருதி.



யாருடனோ போனில் பேசிக் கொண்டிருந்தவன் அமருமாறு சைகை செய்தான்.

பேசி முடித்துவிட்டுச் சில வினாடிகளில் ரிஸீவரைக் கீழே வைத்தவன், நின்று கொண்டிருந்த ஸ்ருதியைப் பார்த்தான்.

''உக்காரச் சொன்னதா ஞாபகம்.''

''பரவாயில்ல ஸார்.''

''என்ன விஷயம் சொல்லு.''

''ஸார் இவங்களுக்கெல்லாம் கொட்டேஷன் அனுப்பச் சொன்னீங்க, ஆனா என்ன ரேட் மென்ஷன் பண்றதுன்னு தெரியல'' என்று ஒரு லிஸ்ட்டை நீட்டினாள்.

அதை வாங்கிக் கொண்டவன், ''பாத்துட்டு சொல் றேன். ஒன் அவர்ல வந்து வாங்கிக்கோ'' என்றான்.

''ஓ.கே. ஸார்'' என்று சொல்லிவிட்டு ஸ்ருதி வெளியே வருவதற்காகத் திரும்ப, அவனே மீண்டும் அழைத்தான்.

''என்ன இப்பெல்லாம் மேடம் ரொம்ப பிஸியாகிட் டிங்க போல?''

சிவானந்தன் கேட்க, ''அத நான் கேக்கணும்'' என்றாள் ஸ்ருதி.

''என்ன கோபமா இருப்ப போல?''

''அதெல்லாமில்ல'' என்று புன்னகை செய்தவள், ''நான் உங்ககூடக் கொஞ்சம் பேசணும்'' என்றாள்.

''ஓ தாராளமாப் பேசலாமே'' என்று சிவானந்தன் சிரித்துக் கொண்டே சொல்ல, ''இப்ப வேண்டாம் ஈவி னிங் எப்பவாவது உங்களுக்கு டைம் இருக்கும்போது'' என்றாள் ஸ்ருதி.

''நீ பேசறதா இருந்தா நான் எப்பவுமே ப்ரீதான்.''

சிவானந்தனின் பார்வை சற்று வித்யாசமாகத் தன் மேல் விழுவது தெரிய, அவன் வேறு மாதிரிப் புரிந்து கொண்டானோ என்று நினைக்கத் தோன்றியது ஸ்ருதிக்கு.

''பெரிசா எதுவுமில்ல, ஒரு சின்ன ஹெல்ப் வேணும்.''

''என்ன அவன் திரும்பவும் வாலாட்டறானா?'' என்றவனின் குரலில் இருந்த கோபம் வெளிப்படையாகவே தெரிந்தது.

''அச்சச்சோ இல்ல'' என்று ஸ்ருதி அவசரமாக மறுக்க, ''நானும் உங்கிட்ட சில விஷயங்களப் பேசணும்மா'' என்றான்.

''ஈவினிங் டியூட்டி முடிஞ்சதும் கிளம்பிட வேண்டாம், ஒரு கால் மணி நேரம் வெய்ட் பண்ணு ஒன்னாப் போயிடலாம்.''

என்னவாக இருக்கும் என்று மனம் பரபரத்தாலும், உடனே சரியென்றாள் ஸ்ருதி.

# 14



சொன்னது போலவே மாலை வேலை முடிந்ததும் சிறிது நேரத்தில் சிவானந்தனோடு அவனது காரில் கிளம்பினாள் ஸ்ருதி.

கார் செல்லும் திசை புதிதாக இருக்க, எங்கே போகிறோம் என்று கேட்கத் தோன்றினாலும் அவனாகவே சொல்வான் என்று பேசாமல் அமர்ந்திருந்தாள்.



அவனது கம்பீரமான வலிய கரங்கள் ஸ்டியரிங்கைப் பிடித்திருக்க, பாதையில் கவனமாகக் காரை ஓட்டிக் கொண்டிருந்தாலும் அவனது மனம் வேறு எதைப் பற்றியோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருப்பதை அவனது முகம் காட்டிக் கொடுத்தது.

மேலும் சில நிமிடங்களும் அப்படியே கழிய, வெளியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டு வந்த ஸ்ருதி சிவானந்தன் தன்னைப் பார்ப்பதை உணர்ந்து திரும்பினாள்.

''நீ பாட்டுக்கு பயப்படாம எங்கூட வர்ற, நான் உன்ன எங்க கூட்டிட்டுப் போயிட்டிருக்கேன்னு தெரியுமா உனக்கு?''

''அதப்பத்தி எனக்கென்ன, உங்களுக்குத் தெரிஞ்சா சரி.''

''எம்மேல உனக்கு அவ்வளவு நம்பிக்கையா?''

''நம்பிக்கை தான், இருந்தாலும் நாம இப்ப எங்க போயிட்டிருக்கோம்.''

ஸ்ருதி கேட்க, சிரித்தான் சிவானந்தன்.

''கொஞ்ச நோத்துல நீயே தெரிஞ்சுக்க தான போற, வா வந்து பாரு.''

''என்ன புதிரெல்லாம் போடறீங்க?''

அதற்கு மேல் எதுவும் பேசாமல் வந்தவன், பத்து நிமிடங்களில் ஒரு வீட்டின் முன்பாகக் காரை நிறுத்தினான்.

''இறங்கி வா'' என்று என்று ஸ்ருதியை அழைத்தவன், தானும் காரிலிருந்து இறங்கினான்.

அந்த வீட்டைச் சுற்றிலும் இருந்த மரம், செடிகளைப் பார்த்த ஸ்ருதிக்கு, அது தனது வீட்டை நினைவு படுத்தியது.

ஆனால் இங்கு வீடு மிகவும் பெரியதாகவும், சுற்றிலும் இருக்கும் இடம் குறைவாகவும் இருப்பது தெரிந்தது.

சிவானந்தன் அந்த வீட்டின் பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே போக, அவனைத் தொடர்ந்து தானும் வீட்டிற் குள் சென்றாள் ஸ்ருதி.

''என்ன பாக்கற? நம்ம புது ஃபேக்டரி எப்படியிருக்கு?''

''ரொம்ப நல்லார்க்கு, ஆனா புது ஃபேக்டரியா?'' என்று சிவானந்தனைப் பார்த்தாள்.

''ஆமா, நாளைக்கு மறுநாள்ல இருந்து நான் இனி இதத்தான் பாத்துக்கப் போறேன்.''

''அப்புறம் அந்த ஃபேக்டரி?''.

''அது அப்படியே தான் இருக்கும் ஸ்ருதி, ஆனா அத அப்பா பாத்துக்குவார்.''

மேலும் விவரம் கேட்கத் தோன்றினாலும், எதையும் கேட்டுக் கொள்ளாமல் ''அப்படியா'' என்றாள்.

ஆனால் கேட்காவிட்டாலும், அவனாகவே அனைத் தையும் சொன்னான்.

அங்கிருந்த சோபா ஒன்றைக் காட்டி ஸ்ருதியை அமரச் சொன்னவன் தானும் அமர்ந்து கொண்டான்.

''எனக்கு எட்டு வயசிருக்கும் போது என்னத் தத் தெடுத்தாங்க ஸ்ருதி.''

''அப்ப எனக்குப் பெரிசா எந்த வித்யாசமும் தெரிய லன்னாலும், அம்மாவும் அப்பாவும் எங்கிட்ட ரொம்ப அன்பா நடந்துக்கிட்டதுல நானும் என்ன அந்தக் குடும் பத்துல ஒருத்தனாவே நினைக்க ஆரம்பிச்சுட்டேன்.''

''ஆனா சொந்தங்கள் மட்டும் அனாதைப் பையந் தானேங்கற மாதிரி மனசத் தைக்கற மாதிரி அப்பப்ப ஏதாவது பேசுவாங்க.''



''ஆரம்பத்துல அதுக்கெல்லாம் ரொம்பக் கோபப்படு வேன், ஆனா போகப்போக அம்மா அப்பாவுக்காக ஓரளவு சகிச்சுட்டுப் போக ஆரம்பிச்சேன்.''

''அதுக்கப்புறம் கொஞ்ச நாள்ளயே மத்தவங்க அந்த மாதிரி பேசறதெல்லாம் ஓரளவு குறைஞ்சு, நாளடைவுல சுத்தமா நின்னும் போயிடுச்சு.''

பாவம் அறியாத வயதிலேயே எத்தனை கஷ்டப்பட் டிருக்கிறான் என்று நினைத்த ஸ்ருதிக்கு மனது உருகிப் போயிற்று.

''ஒரு நல்ல பெரிய ஸ்கூல்ல என்னப் படிக்க வைச் சாங்க, நான் எதையாவது ஆசப்படறேன்னு குறிப்பாத் தெரிஞ்சுட்டாலே உடனே வாங்கிக் குடுத்துடுவாங்க.''

''ஆனாலும் எம்மனசுல எப்பவும் ஒரு வெறுமை இருந்துட்டே தான் இருக்கும்.''

''அது அப்பவும் அப்படியே தான் இருந்தது.''

''ஏன்?'' என்று அவனைப் பார்த்தாள் ஸ்ருதி.

''என்ன எதுக்காகக் கடவுள் இப்படிப் படைச்சாருங்கற ஆதங்கம் தான்.''

''அதுலயும் என்னை யாராவது பரிதாபமாப் பாத் தாலே எனக்கு ரொம்பவும் கோபம் வந்துடும், முடிஞ்ச அளவுக்கு அந்த மாதிரி ஆளுங்ககிட்டிருந்து விலகிப் போய்டுவேன்.''

''நான் அனாதையானதுல என்னோட தப்பு எதுவுமில் லன்னாலும், அந்த மாதிரி எண்ணத்தோட என்ன யாருமே பாக்கக் கூடாதுங்கறதுல ரொம்பவும் உறுதியா இருந்தேன்.''

''அதுக்காக என்னால அப்ப என்னென்ன செய்ய முடிஞ்சதோ, அதையெல்லாம் செஞ்சேன்.''

''ரொம்ப நல்லாப் படிச்சு, ஸ்கூல்ல எப்பவும் ஃபர்ஸ்ட் ரேங்க் தான் வாங்குவேன்.''

''கம்ப்யூட்டர்ல நிறைய கோர்ஸஸ் படிச்சு திறமைய வளத்துக்கிட்டேன்.''

''தமிழ், ஆங்கிலம் மாதிரியே இன்னும் நிறைய மொழிகள தப்பில்லாம எழுதப் பேசக் கத்துக்கிட்டேன்.''

''மொத்தத்துல அந்த வயசுல எனக்கு எதெல்லாம் பெரிசா பட்டுச்சோ அதையெல்லாம் செஞ்சேன்.''

''அதாவது அதுக்கெல்லாம் அம்மாவும், அப்பாவும் யோசிக்காம சந்தோஷமா உதவி செஞ்சாங்க.''

''ஆனாலும் அதுல எல்லாம் எம்மனசு கொஞ்சங்கூட திருப்தியடைல.''

''உலகத்துல நம்மள யாரும் அனாதைங்கற கண்ணோட்டத்துல பாக்கக் கூடாதுன்னா, நமக்குன்னு ஒரு தனி முத்திரை வேணும்னு அப்புறமாத்தான் புரிஞ்சுக் கிட்டேன்.''

''நல்லா உழைச்சு நிறைய பணம் சம்பாதிக்கணுங் கறதையும் தெரிஞ்சுக்கிட்டேன்.''

''அப்பா கூட இப்பிருக்கற நம்ம ஃபேக்டரிக்கு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் போய்டுவேன்.''

''எல்லாரும் வேல செய்யறதப் பாத்துப் பாத்து தொழில்ல நிறைய கத்துக்கிட்டேன்.''

''என்ன சந்தேகம் வந்தாலும் அப்பப்ப எல்லாரையும் கேட்டுட்டே இருப்பேன்.''



''அப்புறம் என்னப் பாத்தாலே பிடிக்காம எல்லாரும் ஓடிடுவாங்களோன்னு பயந்து, நானாகவே நிறைய புக்ஸ் படிச்சு சந்தேகங்களக் க்ளியர் பண்ணிக்குவேன்.''

''அதே மாதிரி நான் காலேஜ்ல எடுத்துப் படிச்ச சப்ஜெக்ட்டும் எலக்ட்ரானிக்ஸ் தான்.''

முன்னுக்கு வர வேண்டுமென்பதே குறியாக சிறு வயதிலிருந்தே எப்படியெல்லாம் உழைத்திருக்கிறான் என்று நினைத்த ஸ்ருதிக்கு சிவானந்தனின் மேல் மிகுந்த மரியாதை ஏற்பட்டது.

ஸ்ருதியின் முக பாவனையைப் பார்த்து, ''என்ன ரொம்பவும் போரடிக்கறேனா?'' என்று கேட்டான் சிவா னந்தன்.

''உங்கள நினைச்சா எனக்கு ரொம்பவும் பெருமையா இருக்கு சிவா.''

''அடடா இப்படின்னு தெரிஞ்சிருந்தா இன்னும் என்னோட வீரதீரப் பிரதாபங்களையும் நிறையக் கலந்து சொல்லியிருப்பேனே.''

''நான் நிஜமாதான் சொல்றேன் சிவா, இதுவே உங்க இடத்துல வேற யாராவது இருந்திருந்தா இந்த அளவுக்கு எல்லாமே செஞ்சிருப்பாங்களான்றது சந்தேகம் தான்.''

''அப்படி நான் பெரிசா எதையும் செஞ்சுடலயே'' என்று உணர்ச்சியற்ற குரலில் சொன்னான் சிவானந்தன்.

''அப்புறம் எனக்கு ஃபாரின் போய் படிக்கணும்னு ரொம்ப ஆசை, ஏன் வெறின்னு கூடச் சொல்லலாம்.''

''அதை எப்படியோ அம்மாவும், அப்பாவும் தெரிஞ் சுக்கிட்டாங்க.''

''அப்ப நான் பி.இ. எலக்ட்ரானிக்ஸ்ல செகண்ட் இயர் இன்ஜினியரிங் படிச்சுட்டிருந்தேன்.''

''அந்த வருஷம் தான் அம்மா இறந்தது.''

அதை சொல்லும் போது அவனது கண்களில் இருந்த வலி வெளிப்டையாகவே தெரிந்தது.

அவன் தன்னைச் சமாளித்துக் கொள்வதற்காக சில வினாடிகள் இடைவெளி விட்டு, ''எப்படி?'' என்று கேட்டாள் ஸ்ருதி.

''அவங்களுக்கு லங்க்ல ப்ராப்ளம், எனக்கு அவங்களத் தெரிஞ்ச நாள்லிருந்தே அதுக்காக அவங்க நிறைய மெடிசன்ஸ் எடுத்துக்கிட்டே இருப்பாங்க.''

''ஆனா அம்மா அந்த நோய்க்காக பெரிசா கவலை யெதுவும் பட்டுக்க மாட்டாங்க. அப்பாவும் ஓரளவு அப் படித்தான்.''

''ஆனா என்னால அப்படி இருக்க முடியாது.''

''சிட்டில இருக்கற எல்லாப் பெரிய பல்மனாலஜிஸ்ட் கிட்டயும் அப்பாயிண்ட்மென்ட் வாங்கிட்டு அம்மாவ அழைச்சுட்டுப் போவேன்.''

''ஹாஸ்பிட்டலுக்கு வர்றதுக்கே அம்மாவுக்குப் பிடிக் காது. அந்த அளவுக்கு நுரையீரல் பிரச்சனைக்காக அம்மா ட்ரீட்மெண்ட் எடுத்து எடுத்து நொந்து போயிருந்தாங்க.''

''தன்னோட நோய் சரியாகாதுன்னு தெரிஞ்சிருந்தும், எனக்காக சிரிச்சுக்கிட்டே நான் கூப்பிடும் போதெல்லாம் ஹாஸ்பிட்டலுக்கு வருவாங்க.''

''இந்த நோய் இனி சரியாகாது, முடிவு காலம் நெருங் கிட்டிருக்குன்னு எல்லா டாக்டர்சும் ஒரே மாதிரி சொல் லும்போதெல்லாம் எனக்கு எப்படியிருக்கும் தெரியுமா ஸ்ருதி?''



''கடைசியில நான் அப்பவே சொன்னேன் தான கண்ணான்னு அம்மா சிரிச்சுக்கிட்டே என்ன சமாதானப் படுத்த வேண்டியதாயிடும்.''

''கடவுள் மேல எனக்கு எந்த அளவுக்குக் கோபம் வரும் தெரியுமா?''

''என்னப் பத்து மாசம் சுமந்து பெத்தவ தான் யாருன்னே தெரியாது, பாரம்னு நினைச்சுத் தூக்கி வீசிட் டுப் போய்ட்டா.''

''ஆனா என்ன ஆசையா, அன்பா எடுத்து வளத்த இந்த அம்மாவுமா இல்லாமப் போகணும்? கூடவே கூடாது அவங்கள எங்கிட்டிருந்து பிரிச்சுடாதன்னு எனக்கு விவரந் தெரிஞ்ச நாள்லிருந்து முதல் தடவையா கடவுள்கிட்ட கண்ணீர் விட்டு வேண்டிக்கிட்டேன்.''

''எல்லாரும் சொல்ற மாதிரி கடவுள் ரொம்பப் பெரிய வர், அவர் நம்ம அம்மாவக் காப்பாத்திடுவார்னு எவ் வளவு நம்பினேன் தெரியுமா?''

பழைய நினைவுகளில் ஆழ்ந்தவாறு சிவானந்தன் சொல்லிக் கொண்டே போக, ஸ்ருதிக்குத் தான் கண் ணீரை அடக்க முடியாது போயிற்று.

''ஆனா அடுத்து வந்த மூணு மாசத்துல அம்மா இல் லாமலே போய்ட்டாங்க.''

''நான் அப்பாவுக்கு ஆறுதல் சொல்றது போய், அவர் எனக்கு சொல்லி சமாதானப்படுத்தத் தான் ரொம்பவும் சிரமப்பட்டார்.''

''சிவா'' என்று ஸ்ருதி அவனது கையைப் பிடித்துக் கொள்ள, தனது இரு கரங்களாலும் அவளது கரத்தை அழுந்தப் பற்றிக் கொண்டான் சிவானந்தன்.

சில வினாடிகளில் தன்னை சமாளித்துக் கொண்டு நடப்புக்கு வந்தவன், தான் பற்றியிருந்த ஸ்ருதியின் கரத்தை விடுவித்தான்.

அப்பொழுது தான் ஸ்ருதியின் கண்கள் கலங்கியிருப் பதையும் கண்டான்.

''ஸ்ருதி என்னமா இது, ரொம்ப வருஷங்களா என் மனசுக்குள்ளேயே அடைஞ்சு கிடந்தத சொல்லி உன் னையும் கஷ்டப்படுத்திட்டேன் ஸாரிமா.''

''அதெல்லாமில்ல சிவா'' என்று ஸ்ருதி சிரிக்க முயல, அவளைக் கண் இமைக்காது பார்த்தான் சிவானந்தன்.

அவனது பார்வை என்னவோ செய்ய, அவனைத் தொடர்ந்து பார்க்க முடியாமல் குனிந்து கொண்டாள் ஸ்ருதி.

''ஸ்ருதி.''

அவனது கனிவான அழைப்பு நெஞ்சைத் தொட, தன்னை சற்றே நிமிர்ந்து பார்த்தவளின் கன்னங்கள் வெட்கத்தில் லேசாக சிவந்திருந்ததைக் கண்டான் சிவானந்தன்.

தன்னையறியாமல் ஸ்ருதியை நோக்கி நீண்டு விட்ட தனது கரத்தை மீண்டும் இழுத்துக் கொண்டவன், மிக வும் சிரமப்பட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண் டான்.

''இதோ வர்றேன்'' என்று எழுந்து சென்றவன் இரண்டு கப் காபிகளுடன் சில நிமிடங்களில் திரும்பி வந்தான்.



ஸ்ருதியின் கைகளில் ஒன்றைக் கொடுத்தவன் மற் றொன்றைத் தான் எடுத்துக் கொண்டான்.

''காபி போடக் கூட உங்களுக்குத் தெரியுமா சிவா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் ஸ்ருதி.

''பின்ன ஃபாரின்ல நாமதான இதையெல்லாம் செஞ்சுக்கணும், அங்கெல்லாம் வீட்டு வேலைக்கு ஆள் வைக்கணும்னா, இங்கிருக்கற நம்ம சொத்தையெல்லாம் வித்துட்டுப் போய் தான் செலவு செய்ய வேண்டியதிருக் கும்.''

''அது சரிதான், ஆனாலும் இவ்வளவு பிரமாதமா நீங்க காபி போடுவீங்கன்னு நான் நினைச்சுக் கூடப் பாக்கல'' என்று ருசித்துக் குடித்தாள் ஸ்ருதி.

''ஆமா நீ என்னவோ பேசணும்னு சொன்னியே, என்ன?''

''அதுவா, ஒரு வாரம் லீவ் கேக்கலாம்னு இருந்தேன் சிவா.''

''சரி, ஆனா இப்ப வேண்டாமாக்கும்.''

''அத அப்பவே கேட்டிருப்பேன், ஆனா அப்ப நீங்க பாக்கக் கொஞ்சம் கோபமா இருந்த மாதிரி தெரிஞ்சீங்க. அதுதான் அப்ப அப்படி சொன்னேன்.''

''நிஜமாவா?''

''ஆமாம் சிவா, ஆனா இப்ப லீவுக்கே அவசியமில் லாமப் போயிடுச்சு.''

''ஏன்?''

''எங்க சொந்த ஊர்ல ஒரு ரெண்டு கல்யாணம் ஒன்னா வருது, கண்டிப்பாப் போயே ஆக வேண்டியது. போக

வர ரெண்டு நாள் போக அங்க இடையில ஒரு நாலுநாள் இருந்தே ஆகணும்.''

..........

''என்ன மட்டும் எப்படித் தனியா விட்டுட்டுப் போற துன்னு அம்மா ரொம்பவும் யோசிச்சாங்க. ஆனா இப்ப அப்பா வழிப் பாட்டி ஊர்ல இருந்து நாளைக்கு வர்றாங் களாம், அதனால எனக்குத் துணையா அவங்கள விட் டுட்டுட்டு அம்மா மட்டும் போகப் போறாங்க.''

''அப்பக் கல்யாணத்துக்கு உங்க பாட்டி போக வேண் டாமா?''

''அவங்க ரொம்ப வயசானவங்க சிவா, அவங்களால பத்து மணி நேரமெல்லாம் தொடர்ந்து உக்காந்து ட்ராவல் பண்ண முடியாது. அதனால அங்க பெரியப்பா வீட்ல பாட்டி தனியா இருக்கப் போறாங்க இங்க அம்மா கல் யாணத்துக்குப் போனதுக்கப்புறம் நான் தனியா இருக்கப் போறேன்.''

''அதனால பாட்டி இங்க வந்துட்டா அவங்களுக்கு நீயும், உனக்கு அவங்களும் ஒரு வாரத்துக்குத் துணை யாக்கும்.''

''யெஸ் கரெக்ட், அப்படின்னு அம்மாவும், பெரியம் மாவும் சேர்ந்து டிஸைட் பண்ணியிருக்காங்க. நாளைக்கு மதியம் பாட்டியக் கொண்டு வந்து விட்டுட்டு அதே கார்லயே அம்மாவக் கூட்டிட்டுப் போய்டுவாங்க சிவா. அப்புறம் அங்க பெரியம்மா வீட்லிருந்து சொந்தங்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து நாளைக்கு நைட் ட்ரெய்ன்ல கல்யாணத்துக்குக் கிளம்பறாங்க.''

''அப்ப நாளைக்கு உனக்கு லீவ் தேவைப்படும் போல.''



''ஆமாம்'' என்று சிரித்தவள், ''ஆனா ஃபுல் டே தேவைப்படாதுன்னு நினைக்கறேன்'' என்றாள்.

சிவானந்தன் தான் குடித்து முடித்து விட்டு காலி காபிக் கப்பைக் கீழே வைத்திருக்க தனது கையிலிருந்த காபியைக் குடிக்க ஆரம்பித்தாள் ஸ்ருதி.

''அப்புறம் என்ன நடந்தது சிவா?''

விட்ட இடத்தை யோசிப்பது போல ஒரு வினாடி பார்த்தவன், ''அப்புறம் சோர்ந்து போகும் போதெல்லாம் எனக்கு அப்பாவும், அவருக்கு நானுமா ஆறுதல் சொல் லிக்குவோம்'' என்றான்.

''அடுத்து வந்த ரெண்டு வருஷத்துல நான் பி.இ. படிச்சு முடிச்சேன்.''

''அப்பா மேல படிக்கறதுக்காக என்ன ஃபாரின் போகச் சொன்னார், ஆனா நான் அவர மட்டும் தனியா விட் டுட்டுப் போகவே முடியாதுன்னு சொல்லிட்டேன்.''

''என்ன நீ மதிக்கறதா இருந்தாப் போய்ட்டு வான்னு அப்பாவும் ஒரேயடியா நின்னுட்டார்.''

''அதுக்கப்புறம் நான் ஃபாரின் போய்ட்டு வந்த பின்னாடி நடந்ததெல்லாம் தான் உனக்கே தெரியுமே.''

''ஆனா இந்த நாலஞ்சு நாளா நீங்க பாக்க ஒரு மாதிரியா இருக்கீங்க சிவா.''

''அப்படியா'' என்றவன், கையைத் திருப்பி மணி பார்த்தான்.

''சரி வா ஸ்ருதி உனக்கும் லேட்டாச்சு கார்ல போய்ட்டே பேசலாம்'' என்று சிவானந்தன் எழுந்திருக்க, ஸ்ருதியும் எழுந்தாள்.

''ஒரு நிமிஷம்'' என்று உள்ளறைக்குப் போனவன் கையில் சில பைல்களோடு திரும்பி வந்தான்.

அதை ஸ்ருதி வாங்கிக்கொள்ள, பழையபடி வீட்டைப் பூட்டிவிட்டு இருவரும் காருக்கு வந்தனர்.

''உன்ன வீடு வரைக்கும் கொண்டு வந்து விட்டுட் றேன்'' என்று சிவானந்தன் காரை ஸ்டார்ட் செய்ய, ''உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்?'' என்றாள் ஸ்ருதி.

''சிரமமா? உங்கிட்ட எல்லாத்தையும் சொல்லிட்ட துல. எனக்கு மனசுக்கு எவ்வளவு ஃப்ரியா இருக்கு தெரியுமா?'' என்றவன், ''அதோட உங்கூட இன்னும் கொஞ்சம் பேச வேண்டியதிருக்கு'' என்றான்.

''அப்படின்னா எங்கிட்ட இன்னும் நிறைய சொல் லுங்களேன் சிவா'' என்று ஸ்ருதி சொல்ல, கண்களில் சிரிப்புடன் அவளைப் பார்த்தான் சிவானந்தன்.

''நிறைய சொல்ல எனக்கும் ஆசைதான். ஆனா...''

''ஆனா என்ன?''

''ஒன்னுமில்லம்மா. அப்புறம் இங்க புது ஃபேக்டரில நாளைக்கு மறுநாள்ல இருந்து வேல ஸ்டார்ட் ஆகுது ஸ்ருதி.''

''என்ன திடீர்னு புது ஃபேக்டரி'' என்று கேட்டு விட்டவள், பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

அதைப் பற்றியெல்லாம் உனக்கென்னவென்று கேட்டு விடுவானோ என்ற பயம்.

ஆனால் ஸ்ருதி பயந்தது போல அவன் எதையும் கேட்டு விடாததோடு, அவள் கேட்பதற்காகக் காத்திருந் தாற் போல அதற்கு உடன் பதில் சொல்லவும் செய்தான்.



''ஏன்னா பழைய ஃபேக்டரிய இனிமேல் அப்பா தான் பாத்துக்குவார்.''

''நீங்களும் வருவீங்க தான?''

சில வினாடிகள் எதுவும் சொல்லாமல் பாதையில் கவனமாகக் காரை ஓட்டியவன், ''அதெல்லாம் வரு வேன்'' என்றான்.

''என்ன ப்ராப்ளம் சிவா?'' என்று கேட்டவளைத் திரும்பிப் பார்த்தான் சிவானந்தன்.

''அப்பாவுக்கு தங்கைகள் மூணு பேர் ஸ்ருதி. அதுல ஸ்ரீநிதியோட அம்மா தான் கடைசி.''

''சரி.''

''அத்தைங்க மூணு பேருக்குமே பொண்ணுங்க தான், அவங்க எல்லாரோட விசேஷங்களுக்கும் அப்பா தன் னால முடிஞ்ச அளவுக்கு சீர் வரிசைகள் எல்லாமே நல்லா தான் செஞ்சுட்டிருக்கார். அதாவது எனக்குத் தெரிஞ்ச வரைக்கும்.''

..........

''ஆனா அத்தைங்க எல்லாரும் சேந்து நீங்க எங்களுக் குப் பெரிசா எதுவுமே செய்யலன்னு அப்பாவ ஒரு வழி பண்ணிட்டிருக்காங்க. அதோட...''

''அதோட? என்ன சிவா?''

''நம்ம அப்பாவோட சொத்த ஒரு அனாதப் பயலுக்கு நீங்க எழுதி வைக்கறதையெல்லாம் பாத்துட்டு எங்க ளால சும்மா இருக்க முடியாதுன்னு சொல்லிட்டிருக்காங்க.''

அதை சொல்லும்போது அவனது உடலும் கைகளும் விறைத்து, பிறகு மீண்டும் பழைய நிலைக்கு வந்ததை ஸ்ருதியால் உணர முடிந்தது.

''அங்கிள் என்ன சொல்றார்?''

''பிரச்சனையே இப்ப அங்கதான், அப்பாவோட சொத்துல உங்க மூணு பேருக்கும் கல்யாணம் பண்ணி வெச்சு எல்லா சீர் முறைகளையும் சிறப்பா செஞ்சு குடுத் துட்டேங்கறது உங்க மனசாட்சிக்கே தெரியும். இப்ப இருக்கறதெல்லாம் என்னோட சுய சம்பாத்தியம் அதப் பத்திக் கேள்வி கேட்க உங்க யாருக்குமே எந்த உரிமை யும் கிடையாதுன்னு அப்பா ஒரேயடியா நிக்கறார்.''

''அத்தைங்க ரொம்ப நாளாவே இத சொல்லிட்டுத் தான் இருப்பாங்க போலிருக்கு. ஆனா அப்பா தான் அத வெளிய சொல்ல முடியாம மனசுக்குள்ளயே வெச்சு உருகிட்டிருக்கார்.'

''அப்புறம் உங்களுக்கெப்பிடி இந்த விஷயம் தெரிஞ் சது?''

''அத்தைங்க எல்லாரும் அப்பாகூட வந்து பேசிட் டிருந்தத நான் அன்எக்ஸ்பெக்டடாக் கேக்க வேண்டிய தாயிடுச்சு.''

அதற்கு மேலும் அவர்கள் நிறையப் பேசியிருக் கிறார்கள் என்பதைக் கல் மாதிரி இறுகியிருந்த அவனது முகம் காட்டிக் கொடுத்தது.

''அப்பா கூட உங்களுக்கெதுவும்...''

''அவரு எனக்கு அப்பா மட்டுமில்ல கடவுள் மாதிரி. பாவம் என்னத் தத்தெடுத்த பாவத்துக்காக அவரு இன்னும் எப்படியெல்லாம் கஷ்டப்படணுமோ தெரியல, ஆனா இனிமேல் நான் அதுக்கெல்லாம் விடமாட்டேன்.''

.............



''முதல்ல இருந்ததுக்கு இப்ப பேக்டரி நல்லாப் போக ஆரம்பிச்சுடுச்சு. இதஇத இப்பிடி இப்பிடி செய்யுங்கன்னு அப்பாவுக்கு எல்லாத்தையும் முழுசா சொல்லிக் கொடுத் துட்டு நான் விலகிக்கப் போறேன்.''

தொழில் மிகவும் மோசமாகி விட்டதே. இனி மீளு வோமா என்ற பயம் இன்னும் தந்தைக்கு மனதிற்குள் நிறைய இருப்பது சிவானந்தனுக்குப் புரியவே செய்தது.

இனி அப்படிப் பயப்படத் தேவையில்லை என்பதை முதலில் தந்தைக்கு உணர்த்த வேண்டும்.

தொழிலில் புதிதாக எதையும் செய்யா விட்டாலும் கூட, தான் சொல்கிற முறைகளை மற்றும் பின்பற்றி னால் போதும் நாளுக்கு நாள் வருமானம் அதிகமாகத் தான் ஆரம்பிக்கும் என்பதை முதலில் அவருக்குப் புரிய வைக்க வேண்டும்.

அவர் ஆரம்பித்து வளர்த்த தொழில் தான் என்றாலும் வயதின் முதிர்வாலும், வாழ்க்கையில் பட்ட சில அடி களாலும் தந்தை தன்னம்பிக்கையை சுத்தமாக இழந்து விட்டாரே பாவம் என்று சிவானந்தனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

இனி தந்தையை நன்றாக வைத்துக்கொள்ள வேண்டும்.

இனிமேல் அவரை யாரும் எதற்காகவும் துன்புறுத் தாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டுமென்று மனதிற் குள் உறுதி கொண்டான்.

தந்தையின் இளகிய மனதைப் பயன்படுத்தி ஏமாற் றத்தான் தொழிலில் ஆரம்பித்து அனைவருமே தயாராக இருக்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்கள் யாரும் தந்தையை நெருங் காதவாறு மகனாகிய தான்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தொடர்ந்து சில நாட்கள் தன்னுடன் கூட இருந்து பார்த்தாலே, இனி தொழில் நிச்சயமாக சரியாது என்ற நம்பிக்கை தந்தைக்கும் வந்துவிடும்.

அதற்குப் பிறகு தொழிலில் வருகிற வருமானத்தை எடுத்து அத்தை குடும்பங்களுக்குச் செய்ய வேண்டிய சீர் முறைகளையும், தான் இஷ்டப்பட்ட செலவுகளையும் தன்னை எதிர்பார்க்காமலே அவருடைய விருப்பத்திற்கு அவர் செய்து கொள்ளலாம்.

இன்றே தந்தையுடன் கலந்து பேசி அவர் நல்லபடி யாகப் புரிந்து கொள்ளும் விதமாக அனைத்தையும் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நினைத்துக் கொண் டான் சிவானந்தன்.

''ஸ்ருதி.''

''சொல்லுங்க சிவா.''

''வர்ற சன்டே, புது ஃபேக்டரில வேலையிருக்கு, உன்னால வர முடியுமா?''

''ஷ்யூர் சிவா, எப்ப வரணும்னு மட்டும் சொல்லுங்க.''

''டைம் நாளைக்கு சொல்றேன்.''

''எனக்கும் நாளைக்கு ஈவினிங் ஒரு டூ அவர்ஸ் பர்மிஷன் மட்டும் குடுக்கறீங்களா?''

''எடுத்துக்கோ.''

''சன்டேன்னு மட்டும் இல்ல சிவா, உங்களுக்கு எப்ப என்ன ஹெல்ப் வேணும்னாலும் சொல்லுங்க.''



''அட அப்படிப் பாத்தா எனக்கு இப்பவே ஒரு உதவி வேணும்.''

''என்ன சொல்லுங்க?'' என்று ஆவலுடன் கேட்டாள் ஸ்ருதி.

''சொல்லிடுவேன். ஆனா நீ அத எப்படி எடுத்துக் குவேன்னு தான் தெரியல.''

''அதெல்லாம் நல்லாதான் எடுத்துக்குவேன், சொல் லுங்களேன்.''

''கூடிய சீக்கிரம் நிச்சயமா சொல்வேன், உன் வீடு இருக்கற டர்னிங் வந்துடுச்சுமா.''

மனம் படபடக்க, இறங்க மனதில்லாமல் அவனையே பார்த்தாள் ஸ்ருதி.

''இல்ல உன் வீட்லயே கொண்டு வந்து விட்டுடட் டுமா?''

''அச்சச்சோ வேண்டாம் சிவா'' என்று இறங்க ஆயத்த மானாள் ஸ்ருதி.

''ஒரு நிமிஷம்'' என்று சிவானந்தன் சொல்ல மிகுந்த ஆவலுடன் அவனைப் பார்த்தாள் ஸ்ருதி.

''இந்த டிரஸ்ல நீ ரொம்ப அழகா இருக்க'' என்று அவன் சொல்ல, மேலும் அவன் சொல்லப் போகும் வார்த்தை களுக்காக உள்ளம் படபடக்கக் காத்திருந்தாள் ஸ்ருதி.

''இன்னும் என்ன இறங்கிக்கோ'' என்று சிவானந்தன் சொல்ல, ''க்கும் அது எனக்கும் தெரியும்'' என்று சற்றே எரிச்சல் கலந்த கோபத்துடன் காரை விட்டு இறங்கிக் கொண்டாள்.

ஸ்ருதியின் பாவனையில் சிரிப்பு வந்தாலும், சிரமப் பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டான் சிவானந்தன்.

ஸ்ருதி விடைபெற்றுக் கொண்டு செல்ல, அவள் செல்வதைப் பார்வையிலிருந்து மறையும் வரை பார்த்திருந்து விட்டுக் காரை ஸ்டார்ட் செய்தான்.

என்ன முயன்றும் ஸ்ருதி ஆவலுடன் தன்னைப் பார்த்தது தான் சிவானந்தனுக்கு மீண்டும் மீண்டும் நினைவு வந்து கொண்டே இருந்தது.

உடனே அவளை அழைத்துப் பேச வேண்டும் போலத் துடித்த மனதை அரும்பாடுபட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

வீட்டிற்குப் போய் சேர்ந்திருந்த ஸ்ருதியும் சிவானந்தனின் நிலையில் தான் இருந்தாள்.

அதிலும் அன்றைய மாலைக்குப் பிறகு, தன் மனதை இனி அவன் அறிந்து கொள்ளாதவாறு மறைத்துக் கொள்வது தன்னால் சுத்தமாக முடியாத ஒன்று என்பதையும் புரிந்து கொண்டாள்.

''என்ன ஏதோ யோசனைலயே இருக்க ஏதாவது பிரச்சனையா?'' என்று தனது தாய் இரண்டு முறை கேட்டு விட்ட பிறகு தான் ஸ்ருதியால் ஓரளவுக்காவது நடப்புக்கு வர முடிந்தது.

ஆனால் அவையனைத்துமே சற்று நேரத்திற்குத் தான்.

மீண்டும் சிவானந்தனைச் சுற்றியே எண்ணம் செல்ல, தாய்க்காக உண்டதாகப் பெயர் செய்துவிட்டு ''இன்னைக்கு என்னவோ ரொம்ப டயர்டா இருக்குமா நான் தூங்கப் போறேன்'' என்று படுக்கைக்குப் போய் விட்டாள் ஸ்ருதி.



தூங்குவதற்காகப் படுக்கைக்கு வர மட்டும் தான் அவளால் முடிந்தது, அதோடு தூங்குவதற்கு அவளும் முயன்றாள் இல்லை.

அவளது நெஞ்சம் முழுக்க அவளுடைய சிவானந்தனே வியாபித்து இம்சித்துக் கொண்டிருந்தான்.

## 15



முதல் நாள் சொல்லிக் கொண்டது போலவே அன்று காலையில் தனது தந்தையுடன் கடைக்கு வந்திருந்த சிவானந்தன், அப்போதைய தொழில் நடப்பைப் பற்றி அவருடன் பேசிக் கொண்டிருந்தான்.

ஆனால் வழக்கத்திற்கு மாறாக அன்றைக்கு சிவானந்தனை தூரத்தில் பார்க்கும் போதே மனம் படபடத்து முகம் சிவந்து போனது ஸ்ருதிக்கு.

கடவுளே இப்பொழுதே இப்படியென்றால், இனி அவனை எப்படி நேருக்கு நேர் எதிர்கொள்ளப் போகிறேனென்று நினைத்த ஸ்ருதிக்கு மனம் மேலும் பரபரத்தது.

முந்தைய நாள் மாலைக்குப் பிறகு தான் சிவானந்தனின் மேல் தனக்கிருக்கும் காதலை ஸ்ருதியால் முழுமையாக உணர்ந்து கொள்ள முடிந்தது.

ஆனால் ஒன்று மட்டும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

சலனப்படாமல் அவனை நேருக்கு நேர் பார்ப்பது இனி தன்னால் நிச்சயமாக சாத்தியப்படாது என்பது தான் அது.

ஆனால் சிவானந்தனுக்கு அப்படியெல்லாம் எதுவுமே தோன்றவில்லை போல, அந்த அளவிற்கு மும்முரமாக வேலையில் மூழ்கி விட்டிருந்தான்.

வேலை சம்பந்தமாக இரண்டு முறை அவன் தன்னை அழைத்துப் பேசிய போதும், சிவனாந்தனிடம் வித்யாச மாக எதுவும் காணப்படவில்லை.

ஒரு மெல்லிய புன்னகைக்குக் கூடவா பஞ்சமாகி விட்டதென்று நினைத்த ஸ்ருதி, பாவம் அவனுக்கு ஏற் கனவே எத்தனையோ பிரச்சனைகள் என்றும் நினைத்துக் கொண்டாள்.

சிவானந்தன் கேட்டிருந்த ஒரு ரிப்போர்ட்டை அவனது டேபிளில் வைப்பதற்காக உள்ளே சென்ற ஸ்ருதியை சதாசிவம் அழைத்துப் பேச, தானும் நிமிர்ந்து பார்த்தான் சிவானந்தன்.

அருகில் சென்ற ஸ்ருதி, இருவருக்கும் விஷ் செய் தாள்.

''நீ வந்து மூணு மாசமாச்சாமா?'' என்று பெரிய எம்.டி. சதாசிவம் கேட்க, ''ஆமாம் ஸார்'' என்றாள் ஸ்ருதி.

''வேலையெல்லாம் பழகிட்டயா?''

''ஓரளவு பழகிட்டேன் ஸார்.''

''நீ எடுத்துக் குடுத்திருக்கிற ரிப்போர்ட்ஸ் எல்லாத் தையும் பாத்தேன், ரொம்பப் பிரமாதமா செஞ்சிருக்க.''

''தேங்க்யூ ஸார்.''

''ஏன் சிவா...'' என்று தந்தை அழைக்க, ''சொல்லுங் கப்பா'' என்றான் அவன்.

''கடைசியா இன்டர்வியூக்கு வந்திருந்த ஒரு ஏழெட் டுப் பேர்ல ஸ்ருதிய மட்டும் தான் செலக்ட் செஞ்சேன்.



அந்த அளவுக்கு எல்லாக் கேள்விகளுக்கும் ஓரளவு சரி யான பதில் வந்தது, வேலையும் எப்பிடி பரவாயில்ல தான?''

''நிச்சயமாப்பா'' என்று தன்னைப் பார்த்த சிவானந் தனின் கண்களில் மேலும் ஏதோ இருப்பது போலப் பட்டது ஸ்ருதிக்கு.

''ஏன்னா உன் வேல ரொம்ப நல்லா இருக்குன்னு இவர் சொன்னார்'' என்று ஸ்ருதியிடம் மகனைக் காட்டி சொன்னவர், பரவாயில்லையே சிவானந்தனின் வாயிலா கவே பாராட்டைப் பெற்று விட்டாயே அப்பொழுது உன் திறமையை மெச்சத்தான் வேண்டும் என்பதைப் போலப் பார்த்தார் சதாசிவம்.

''நான் சொன்ன டீடெய்ல்ஸ எடுத்துட்டயா?'' என்று சிவானந்தன் கேட்க, ''இன்னும் ஒன் அவர்ல எடுத்து முடிச்சுடுவேன் ஸார்'' என்றாள் ஸ்ருதி.

''சரி நீ போய் வேலையப் பாருமா'' என்று சதாசிவம் சொல்ல, ''தேங்க்யூ ஸார்'' என்று அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள் ஸ்ருதி.

இரவு உணவுக்காக இரண்டு ப்ளேட்களை எடுத்து வைத்து விட்டுத் தந்தையை சாப்பிட அழைத்தான் சிவானந்தன்.

சில வினாடிகளில் தந்தை சாப்பிடுவதற்காக வந்து அமர்ந்திருக்க, இருவருக்கும் தானே பரிமாறினான்.

''பாட்டியம்மாவோட சமையல் உனக்குப் புடிச்சிருக்கு தான சிவா?''

''ஆமாம்பா.''

''ஆனா உப்பு, காரம், எண்ணெய் எதுவும் இருக்காது இல்லையா?''

''இல்லையேப்பா, எல்லாமே சரியா ரொம்ப நல்லா தான் இருக்கு.''

''எங்க, எப்பப் பார்த்தாலும் உப்புக் காரத்த குறைக்கச் சொல்லி எனக்காக சொல்லிட்டே இருக்கயாமே. உப்பு சப்பே இல்லாத சமையலை இந்த வயசுலயே நீ ஏம்பா சாப்பிடணும்?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லப்பா, எந்த வயசா இருந்தாலும் அதையெல்லாம் குறைவா சேத்திக்கறது தான் உடம்புக்கு ரொம்ப நல்லது. அப்புறம் நாளைக்குக் காலைல நாலு மணிக்கு புது ஃபேக்டரி பூஜைக்குக் கிளம்பணும்பா.''

''எத்தன பேர் வருவாங்க கண்ணா?''

''ஒரு பத்துப் பேர் வருவாங்கப்பா.''

'எதுக்கு தேவையில்லாம கஷ்டப்பட்டற' என கேட்பதற்காக வாயைத் திறக்கப் போனவர், பிறகு எதையும் கேட்காமல் சாப்பிட ஆரம்பித்து விட்டார்.

''சிவா.''

''என்னப்பா?''

''அவங்கெல்லாம் அப்படிப் பேசினதுல உனக்கெதுவும் சங்கடம் இல்லையேப்பா?''

''என்னப்பா நீங்க? உங்களுக்குத் தங்கச்சிங்கன்னா எனக்கு அத்தைங்க தானப்பா, அதோட உங்கள கேக்க அவங்களுக்கு எல்லா உரிமையும் இருக்குப்பா.''

''என்னடா உரிமையிருக்கு'' என்று கோபத்தில் குரலை உயர்த்திவிட்டவர், பிறகு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.



தந்தையைப் பார்க்கப் பாவமாக இருந்தாலும், அப்போதைக்கு சிவானந்தன் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

தனது தங்கைகள் இந்த அளவிற்குப் போவார்களென்று, அவரும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார் பாவம்.

''நீ உன்னோட திறமையாலயும், உழைப்பாலயும் தொழில மேல கொண்டு வராம இருந்திருந்தா இந் நேரம் சாப்பாட்டுக்கே வழியில்லாம போயிருக்கும்பா.''

''கவலப்படாதீங்கப்பா, என்னோட வயசுக்கு நான் இன்னும் ஆயிரம் மடங்கு கூட உழைக்கலாம்.''

''அதோட அத்தைங்கள தயவு செஞ்சு மன்னிச்சுடுங்கப்பா. நீங்க அவங்க மேல கோபப்பட, அவங்களுக்கு எம்மேல இருக்கற கோபம் இன்னும் அதிகம் தான் ஆகும்.''

..............

''அப்புறம் நான் இப்ப எதையும் பெரிசா செஞ்சுடலப்பா, நம்ம தொழில மட்டும் பழையபடி கொண்டு வந்திருக்கேன் அவ்வளவுதான். இதையெல்லாம் நீங்க பெரிய விஷயமா எடுத்துப் பேசினா, அப்புறம் நீங்க எனக்கு செஞ்சுட்டிருக்கறதயெல்லாம் நான் எந்தக் கணக்குலப்பா சேத்துப் பாப்பேன்?''

''அதோட நீ இன்னொரு விஷயத்தையும் தெரிஞ்சுக்கணும் சிவா'' என்று தந்தை சொல்ல, அவரை நிமிர்ந்து பார்த்தான் சிவானந்தன்.

''உன் தாத்தா வெச்சுட்டுப் போன முழு சொத்தும் இல்லாம, என்னோட சுய சம்பாத்தியத்துலயும் பாதிக்கும் மேல நான் உன் அத்தைங்களுக்காக செலவு

செஞ்சிருக்கேன். உன் அம்மா இருக்கற வரைக்கும் என்ன விடவும் அவ தான் நிறைய செஞ்சிருப்பா.''

..............

''நான் உனக்கு செய்யறது பிடிக்காத ஒரே காரணத் துக்காக மட்டும் தான் அவங்கெல்லாரும் அப்படி நடந் துக்கறாங்க. அதுக்கும் மேல இன்னும் எவ்வளவு செஞ்சாலும் அவங்கள திருப்திப்படுத்தவும் முடியாது.''

''அது சரிப்பா, ஆனா எந்தக் காரணத்துக்காகவும் நீங்க அவங்க மேல கோபப்படாதீங்கன்னு மட்டும் தான் நான் சொல்றேன்.''

''அதெல்லாம் சரிதான், ஆனா அவங்களுக்குன்னு ஒரு லிமிட் இருக்கு அதத்தாண்டி அவங்க வந்தா, அதுக்கப்புறம் நீ என்னக் குத்தம் சொல்லிப் பலனில்ல.''

...........

சாப்பிட்டு முடித்து விட்டுத் தந்தை எழுந்து செல்ல, அனைத்தையும் ஒதுக்கி வைத்தான் சிவானந்தன்.

# 16



தோட்டத்தில் அந்த வாரம் முழுக்க விழுந்திருந்த குப்பைகளை சுத்தம் செய்வதற்காகக் கைகள் பரபரத் தாலும், சிவானந்தனோடு புது ஃபேக்டரிக்கு செல்லும் ஆசையே மனதிற்குள் மேலோங்கியிருந்தது ஸ்ருதிக்கு.

ஒன்பது மணிக்கு அவனே வந்து பிக்கப் செய்து கொள்வதாகச் சொல்லியிருந்தான்.



விடுமுறை நாளென்றும் பாராமல் ஆறு மணிக்கு முன்பே படுக்கையை விட்டு எழுந்திருந்தாள் ஸ்ருதி.

காலைக் கடன்களை முடித்துவிட்டு வந்து, காபி போட்டுப் பாட்டிக்குக் கொடுத்து விட்டுத் தானும் எடுத்துக் கொண்டாள்.

தனது தாய் திருமணத்திற்கு சென்றிருக்க, வீட்டு வேலைகள் அனைத்தையும் தானே செய்தாள் ஸ்ருதி.

ஓடியாடி வேலை செய்ய முடியாவிட்டாலும் ஓரளவு அனைத்து வேலைகளையும் பாட்டியும் மெதுவாகச் செய்து கொடுக்க, ஸ்ருதிக்கு அது மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

காலை டிபனுக்காக பாட்டி இட்லி அவித்து வைத் திருக்க, மிக்ஸியில் சட்னியை அரைத்து எடுத்தாள் ஸ்ருதி.

எப்பொழுதும் போல சிக்கன், மட்டன் என அனைத் தும் வீட்டிற்கே வந்திருக்க, ஒரு வினாடி யோசித்து விட்டு சிக்கனை மட்டும் வாங்கிக் கொண்டாள் ஸ்ருதி.

வெங்காயம், இஞ்சி, பூண்டு என அனைத்தையும் பாட்டி அரைத்துக் கொடுக்க, ஒரு மணி நேரத்தில் சிக்கன் பிரியாணியை தயார் செய்து முடித்தாள்.

பிறகு அதை சூடாக ஹாட் டிபன் பாக்ஸில் போட்டு மதியத்திற்கு எடுத்துக் கொண்டு வெங்காயத் தயிர் பச்சடியுடன் தயாராக எடுத்து வைத்தாள்.

மணி எட்டுக்குப் பக்கம் ஆகியிருக்க, போய்க் குளித்துக் கிளம்பி எட்டு ஐம்பத்தைந்திற்கே பாட்டியிடம் சொல்லி விட்டுத் தயாராக வெளியே வந்து காத்திருந்தாள்.

சொன்னதைப் போலவே ஒன்பது மணிக்கு சிவானந் தன் வந்துவிட, வீட்டிற்குள் அழைத்தாள் ஸ்ருதி.

''இல்லமா இன்னொரு நாளைக்குப் பாக்கலாம், நீ ரெடியா, கிளம்பலாம் தான?''

''நான் ரெடி தான், ஒரு நிமிஷம்'' என்று உள்ளே சென்று தனது பாட்டியிடம் சொல்லிவிட்டுக் காருக்கு வந்தாள் ஸ்ருதி.

''கைல என்ன?''

காருக்குள் ஏறி அமர்ந்தபின், ''லஞ்ச்'' என்று சிவா னந்தனைப் பார்த்தாள்.

''இதெல்லாம் உனக்கே கொஞ்சம் ஓவராத் தெரியல?''

''எது?''

''பத்துப் பேர் சாப்பிடலாம் போலிருக்கு, இத நீ ஒருத்தி மட்டும் சாப்டா உலகம் தாங்குமா?''

''நான் எடுத்துட்டு வந்ததே உங்களுக்காகத் தான்.''

''ஓ, உன்ன மாதிரியே என்னயும் நினைச்சுட்டயாக்கும்.''

''ஹலோ டிபன் பாக்ஸ் தான் பெரிசு, உள்ள லஞ்ச் எப்பவும் போலத்தான் இருக்கு.''

''நானும் அதத்தான் சொல்றேன், எப்பவும் போலவே வெளிய வந்தப்பவும் சாப்பிடாட்டா என்ன?''

''போதும் சிவா விளையாட்டு, நீங்க டிபன் சாப்டாச்சா?''

''ஏதோ என்னளவுக்கு சாப்டேன்.''

''பின்ன எல்லாரும் ஊருக்கெல்லாம் சேத்து வெச்சா சாப்புட்றாங்க?''

''எல்லாரப் பத்தியும் எனக்குத் தெரியாது ஆனா நீ...'' என்று சிவானந்தன் சொல்லி முடிப்பதற்குள், பொய்க் கோபத்துடன் அவனது கையைக் கிள்ளினாள் ஸ்ருதி.

''என்ன ஐயா இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருக் கீங்க?''

''ஆமாம்மா'' என்று சந்தோஷமாக சொன்ன சிவானந் தனைப் பார்த்தாள் ஸ்ருதி.



''என்ன சிவா குட் நியூஸ், எனக்கும் சொல்லுங்களேன்.''

''உனக்கு சொல்லாமலா, எனக்கு மேரேஜ் ஃபிக்ஸ் ஆகியிருக்குமா.''

சிவானந்தன் சிரிக்காமல் சொன்ன விதத்தில், அதை முழுமையாக நம்பி விட்டாள் ஸ்ருதி.

''நிஜமாவா?''

''திடீர்னு அப்பா கூப்பிட்டுச் சொல்லும்போது உன்ன மாதிரி தான் என்னாலயும் நம்பவே முடியல ஸ்ருதி.''

''ஸ்ருதியின் முகம் விழுந்துவிட, சிவானந்தனுக்கு அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது. ஆனாலும் அவன் ஸ்ருதியிடம் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

இன்னும் கொஞ்சம் சீண்டினால் உடைந்து விடுவாள் போலிருந்தவளிடம், அவன் மேலும் எதையும் சொல்ல வில்லை.

''இதெல்லாம் எப்ப நடந்தது?''

மெல்லிய குரலில் ஸ்ருதி கேட்க, ''ரெண்டு நாளைக்கு முன்னாடி'' என்றான் சிவானந்தன்.

மேலும் பதினைந்து நிமிடங்களில் கார் பேக்டரியை அடைந்திருக்க, மனமே இல்லாமல் இறங்கினாள் ஸ்ருதி.

பூட்டைத் திறந்ததும் உள்ளே சென்ற ஸ்ருதி, அங் கிருந்த சோபாவில் சென்று அமர்ந்தாள்.

''வேல உள் ரூம்ல தான்'' என்று கதவை உள் பக்க மாகத் தாளிட்டான் சிவானந்தன்.

''சரி நான் உள்ள போய் வேலையப் பாக்கறேன், நீயும் வா'' என்று உள்ளே செல்லப் போனான்.

''சிவா ஒரு நிமிஷம்.''

திரும்பி ''என்ன'' என்று கேட்டான்.

''நான் உங்ககூட கொஞ்சம் பேசணும்.''

''என்னமா சொல்லு'' என்று அவளருகில் சென்று அமர்ந்தான் சிவானந்தன்.

''இந்தக் கல்யாணத்துல உங்களுக்கு சம்மதமா?''

''ஆமா ஸ்ருதி, அப்பாவே கூப்பிட்டுச் சொல்லும் போது நான் என்ன செய்ய முடியும் சொல்லு?''

..................

''அதுவும் அந்தப் பொண்ணு பாக்கறதுக்கு எவ்வளவு அழகா இருக்கா தெரியுமா? எனக்கு அவளப் பாத்ததுமே புடிச்சுப் போச்சு.''

''ஸ்ருதி என்னமா?''

''நீங்க சும்மாதான சொல்றீங்க, ஆமாந்தான சிவா?'' என்று கண்களில் உயிரைத் தேக்கி அவனைப் பார்த்தாள் ஸ்ருதி.

''ஏன் இப்படிக் கேக்கற?''

''ஏன்னா நான் உன்ன லவ் பண்றேன்டா'' என்று தனது இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு அழுகையில் உடல் குலுங்கினாள் ஸ்ருதி.

''ஸ்ருதி நீ என்ன சொல்ற?'' என்று அவளது முகத்தை மூடியிருந்த இரு கரங்களையும் விலக்கினான் சிவானந்தன்.

அழுகையினூடே நிமிர்ந்து அவனைப் பார்த்தவள், ''நான் நிஜமாதான் சொல்றேன்'' என்றாள்.

''அப்ப அந்தப் பொண்ணைக் கூப்பிட்டு எனக்கு உன்னப் புடிக்கலன்னு சொல்லிடட்டுமா?''

சிவானந்தன் சிரிப்பை சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொள்வதைப் பார்த்து, அவனை சந்தேகத்துடன் பார்த்தாள் ஸ்ருதி.



''அப்ப நான் உன்னயே கல்யாணம் பண்ணிக்கறேன் சரியா?''

அவன் இவ்வளவு நேரமாக விளையாட்டுக்குத் தான் சீண்டியிருக்கிறான் என்பது உறுதியாகி விட, கோபமும், அழுகையும் ஒரு சேர வந்தன ஸ்ருதிக்கு.

''என்னடா'' என்று சிவானந்தன் ஸ்ருதியின் அருகில் நெருங்கி அமர, ''போடா'' என்று அவனைத் தள்ளி விட்டாள் அவள்.

''ஸ்ருதி'' என்று அவளது கைகளைப் பிடிக்க சிவானந்தன் முயல, அவனது கைகளில் சிக்காமல் எழுந்து உள்ளே போனாள்.

''ஸ்ருதி நில்லு'' என்று சிவானந்தன் அவள் பின்னே செல்ல, அவனுக்கு முன்பே உள்ளறைக்குள் சென்றிருந்தவள் கதவை அறைந்து மூடினாள்.

அதற்குப் பிறகுதான் சிவானந்தன் கதவின் நிலையின் மேல் கை வைத்திருந்ததயே உணர்ந்தாள்.

''ஸ்ருதி'' என்ற அவனது அலறலில் உடனே கதவைத் திறந்து கொண்டு வேகமாக அவனருகில் வந்தாள் ஸ்ருதி.

''ஸாரி, ஸாரி, சிவா'' என்று ஸ்ருதி அவனது கையைப் பிடித்து விரலை சோதித்துப் பார்க்க முயல, தனது இரண்டு கரங்களாலும் அவளை சிறைப் பிடித்திருந்தான் சிவானந்தன்.

சிவானந்தனின் சிரிப்பைப் பார்த்தவள், ''இதுவும் பொய்யா உன்ன'' என்று அவனது மார்பில் தனது இரண்டு கைகளாலும் குத்தியவளை இழுத்து அணைத்துக் கொண்டான் சிவானந்தன்.

சில வினாடிகள் திமிறிய ஸ்ருதி, பிறகு அவனது அணைப்பில் தன்னை மறக்க ஆரம்பித்தாள்.

எவ்வளவு நேரம் அப்படி நின்றிருப்பார்களோ, சிவானந்தனின் அணைப்பு மேலும் இறுக்கியதில் தான் தன்னிலை உணர்ந்தாள் ஸ்ருதி.

உடனே அவனது அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றவளை ''என்னடா'' என்று மேலும் அணைக்க முயன்றான் சிவானந்தன்.

''முதல்ல என்ன விடுங்க'' என்று கோபத்துடன் ஸ்ருதி அவனது அணைப்பிலிருந்து விலகிக் கொள்ள, மீண்டும் அவளைத் தன்னருகில் இழுத்துக் கொண்டான் சிவானந்தன்.

''ஸ்ருதி.''

...........

''என்னடா எங்கூடப் பேச மாட்டியா?''

............

''ஸ்ருதி நான் உன்ன எந்த அளவுக்கு நேசிக்கறேன் தெரியுமா? சுட்டு எரிக்கற பாலைவனத்துல வாழ்ந்துட்டிருக்கற என்ன, நீ தினமும் தென்றலா வந்து வருடிட்டிருக்கமா.

''ஆமான்டா உன்னப் பாத்ததுக்கப்புறம் தான் நம்ம வாழ்க்கைலயும் இனிமேல் வரப் போறது தான் வசந்த காலம்கறத நான் புரிஞ்சுக்கிட்டேன். ஆனா நீ எங்க என்னப் பிடிக்கலேன்னு சொல்லிடுவையோன்னு மனசுக்குள்ள எனக்கு ரொம்பவும் பயம். நீ எங்கூட இல்லாத வாழ்க்கைய என்னால ஒரு வினாடி கூட நினைச்சுப் பாக்க முடியலடா.''

................

எல்லையில்லாத காதலுடன் தன்னைப் பார்த்த சிவானந்தன் தனது வாயிலிருந்து வரும் வார்த்தைகளுக்காகக் காத்திருப்பது தெரிய, எனக்கும் அப்படித்தான்



என்று அவன் முகம் முழுக்க முத்தமழை பொழிய வேண்டும் போலத் தோன்றிய வெறியில் சிரமப்பட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் ஸ்ருதி.

''ஸ்ருதி சொல்லுடா உனக்காக நான் என்ன செய்யட்டும்? உன்னக் கைப்பிடிக்கறதுக்காக வாழ்க்கைல எதை இழக்கவும் நான் தயாரா இருக்கேம்மா.''

..........

''ஒருவேளை இந்த அனா...''

அவனை சொல்லி முடிக்கக்கூட விடாமல் தனது இரண்டு கரங்களாலும் அவனது வாயைப் பொத்திக் கொண்டாள் ஸ்ருதி.

''சிவா'' என்று அழுகையில் உதடு துடிக்க தன்னைப் பார்த்தவளைக் கைகளில் ஏந்தி அவளது முகமெங்கும் முத்த மழை பொழிந்தான் சிவானந்தன்.

மனதே இல்லாமல் வெகுநேரம் கழித்து அவன் ஸ்ருதியை விடுவிக்க, கால்கள் தொய்ந்து மீண்டும் அவன் மேலேயே சாய்ந்தாள் ஸ்ருதி.

''ஸ்ருதி.''

''ம்.''

''வேண்டாம்மா, அப்புறம் நிலம கைமீறிப் போயிடும்.''

''அப்படியெல்லாம் ஆகாது சிவா'' என்று சிணுங்கியவளை, தனது கையணைப்பிலேயே அழைத்துச் சென்று அமர வைத்தான்.

''இந்த விஷயத்துல எனக்கு எம்மேல தாம்மா நம்பிக்கையில்ல, அடுத்த வாரமே நான் அப்பாவோட உங்கம்மா கிட்ட வந்து பேசறேன்.''

''நிஜம்தான சிவா.''

''நிச்சயமாம்மா, இப்ப நீ கிளம்பு முதல்ல நான் உன்னக் கொண்டு வந்து வீட்ல விட்டுட்டு வந்துட்றேன்.''

''அப்புறம் வேல?''

''உன்னப் பக்கத்துல வெச்சுக்கிட்டு வேலையா, அதெல்லாம் நடக்கற விஷயமா? முடிஞ்ச அளவு கல்யாணம் முடியற வரைக்கும் இனி நாம ரெண்டு பேரும் தனியா மீட் பண்ணிக்காம இருக்கறது தான் நல்லது.''

''ஏனாம்?'' என்று கேட்டவளின் முகம் செங்கொழுந்தாய்ச் சிவந்துவிட, ''ஸ்ருதி'' என்று அவளை நோக்கி இரண்டு எட்டு எடுத்து வைத்து விட்டான் சிவானந்தன்.

''பாரு இதுக்குத்தான் சொன்னேன் நாம தனியா இருக்கறது நல்லதில்லன்னு, வா'' என்று ஸ்ருதியின் கைப்பிடித்து வெளியே அழைத்து வந்தவன், வீட்டைப் பூட்டினான்.

''அடடா என்ன அவசரம்? ஏன் நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லத் தெரியலையாக்கும்?''

''ம், உன் கழுத்துல மூணு முடிச்சு போட்டதுக்கப்புறம் அந்தக் கேள்விக்கு பதில் சொல்றேன்.''

அவனுடன் காரில் ஏறியிருந்தவள், ''நிஜமா அடுத்த வாரமே எங்க அம்மாகிட்ட வந்து பேசுவீங்க தான சிவா'' என்று கேட்டாள்.

''ஆமான்டா உயிர் தனியா இருக்கும்போது வெறும் உடல மட்டும் வெச்சுக்கிட்டு நானென்ன செய்ய முடியும் சொல்லு?''

''உங்கம்மா தான் ஊருக்குப் போயிருக்காங்களே, திரும்பி வர இன்னும் முழுசா அஞ்சு நாள் ஆகும்னு சொல்ற. ஆன்ட்டி வர்றதுக்குள்ள நான் அப்பாகூடப் பேசிட்றேன் சரியா?''

''ம்.''

''அடுத்த வாரம் இந்நேரம் கல்யாண நாள எண்ண ஆரம்பிச்சுடலாம் கவலப்படாத.''



மேலும் இருபது நிமிடங்களில் கார் ஸ்ருதியின் வீட்டை அடைந்திருக்க, நிமிர்ந்து சிவானந்தனைப் பார்த்தாள் ஸ்ருதி.

''என்னடா?''

''இதுல லஞ்ச் இருக்கு சிவா, போய் நீங்க கண்டிப்பா சாப்பிடணும். நான் உங்களுக்காகவே செஞ்சது.''

''அதனால தான் கொஞ்சம் பயமா இருக்கு'' என்று சிரிக்காமல் சொன்னவன், ''சரிமா கண்டிப்பா சாப்பிடுவேன்'' என்றான்.

''ஸ்ருதி.''

இறங்குவதற்காகக் கதவைத் திறந்தவள், திரும்பி அவனைப் பார்த்தாள்.

''சாப்பாடு நிறைய இருக்கும் போலிருக்கு. பாதிய எடுத்து வெச்சுட்டுக் கொண்டு வந்து குடு.''

இதுக்குத்தான் கூப்ட்டிங்களா? என்பதை போலப் பார்த்தவள், ''அதெல்லாம் கொஞ்சம் தான் இருக்கு'' என்றாள்.

''வேண்டாம்மா, நீ எனக்காக செஞ்சதுன்னு நான் பாட்டுக்கு ஃபுல்லா சாப்பிடப் போய், அப்புறம் குண்டு மாப்பிள்ளைக்கெல்லாம் பொண்ணு தர முடியாதுன்னு ஆன்ட்டி சொல்லிடப் போறாங்க.''

வேறு ஏதோ சொல்ல அழைத்துவிட்டு சிவானந்தனும் பேச்சை மாற்றுகிறான் என்பது நன்றாகவே தெரிந்தது.

ஆறடி உயரத்தில் கம்பீரமாக பார்ப்பதற்கே ஒரு முழு ஆண் மகனாக நெஞ்சைக் கொள்ளை கொள்கிறானே.

அவனது சாயலில் குண்டாக ஒரு உருவத்தை நினைத்துப் பார்த்தும் அப்படி ஒரு உருவம் மனப் பார்வைக்கு எட்டாது போக, நடப்புக்கு வந்தாள் ஸ்ருதி.

''என்ன?''

''அதெல்லாம் ஒரு நாள் ஃபுல்லா சாப்புட்றதுல குண்டாக மாட்டிங்க, போன உடனே வயிறு நிறைய சாப்புட்றீங்க சொல்லிட்டேன்.''

சில வினாடிகளில் சிவானந்தன் விடை பெற்றுக் கொண்டு கிளம்ப, கார் கண்ணிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டே நின்றாள் ஸ்ருதி.

# 17



தனது தங்கை மகள் சொல்வதைக் கேட்டு உள்ளம் பூரித்துப் போனார் சதாசிவம்.

ஆனால் அவளைப் பெற்றவர்கள் ஒத்துக் கொள்வார்களா?

''என்ன மாமா யோசிக்கிறீங்க?''

''இல்ல உங்கம்மாவும், அப்பாவும் இதுக்கு ஒத்துக்குவாங்களாம்மா?''

''கொஞ்சம் யோசிக்க வேண்டிய விஷயந்தான், ஆனா நான் ஒரேயடியா நின்னு சாதிப்பேன்.''

''இருந்தாலும்...''

''முதல்ல உங்களுக்கு விருப்பமில்லேன்னா அத நீங்க சொல்லிடுங்க மாமா.''

''என்னமா நீ? எனக்கெல்லாம் ரொம்ப சந்தோஷம் தான். முதல்ல உன் அம்மா அப்பா, அப்புறம் சிவா அவங்க ரெண்டு பேரோட விருப்பமும் தான் ரொம்ப முக்கியம்.''



அதற்குப் பிறகு தான் இந்த விஷயத்தில் முதலில் மகனுடைய விருப்பத்தைத் தெரிந்து கொண்டு பிறகு தொடர்ந்து மேலே பேசுவது நல்லதோ என்று தோன்றத் தொடங்கி விட்டது சதாசிவத்திற்கு.

ஏனென்றால் இது அவனுடைய வாழ்க்கை சம்பந்தப்பட்ட விஷயம்.

தனக்கு விருப்பமென்று தெரிந்து விட்டால், மகனும் தனக்குப் பிடிக்கா விட்டாலும் கூட எனக்கும் சம்மதமென்று சொல்லிவிட வாய்ப்புண்டு.

''ஸ்ரீநிதி.''

''என்ன மாமா?''

''இந்த விஷயத்த முதல்ல நீ உங்க அம்மா அப்பா கிட்ட சொல்லு. நானும் இதப்பத்தி சிவா கூட முதல்ல பேசிக்கறேன்.''

''அப்புறம் கூடிய சீக்கிரம் நாம எல்லாரும் கலந்து பேசலாம்.''

முதலில் பிடிக்காவிட்டாலும், யோசித்துப் பார்த்ததில் மாமா சொல்வது தான் சரியென்று ஸ்ரீநிதிக்கும் தோன்றத் தொடங்கி விட்டது.

''சரி மாமா, ஆனா நீங்க இதப்பத்தி சிவா கூட இன்னைக்கே பேசுங்க.''

''சரிமா, கண்டிப்பாப் பேசறேன்.''

''என்ன மாமா எழுந்துட்டிங்க?''

''ஆமாம்மா, நான் மதியம் வந்தது கிளம்ப வேண்டாமா?''

''இன்னும் ஒன் அவர்ல மம்மி, டாடி வந்துடுவாங்க அதான் பாத்தேன், சரி உங்க இஷ்டம்.''

''நான் நாளைக்குத் திரும்பவும் வர்றேன்மா.''

''சரி மாமா.''

அவர் கிளம்பிச் செல்ல, தனது தாய் தந்தையின் வருகைக்காகக் காத்திருக்கலானாள் ஸ்ரீநிதி.

மகளின் விருப்பத்தை அவளது வாயால் தெரிந்து கொண்ட அவளைப் பெற்றவர்களோ, கோபத்தின் உச்சிக்கே போய் விட்டார்கள்.

ஆனால் அதை அப்போதைக்கு மகளிடம் அவர்கள் காட்டிக் கொள்ளவில்லை.

''இப்பதானடா வந்திருக்கோம், நாங்க போய் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துட்டு வர்றோம். நீயும் என்னவோ பர்ச்சேஸ் பண்ணனும்னு சொல்லிட்டிருந்தயே போய்ட்டு வா, நைட் பேசிக்கலாம்.''

ஒரேயடியாக மறுப்பார்கள் என்று எதிர்பார்த்த ஸ்ரீநிதிக்கு, பெற்றவர்களிடமிருந்து வந்த பொறுமையான பதிலில் சற்று ஆச்சரியமாகக் கூடப் போயிற்று.

ஆனால் தன்னைப் பெற்றவர்களைப் போலவே அவளும் அதை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

''சரிப்பா நைட் பேசிக்கலாம், ஆனா எப்பப் பேசி னாலும் நான் எதிர்பார்க்கறது உங்க சம்மதத்த மட்டும் தான். சரி நான் வெளிய போய்ட்டு வந்துட்றேன்'' என்று கிளம்பினாள் ஸ்ரீநிதி.

மகள் சென்றதும், கணவன் மனைவி இருவரும் ஒரு வரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''என்னங்க?''

''என்னத்த சொல்றது? உம்மக அவ மனசுல என்ன தான் நினைச்சுட்டிருக்கா?''

''என்னக் கேட்டா? பொட்டப்புள்ளைக்கு இவ்வளவு செல்லம் குடுக்காதீங்கன்னு நான் உங்ககிட்ட எத்தன தடவ சொல்லியிருப்பேன் கேட்டீங்களா?''

''இப்ப நடக்கறதப் பேசுடி, இருந்திருந்து ஆசப்பட்ற துக்கு இவளுக்கு வேற பையன் கிடைக்கல?''



''அட என்னங்க நீங்க, முதல்ல நீங்களும் இனி நடக்க வேண்டியதப் பேசுங்க. முதல்ல அவளுக்கு அப்பாவா இருந்து பேசுங்க.''

''அப்பாவா இருந்து பேசினா, முதல்ல யோசிக்காம ரெண்டு அற தான் குடுத்திருக்கணும். எல்லாம் பரம்பர புத்தி எங்க போகும்?''

''எதுக்குங்க அவசியமில்லாம எங்க பரம்பரயப் பத்தியெல்லாம் பேசறீங்க? உங்க மகளுக்கு முதல்ல புத்தி சொல்லுங்க.''

''பின்ன, அந்த சிவாவுக்கு கல்யாணம் பண்ணிக் குடுப்பேன்னு நினைச்சுட்டிருக்கியா?''

............

''முதல்ல மத்தவங்க பணத்துக்கு அளவா ஆசப் பட்டா தான ஆகும், ரொம்ப ஓவராப் போன இன்னைக்கு அந்தத் தத்துப் பயலுக்கு எம்மகளக் கேக்கற அளவுக்கு உங்கண்ணன் வந்திருக்கார்.''

''தெரியாம எதையும் பேசாதீங்க, இதுல எங்க அண்ண னுக்கு எந்த சம்பந்தமும் இருக்காதுன்னு தான் எனக்குத் தோணுது. சரி அதெல்லாம் இருக்கட்டும். அவளுக்கு என்ன பதில் சொல்லப் போறீங்க?''

''நாம ஒரேயடியா வேண்டாம்னு சொன்னா, அவ ஒரேயடியா வேணும்னு தான் நிப்பா. அதனால முதல்ல கொஞ்சம் விட்டுக் குடுக்கற மாதிரி தான் போயாகணும்.''

..........

''அதே மாதிரி அவங்கிட்ட அப்படிப் பெரிசா என்ன இருக்கு? உன் அழகுக்கும், வசதிக்கும் உனக்காக எத் தனை மாப்பிள்ளைங்க போட்டி போடறாங்க தெரியு மான்னு கேக்கணும். அது தான் உண்மையும் கூட'' என்று மனைவியைப் பார்த்தார் அவர்.

ஆனாலும் அந்த சிவானந்தனைப் பற்றி ஒரேயடியாக தவறாக எண்ணவோ, சொல்லவோ அவரால் முடிய வில்லை. அதாவது அவரது மனசாட்சி அதற்கு இடம் கொடுக்கவில்லை.

அவன் அலாதையானதில் அவனுடைய குற்றம் எதுவுமில்லை தான்.

பார்ப்பதற்குப் பிரமாதமாக இருப்பதோடு, எத்தனை திறமைசாலியாகவும் இருக்கிறான்? என்ன யோசித் தாலும் அவனிடம் ஒரு சிறு குறையைக் கூட கண்டு பிடிக்க முடியாது போலிருக்கிறதே.

தனது மனைவியும் அதையே ஆமோதிக்க, மறுத்து அவரால் எதையும் பேச முடியவில்லை.

''அதுலயும் இனி தொழில் அவ்வளவுதான், மேல மேல நஷ்டம் வராம இருக்கணும்னா தொழிலப் போற விலைக்கு வித்துட்றதுதான் ஒரே வழின்னு அண்ணா சொல்லிட்டிருந்தார். ஆனா அந்தப் பையன் வந்து தொழில முதல்ல இருந்தத விடப் பிரமாதமாக் கொண்டு வந்ததுமில்லாம, எல்லாக் கடன்களையும் அடைச்சுட்டா னாமே. அண்ணா பெருமையா சொல்றார்.''

''நீ சொல்றதப் பாத்தா, உன் பொண்ணுக்கு சப்போர்ட் பண்ற மாதிரியிருக்கு.''

''யாரு நானா? நீங்களே சரின்னாக் கூட அந்த சிவா வுக்கு ஸ்ரீநிதியக் குடுக்க நான் ஒத்துக்க மாட்டேன். ஏதோ அண்ணா சொல்லிட்டிருந்தத உங்ககிட்ட சொல்ல ணும்னு தோணுச்சு சொன்னேன்.''

''எல்லாத்துக்கும் மேல நல்ல செல்வாக்கான குடும் பத்துக்குள்ள போய் தன்னோட பொண்ணுங்க வாழ்க்கப் படணும்னுதான் எல்லாத் தாயும் ஆசப்படுவா.''

இரவு உணவின் போது தனது தாய், தந்தையிடம் பேச்சை ஆரம்பித்தாள் ஸ்ரீநிதி.



''என்ன டாடி நைட் பேசலாம்னு நீங்க தான சொன் னீங்க, சொல்லுங்க.''

''என்ன உனக்கு திடீர்னு அந்த சிவா மேல ஆச? உன் மாமா ஏதாவது சொன்னாரா?''

''அச்சச்சோ இல்ல டாடி, நான் சொன்னதக் கேட்டு அவருக்கே ஆச்சர்யம்.''

''பின்ன ஆச்சர்யபடாம என்ன செய்வார், உனக்கு எத்தன வரன்கள் வந்துட்டிருக்குன்னு அவருக்கும் தெரியும் தான.''

.............

''அதுலயும் உன் லைஃப் ட்ரீமே ஃபாரின்ல போய் செட்டிலாகணுங்கறது தான். அதுக்காக நாங்களும் எத்தன ஃபாரின் மாப்ளைகளப் பாத்து வெச்சிருக்கோம் தெரியு மாம்மா?''

''இப்ப நீங்க என்ன சொல்ல வர்றீங்க டாடி?''

''உனக்கென்ன வேணுங்கறதுல முதல்ல நீ உறுதியா இருமா. இதென்ன கடைல போய் பொம்ம வாங்கற விஷ யமா இது வேண்டாம் நல்லா இல்லன்னு தூக்கி வீசிட்டு இன்னொன்னு வாங்கறதுக்கு.''

''உங்களுக்கு சிவாவப் பிடிக்கலையா டாடி?''

''முதல்ல அவருக்கு உன்னப் புடிச்சிருக்காங்கறதக் கன்ஃபார்ம் பண்ணிக்கோன்னு சொல்றேன்.''

''அதெல்லாம் புடிக்கும்,'' என்று சொல்லிவிட்டுப் பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டாள் ஸ்ரீநிதி.

''ஓ அப்ப நீயாதான் கேக்கறையா? அவருக்கே இன் னும் விஷயம் தெரியாதா?''

..........

''யாரா இருந்தா என்னமா? பையன் நல்லவனா, உன் மனசுக்குப் பிடிச்சவனா இருக்கறது தான் எங்களுக்கும்

முக்கியம். எதுக்கும் நீ அந்த சிவா கிட்டப் பேசிட்டு முடிவா ஒரு பதில் சொல்லு'' என்று தந்தை சாப்பிட்டு முடித்துவிட்டு கை கழுவுவதற்காக எழுந்து செல்ல, எதுவும் சொல்லத் தோன்றாமல் பேசாமல் அமர்ந்திருந்தாள் ஸ்ரீநிதி.

தந்தை சொல்வதிலும் நியாயமிருக்க, தான் முதலில் இதைப்பற்றி சிவாவிடம் தான் பேச வேண்டும், அதுவும் நாளை காலையிலேயே என்று நினைத்துக் கொண்டாள் அவள்.

சில நிமிடங்களில் மகளும் சாப்பிட்டு முடித்துவிட்டு எழுந்து செல்ல, உடனே ஜாடையில் தனது மனைவியை அருகில் அழைத்தார் லோகநாதன்.

''என்னங்க?''

''உடனே போய் உங்க அண்ணன போன்ல கூப்பிட்டு சொல்லிடு, நாளைக்கு இவ போய் அந்த சிவாகிட்டப் பேசும்போது அவன் இவள மறுத்துடணும்.''

கணவனின் முகத்தில் தெரிந்த கோபம் நெஞ்சுக்குள் குளிர் பரப்ப, அவர் சொன்னதை உடனே செய்து முடித்தார் அவர்.

## 18



ஒரு வாரம் சென்றிருந்தது.

தனது தாய் அன்று மாலைக்குள் வீடு வந்து சேர்ந்து விடுவதாக போனில் சொல்லியிருக்க, சந்தோஷமான எதிர்காலக் கனவுகளுடன் வேலையில் ஈடுபட்டிருந்தாள் ஸ்ருதி.



சிவானந்தன் தனது தந்தையுடன் வீட்டிற்கு வந்து தன்னைப் பெண் கேட்பதற்கு முன்பாகவே தான் முந்திக் கொள்ள வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள.

ஆம், அவர்கள் வருவதற்கு முன்பாகவே தனது காதலைப் பற்றி அம்மாவிடம் சொல்லிவிட வேண்டும்.

சொல்வதற்கு சற்றுப் பயமாக இருந்தாலும், சிவானந்தனை மறுக்க எந்தக் காரணங்களும் இல்லையே என்ற தைரியத்தில் சற்று நிம்மதியடைந்தாள் ஸ்ருதி.

எதற்கும் இதைப்பற்றி மற்றொரு முறை சிவானந்தனிடம் பேசிவிட வேண்டுமென்றும் நினைத்துக் கொண்டாள்.

எங்கே அவனை நேருக்கு நேர் பார்த்தாலே மூளை மரத்துப் போய் விடுகிறதே. அதற்கும் மேல் அவன் காதலுடன் பார்க்கும் ஒரு பார்வையில் உலகமே மறந்து போய் விடுகிறதே.

அன்று மாலை தான் வேலை முடிந்து வீட்டிற்கு செல்லும் நேரம் வரை கூட சிவானந்தன் கடைக்கு வராது போக, என்ன செய்யலாம் என்று யோசித்தாள் ஸ்ருதி.

தன்னை விட அவனால் தான் தன்னைப் பார்க்காமல், பேசாமல் இருக்க முடியாதென்று நினைத்தவளுக்கு சிரிப்பு தான் வந்தது.

லேண்ட்லைன் போன் ஒலிக்க, ஆவலுடன் சென்று ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்தாள்.

எதிர்பார்த்தது போலவே சிவானந்தன் தான்.

ஷோரூமில் அவளைத் தவிர இருந்த மற்ற இருவர் வாடிக்கையாளர்களைக் கவனித்துக் கொண்டிருக்க, பொதுவாக சில வினாடிகள் பேசிவிட்டு ரிஸீவரை வைத்திருந்தாள் ஸ்ருதி.

இப்பொழுதெல்லாம் பெரும்பான்மை நேரம் அவன் புது ஃபேக்டரியில் தான் இருந்தான்.

பழைய ஃபேக்டரிக்கும், ஷோருமிற்கும் அவசியப் படும் போது மட்டும் வந்து சென்றான்.

அதையும் கூட போனிலேயே பேசி விடலாம், ஆனால் தினம் ஒரு முறையாவது உன்னைப் பார்க்காமல் என் னால் உண்பது, உறங்குவது என்ற எதையும் செய்ய முடியவில்லை என்று அவன் ஆசையுடன் பார்த்தது தான் நினைவுக்கு வந்தது.

கடவுளே இனி நாளை காலையில் தான் சிவாவைப் பார்க்க முடியுமா? இடையில் பதினைந்து மணி நேரத்தை எப்படிக் கழிக்கப் போகிறேனென்று நினைத்துக் கொண்டே ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்தாள் ஸ்ருதி.

ஸ்ரீநிதிக்குத் தான் உள்ளம் கொதித்துக் கொண டிருந்தது.

சிவானந்தன் தன்னை அதாவது தன் காதலை மறுத் ததை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

அதிலும் அவன் தன் காதலை மறுப்பதற்கான முக் கியக் காரணம் அந்த ஸ்ருதி, என்பதைத் தான் அவளால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

தன்னிடம் இல்லாதது அப்படி என்ன அந்த ஸ்ருதி யிடம் இருக்கிறது?

ஸ்ரீநிதிக்கும் சிவானந்தனின் மேல் காதல், கத்தரிக் காய் என்றெல்லாம் ஒரு மண்ணும் கிடையாது.

அவனது நெடிதுயர்ந்த கம்பீரமான தோற்றத்தில் ஒரு மயக்கம், அவனைத் தன்னுடையவன் என்று வெளியே சொல்லிக் கொள்வதில் சற்றுப் பெருமை, அவனது அலட்சியப் போக்கிலும், அதிகாரத் தோரணையிலும் ஒரு ஈடுபாடு. அவ்வளவுதான்.



முதலில் சிவானந்தன் தன்னை மறுத்துவிட்ட போது, ஸ்ரீநிதி அதற்காகப் பெரிதாகக் கவலையெதுவும் பட்டு விடவில்லை. ஏன் அதை ஒரு பொருட்டாகக் கூட அவள் எடுத்துக் கொள்ளவில்லை.

ஆனால் சிவானந்தன் தன்னை மறுத்ததற்கான காரணம் அந்த ஸ்ருதியாக இருக்குமோ என்ற திசையில் யோசித்துப் பார்த்த போது தான், ஸ்ரீநிதிக்கு தலையே வெடித்து விடும் போல ஆகிவிட்டது.

இருந்திருந்து அந்த ஸ்ருதிக்காக ஒருவன் தன்னை மறுப்பதா?

கூடாது, கூடவே கூடாது.

அவன் தன்னை மறுத்ததற்கு அந்த ஸ்ருதி மட்டும் காரணமாக இருந்தால், அவளை கண்டிப்பாக சும்மா விடக் கூடாது.

கடைசிக்கு சிவானந்தனோடு அவள் வாழ்வில் இணை யக் கூடாது.

அதற்குத் தான் என்ன விலை கொடுத்தாலும் சரிதான் என்று மனதிற்குள் உறுதி செய்து கொண்டாள் ஸ்ரீநிதி.

உடனே அவர்கள் இருவரையும் உளவு பார்க்கவும் ஆரம்பித்தாள்.

அதற்காக முடிந்த அளவு வேலை நேரம் முழுவதும் சிவாவோடு இருக்கத் தொடங்கினாள்.

அதற்குத் தொழில் கற்றுக் கொள்ளும் ஆசை தான் காரணம் என்று சிவானந்தனை நம்ப வைத்தாள்.

அவனுக்கு சந்தேகம் வராமல் இருப்பதற்காக விதியே என்று அவ்வப்பொழுது தொழிலில் சில சந்தேகங் களையும் மிகவும் அக்கறையுடன் கேட்டு வைத்தாள்.

அவன் எங்கு வெளியே சென்றாலும் உடன் செல்ல ஆரம்பித்தாள்.

முக்கியமாக அவன் பழைய ஃபேக்டரிக்கும் ஷோரூமிற்கும் செல்லும் போது கண்டிப்பாக உடன் சென்று விடுவாள்.

கண்டும் காணாதது போல ஸ்ருதியையும் சிவானந்தனையும், அவர்கள் பேசிக் கொள்ளும் தருணங்களையும் ஊன்றிக் கவனித்தாள்.

ஸ்ரீநிதியின் தீவிரமான முயற்சிக்குப் பலன் இருக்கத்தான் செய்தது.

ஸ்ருதி, சிவானந்தனின் ரகசியப் பார்வை பரிமாற்றங்களையும், காதல் பார்வைகளையும் மற்றும் உயிர்க் காதலர்களுக்கான அனைத்து இலக்கணங்களையும் அவர்கள் இருவரிடமும் கண்டு கொண்டாள் ஸ்ரீநிதி.

# 19



என்ன முயன்றும் மற்றவர்களின் முன்பு ஸ்ரீநிதியால் தன்னை சாதாரணமாகக் காட்டிக் கொள்ள இயலாது போக, உடனே வீட்டிற்குக் கிளம்பி விட்டாள்.

அதுவும் அந்த ஸ்ருதியை நினைத்தால் தான், ஸ்ரீநிதிக்கு கோபம் கோபமாக வந்தது.

வீட்டிற்கு வந்து சேர்ந்தவள், வெகுநேரம் தனது அறைக்குள் குட்டி போட்ட பூனையாக நடந்து தீர்த்தாள்.

ஆனால் என்ன யோசித்தும் அந்த ஸ்ருதிக்குப் பாடம் புகட்டுவதற்கான வழி மட்டும் புலப்படுவதாகவே இல்லை.

சோர்ந்து போய் அமர்ந்து விட்டவளுக்கு திடீரென ஒரு யோசனை தோன்ற, துள்ளி எழுந்தாள்.



ஓடிப்போய் தனது மொபைலை எடுத்துப் பார்த்தாள்.

நல்லவேளையாக அந்த ஸ்ருதியின் வீட்டு போன் நம்பர் தனது மொபைலில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

எப்பொழுதோ அவளுடைய பர்ஸனல் ஃபைலைப் பார்க்க நேர்ந்த போது, எதற்கும் இருக்கட்டுமென்று பதிவு செய்து வைத்துக் கொண்டது நல்லதாகப் போயிற்று.

நிமிர்ந்து சுவர்க் கடிகாரத்தில் மணி பார்த்தாள்.

நேரம் மாலை ஐந்து நாற்பது.

அந்த ஸ்ருதி இன்னும் வீடு போய்ச் சேர்ந்திருக்க மாட்டாள்.

உடனே அந்த எண்ணிற்கு டயல் செய்தவள், எதிர் புறத்திலிருந்து வரும் குரலுக்காகக் காத்திருந்தாள்.

ஸ்ருதி வீடு வந்து சேரும்போதே காவேரி வந்திருக்க, ''மம்மி'' என்று சந்தோஷத்துடன் அவரிடம் ஓடிச் சென்றாள் மகள்.

ஆனால் ஒரு வாரத்திற்குப் பிறகு தன்னைப் பார்க்கும் தாயின் முகத்தில் சந்தோஷத்தைக் காணவில்லை.

அதை உணர்ந்து கொண்ட பெண் ''ஏம்மா ஒரு மாதிரியிருக்கீங்க?'' என்று கேட்டாள்.

''ஒன்னுமில்லம்மா, நான் இல்லாத ஒரு வாரம் எப்படியிருந்தது?''

''ரொம்ப போர் மம்மி, வீட்டுக்கு வரவே பிடிக்கல.''

''ஓ அப்ப நல்லா வெளிய சுத்தினயா?''

''அச்சச்சோ இல்ல மம்மி, வழக்கம் போல வீட்டுக்கு வந்துட்டேனாக்கும்.''

''என்ன மம்மி?''

தாய் தன்னைப் பார்க்கும் பார்வை வித்யாசமாக இருப்பதைப் போலத் தோன்றியது ஸ்ருதிக்கு.

''ஊர்ல எல்லாரும் எப்படியிருக்காங்கமா?''

''ஏதோ இப்பவாவது கேக்கத் தோணுச்சே, எல்லாரும் ரொம்ப நல்லார்க்காங்க. முக்கியமா யங் ஜெனரேஷன் எல்லாருமே பெத்தவங்களுக்கு மரியாத குடுத்து உண்மையா நடந்துக்கறாங்க.''

தனது கேள்விக்கு தாயின் பதில் சற்று அதிகப்படியோ என்று தோன்றினாலும், ஸ்ருதி அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

''என்னமா ஹேர் எல்லாம் கட் பண்ணியிருக்க?''

''ஆமாம் மம்மி ட்ரிம் பண்ணினேன்.''

''தலைக்கு எண்ணெய் வைக்கல போலிருக்கு, இல்ல இன்னைக்கு வழக்கமில்லாத வழக்கமா தலைக்குக் குளிச்சயா? அப்புறம் கல்யாணம் மாதிரி ஃபங்ஷன் சுக்குப் போட்ற புதுச் சுடிதார வேலைக்குப் போட்டுட்டுப் போயிருக்க.''

சந்தேகமே இல்லை, இன்றைக்குத் தனது தாய் மிகுந்த ஆராய்ச்சி நோக்கோடு தான் தன்னைப் பார்க்கிறார்.

''என்னமா, திடீர்னு என்ன யோசனை?''

''ஒன்னுமில்ல மம்மி, எங்க பாட்டியக் காணல?''

''பின்னாடி தோட்டத்துல இருக்காங்க.''

''சரி மம்மி நான் போய் டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வந்துட்றேன், எனக்கு ஒரு கப் காபி போட்டு வைங்க.''

சற்றே எரிச்சல் கலந்த பாவனையுடன் சொல்லிவிட்டு ஸ்ருதி உள்ளே செல்ல, அவள் சென்ற திசையையே சில நிமிடங்கள் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார் காவேரி.

தாய் அறியாத சூல் ஏது?

இருபது வருடங்களாகத் தான் பார்த்தறிந்த மகள் வேறு, நிச்சயமாக இப்பொழுது தான் பார்க்கும் பெண் வேறு தான்.



காவேரி எழுந்து சென்று காபி தயாரிக்க ஆரம்பித்திருக்க, ஸ்நேக்ஸ் டப்பாவைத் திறந்து பார்த்துக் கொண்டிருந்தாள் ஸ்ருதி.

''ஸ்ருதி.''

''என்னமா?''

''அங்க ஊர்ல இருந்து கொண்டு வந்த கல்யாண ஸ்வீட், காரமெல்லாம் இன்னும் பேக்ல இருந்து வெளிய கூட எடுத்து வைக்கல. அத எடுத்து வெச்சுட்றயா?''

''சரிமா.''

மகள் அறியாதவாறு அவளுடைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தார் காவேரி.

அப்படி கவனித்தவருக்கு மகளிடம் இருந்த வித்யாசங்கள் கண்கூடாகவே தெரிந்தன.

மிகுந்த கோபத்துடன் அவளிடமே கேட்டு விடலாம் என்ற முடிவுக்கு வந்திருந்தவர், பிறகு அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டார்.

இன்னும் கூட சற்று பொறுத்திருந்து பார்ப்போம்.

மேலும் இரண்டு நாட்களும் மகளை அவள் அறியாமல் கவனித்த காவேரிக்கு தான் எண்ணியது சரிதான் என்பது உறுதியாகி விட, உடனே ஒரு வேலை செய்தார்.

ஏனோ கடந்த இரண்டு நாட்களாகவே ஸ்ருதிக்கு மனம் உற்சாகமாக இல்லை.

அதற்கு என்ன காரணம் என்று பார்த்தாலும், எதுவுமிருக்கவில்லை.

அன்று காலையில் கடைக்குள் காலடி எடுத்து வைக்கும்போதே சிவானந்தனையும் காணாது போக, மனதின் மூலையில் ஒட்டிக் கொண்டிருந்த கொஞ்ச நஞ்ச உற்சாகமும் கூட துணி கொண்டு துடைத்தாற் போல காணாமல் போயிற்று.

அன்று மாலை வேலை முடிந்து கிளம்பும் வரை கூட வழி மேல் விழி வைத்து என்பார்களே, அது போல சிவானந்தனின் வருகைக்காகக் காத்திருந்து ஏமாந்தாள்.

ஒரு வழியாக வேலை நேரமும் முடிந்து, வெளியே வந்திருந்தாள் ஸ்ருதி.

கிளம்பும் நேரம் ஆகி விட்டிருந்ததால், தனது மொபை லுக்காவது அழைப்பானென்று எதிர்பார்த்தாள்.

ஆனால் வீடு வந்து சேர்ந்து உணவு முடித்துத் தூங்கப் போகும் வரை கூட அவன் அழைக்காது போக, தானே அவனுடைய மொபைல் போனுக்கு அழைத்தாள் ஸ்ருதி.

நாட் ரீச்சபில் என்று வந்த பதிலில், அழுகையுடன் இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்துவிட்டாள்.

தொடர்ந்து வந்த ஒரு வாரமும் கூட அதே நிலை தான் தொடர்ந்தது.

சிவானந்தனைக் கண்ணால் பார்க்க முடியாவிட்டா லும் கூடப் பரவாயில்லை, போனிலும் பிடிக்க முடிய வில்லை.

அவனைப் பார்க்க, பேச என்று எதுவுமே முடியாத தில், உணவு உறக்கம் அனைத்தையும் மறந்தாள்.

பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற எண் ணத்தில், கட்டாயத்தின் பேரில் சில முக்கியமான வேலைகளை செய்து வைத்தாள்.

ஊருக்குப் போய்விட்டு வந்ததிலிருந்து தாயும் தன் னிடம் வித்யாசமாக நடந்து கொண்டது வேறு, ஸ்ரு திக்கு நன்றாகவே புரிந்தது.

ஆனால் அவளுக்கிருந்த கவலையில் அவள் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

ஏன், இதே நிலை தொடர்ந்தால் இன்னும் சில நாட் களில் பைத்தியம் ஏதாவது பிடித்து விடுமோ என்று கூட அஞ்சினாள்.



வெளியே தோட்டத்துக் கல் பெஞ்சில் அமர்ந்து எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த மகளைப் பார்த்து விட்டு, அருகில் வந்தார் காவேரி.

ஆனால் அருகில் வந்து நின்றிருந்த தாயை ஸ்ருதி உணரக் கூட இல்லை.

சிவானந்தன் ஒரு முறை வீட்டிற்கு வந்திருந்த போது, அந்தக் கல் பெஞ்சில் அமர்ந்து பேசியது தான் நினை வுக்கு வந்து நெஞ்சைப் பிழிந்தது.

அதே நினைவில் கண்கள் கலங்கி, அவளையறி யாமல் கண்களிலிருந்து கன்னங்கள் வழியாகக் கண்ணீர் கீழிறங்கியது.

அந்த நிலையில் மகளைப் பார்த்த காவேரிக்கும் நெஞ்சு பதறிப் போய் மனம் உருகிவிட்டது.

என்ன இருந்தாலும் பெற்ற மகள் அல்லவா?

''ஸ்ருதி, என்னமா என்னாச்சு?'' என்று கேட்டுக் கொண்டே மகளின் அருகில் தானும் அமர்ந்தார்.

தாயின் அழைப்பிலும், தொடுகையிலும் திடீரென நடப்புக்கு வந்தவள், கண்களில் ஈரத்தை உணர்ந்து உடனே அதைத் துடைத்துக் கொண்டாள்.

''என்னமா, ஏன் அழற?''

''ஒன்னுமில்லைம்மா,'' என்று சிரிக்க முயன்றாள் பெண்.

பொய்யா என்று கோபம் வந்தாலும், அவர் மகளிடம் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

''டிபன் சாப்புடு வா.''

''பசியில்லமா''

''பசிக்கற அளவுக்கு சாப்பிட்டு வந்துடு, நான் அடுப் படில வேலைய முடிக்கணும்.''

''எனக்கு வேண்டாம்.''

''ஏன்டி, நீ என்ன இன்னும் சின்னக் குழந்தையா? உனக்கொரு ஆள் எடுத்துட்டு வந்து ஊட்டி விட்டாத் தான் சாப்பிடுவியோ?''

''வேண்டான்னு சொன்னா விடுங்களேன், ஏன் உயிர வாங்கறீங்க?''

அவசியமில்லாமல் உடலை வாட்டிக் கொள்வதோடு, தாயிடமும் எரிந்து விழுந்தாயிற்றா?

காவேரிக்கு மகளை நினைக்க நினைக்கக் கோபம் தான் வந்தது.

ஐயோ பாவம் என்று சற்றே இளகத் தொடங்கியிருந்த மனம், மீண்டும் இறுகிவிட ''சரி உன்னிஷ்டத்துக்கு செய்'' என்று எழுந்து உள்ளே போய் விட்டார்.

சிவானந்தனைக் கண்ணால் பார்த்தும், பேசியும் பதினைந்து நாட்களுக்கும் மேலாகி விட்டது.

ஒவ்வொரு நாளும் இன்றைக்கு நிச்சயமாக வருவா னென்று எதிர்பார்த்துப் பார்த்து ஏமாந்து போய்க் கொண் டிருந்தாள் ஸ்ருதி.

அவனைப் பார்த்தாக வேண்டுமென்ற ஆவலினால் மட்டுமே, வேலைக்கும் சென்றாள் எனலாம்.

மற்றபடி அவளுக்கிருந்த மனநிலையில் யாரையும் பார்க்கவோ, பேசவோ சுத்தமாகப் பிடிக்கவில்லை.

அன்றைக்கு ஏனோ ஸ்ருதியின் மனநிலை வழக் கத்தை விடவும் மோசமாகி விட்டிருந்தது.

எதுவுமே பிடிக்காமல் போக, இரண்டு மணி நேரம் பர் மிஷன் எழுதிக் கொடுத்துவிட்டுக் கிளம்பியே விட்டாள்.

ஸ்ருதி வீட்டை அடையும் போதே அவளது தாயும் வேலை முடிந்து வந்து விட்டிருக்க, எதுவும் பேசாமல்



தன்னறைக்கு சென்று சற்று நேரம் படுத்து விடவேண்டு மென்று நினைத்துக் கொண்டே படியேறினாள் ஸ்ருதி.

ஆனால் படிமேல் கால் வைத்தவளுக்கு, அவளது தாய் தன்னைப் பற்றி யாரிடமோ போனில் பேசிக் கொண் டிருப்பது காதில் விழ சற்று நின்று கேட்கத் தோன்றியது.

சில வினாடிகளிலேயே தாய் தனது பெரியம்மா விடம் தான் பேசிக் கொண்டிருக்கிறார் என்பதும் தெரிந்து போயிற்று.

ஆனால் பேசிய விஷயம் தான் சற்றும் எதிர்பார்க்காத ஒன்றாக இருந்தது.

ஹாலுக்குப் பக்கத்திலிருந்த ஒரு சிறு அறையில் ஜன்னல் வழியாகத் தோட்டத்தைப் பார்த்தவாறு நின்று பேசிக் கொண்டிருந்த தாயின் முதுகு மட்டும் தான் ஸ்ருதிக்குத் தெரிந்தது.

ஆனால் அவரது குரல் துல்லியமாகக் காதுகளில் விழ, திருமணத்திற்கு சென்றிருந்த போது நடந்த சில விஷயங்களைப் பற்றி அவர்கள் சுவைபடப் பேசி சிரித்துக் கொண்டிருப்பது புரிந்தது.

தாய் தனது பெயரை மட்டும் எடுக்காமல் விட்டிருந் தால், ஸ்ருதி அடுத்த சில வினாடிகளிலேயே தன்ன றைக்கு சென்றும் இருப்பாள்.

ஆனால் எடுத்த எடுப்பிலேயே தாய் தன்னைப் பற்றிக் குறை சொல்லவும் தான், ஸ்ருதிக்கு மேலும் நின்று கேட்டே ஆக வேண்டும் போலாகி விட்டது.

தாய் பேசுவதைக் கூர்ந்து கவனிக்கவும் ஆரம்பித்தாள்.

''எல்லாத்தையும் சொல்லாம உங்களுக்கும் தான் எப்படிப் புரியும், எல்லாம் என் தலவிதி. முழுசா சொல் றேன் கேளுங்கக்கா'' என்று ஆரம்பித்த காவேரி, தன்னை யறியாமலேயே மகளின் தலையில் கூடை கூடையாக எரி நெருப்பை வாரிக் கொட்டினார்.

பத்து நிமிடங்கள் பேசிய காவேரி, அவளது கணவனின் அண்ணன் மனைவியிடம் சொன்ன விஷயம் இது தான்.

'ஒரு சில இன்றைய தலைமுறைப் பெண்களைப் போல அல்லாமல் ஸ்ருதி மிகவும் அடக்கமாகவும், படிக்கும் காலத்திலிருந்தே இன்று வரையும் கூட ஆண்களைக் கண்டாலே அவர்களை தூர நிறுத்திப் பேசுவதையெல்லாம் பார்க்கும் போது எனக்கு மனதிற்குள் மிகவும் பெருமையாக இருக்கும். ஆனால் இப்பொழுது அதெல்லாம் பொய்யாகி விட்டது.

ஸ்ருதி ஒரு பையனைக் காதலிக்கிறாள். அவள் விரும்பும் பையன் வேறு யாருமல்ல, அவள் வேலை செய்யும் கம்பெனியுடைய எம்.டி.தான். ஆனால் அவனே ஒரு தத்துப் பிள்ளை, பிறப்பால் அவன் என்ன குலமோ கோத்திரமோ எதுவும் தெரியாது.

எப்படியோ கடவுள் புண்ணியத்தில் எனக்கு ஆரம்பத்திலேயே விஷயம் தெரிந்து விட்டது. அதனால் அந்த சிவானந்தனை அழைத்துப் பேசினேன், அதுதான் அவனது பெயர்.

பேசினேன் என்ன, நாக்கைப் பிடுங்கிக் கொள்ளும் விதமாக நாலு கேள்விகள் கேட்டேன். பையனுக்கு சற்று ரோஷம் இருக்கும் போலிருக்கிறது, பாவம் வாயடைத்துப் போய்விட்டான்.

அதோடு நீ என் மகளை மறந்துவிடு, உன்னை மாதிரியல்ல அவளுக்கு சொந்தங்கள் அதிகம். அதிலும் அவளுடைய பெரியப்பாக்கள் ஸ்ருதியை வெட்டிப் போட்டாலும் போடுவார்களே தவிர, உன்னைப் போல ஒருவனுக்குத் திருமணம் செய்து கொடுக்க மாட்டார்கள். நானும் அப்படித்தான்.

ஒருவேளை அவள் மீது நீ வைத்திருப்பது உண்மையான அன்பாக இருந்தால், அவளை மறந்து விடு.



அவளாக வந்தாலும் ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லி, அவளை விலக்கி விட்டுவிடு. நானும் அவளுக்கு சொந்தத்தில் மாப்பிள்ளை பார்க்கச் சொல்லிவிட்டேன்.

ஆனால் உன்னிடம் நான் சொன்னதாக தயவு செய்து அவளிடம் சொல்லிவிடாதே. மாப்பிள்ளை முடிவானதும் அதைக் காரணமாக வைத்து நான் அவள் வேலைக்கு வருவதை நிறுத்தி விடுகிறேன்.

சொன்னது போலவே இப்பொழுது அனைத்து விதத்திலும் ஸ்ருதிக்குப் பொருத்தமான மாப்பிள்ளை கிடைத்து விட்டதாக சொல்கிறீர்கள். எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது, வருகிற வெள்ளிக் கிழமையென்று மிகவும் நல்ல நாளாக இருப்பதால் நீங்களும் சொல்கிற மாதிரி அன்றைக்கே ஸ்ருதியைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டினரை அழைத்து வாருங்கள்.'

இப்படி மேலும் சில நிமிடங்கள் பேசிய தனது தாய், இன்னும் மூன்று நாட்களில் வரப் போகிற பெண் பார்க்கும் படலத்திற்காக தான் என்னென்ன செய்ய வேண்டுமென்பதையும் விளக்கமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

ஆனால் ஸ்ருதியால் தான் நிற்கக் கூட முடியவில்லை.

அதிர்ச்சி மேல் அதிர்ச்சி, கை கால்களைக் கூட பல மிழக்க வைத்திருந்தது.

தாய் இன்னும் பேசிக் கொண்டிருக்க, மெதுவாகத் தன்னறைக்கு சென்று அமர்ந்திருந்தாள்.

அவளது அப்பாவுடன் பிறந்த நான்கு அண்ணன்களை, அதாவது அவளுடைய பெரியப்பாக்களைப் பற்றி ஸ்ருதிக்கும் நன்றாகவே தெரியும்.

பக்கா கிராமத்து மனிதர்கள், இன்று வரையும் கூட ஒரே குடும்பமாக சேர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். தங்களுக்குச் சரி என்று பட்ட ஒன்றிற்காக என்ன வேண்டுமானாலும் செய்வார்கள்.

அதற்காக எதையும் செய்பவர்களென்று சொல்லிவிட முடியாது. முக்கியமாக குடும்ப மானத்தைக் காப்பாற்றுவ தற்காக எதைச் செய்யவும் தயங்க மாட்டார்கள்.

சிறு வயதிலிருந்தே ஸ்ருதிக்கு அவர்களைக் கண் டாலே பயம். அதிலும் எனது மகளைக் காப்பாற்றுங்கள் அவளது எதிர்காலமே உங்கள் கைகளில் தான் இருக் கிறது என்று தனது தாய் கண்ணீர் வேறு வடித்தால்.

அதையும் தனது தாய் செய்து விட்டாரென்பது, அவர் போனில் பேசுவதைக் கேட்டதிலிருந்து உறுதியாகி விட, மனம் வெறுத்துப் போயிற்று ஸ்ருதிக்கு.

என்னவோ தம்பி மனைவிக்காகவும், மகளுக்காகவுமே தாங்கள் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதைப் போல எண்ணிக் கொண்டு வரிந்து கட்டிக் கொண்டு வந்து நிற்கத்தான் போகிறார்கள்.

அதுவும் கிராமத்தில் சொந்தத்திற்குள் தனக்குப் பார்த்திருக்கும் மாப்பிள்ளை குடும்பத்தோடு வேறு.

அவர்கள் வந்து மிரட்டுவார்கள், தாம் தூமென்று குதிப்பார்கள் என்பதையெல்லாம் விட, தம்பி குடும் பத்தைக் காப்பாற்றுகிறோம் என்ற பெயரில் அவர்கள் சிவாவை ஏதாவது செய்து விட்டால்.

அதற்குப் பிறகு தான் அவர்களுடைய முழுக்கோப மும் தனது சிவாவின் மேல் தான் பாயுமென்பதை முழுமையாக உணர்ந்தாள் ஸ்ருதி.

இவர்களால் சிவாவைப் பெரிதாக எதுவும் செய்துவிட முடியாதென்றாலும், களேபரம் உறுதி.

அப்பொழுதுதான் தனது தாய் வேறு அவனை வார்த் தைகள் என்னும் கூர் அம்புகளால் குத்திக் கிழித்திருக் கிறாள் என்பதும் ஸ்ருதிக்கு நினைவு வந்தது.

ஐயோ சிவா, உங்கள் மனது என்ன பாடுபட்டிருக்கும்?



என்னை விரும்பிய பாவத்திற்காக நீங்கள் இன்னும் என் னென்ன துன்பங்களையெல்லாம் அனுபவிக்க நேரிடுமோ.

விடமாட்டேன், நான் அதற்கெல்லாம் நிச்சயமாக விடமாட்டேன் என்று படுக்கையில் விழுந்து கண்ணீர் வடித்தாள் ஸ்ருதி.

வெகுநேரம் அழுது தீர்த்தவள், எதற்கும் இன்னொரு முறையும் சிவானந்தனின் மொபைலுக்கு அழைத்துப் பார்த்து விடலாம் என்று மனதார கடவுளை வேண்டிக் கொண்டு தனது மொபைலில் இருந்து அவனுக்கு அழைத்தாள் ஸ்ருதி.

## 20



மனதால் ஸ்ருதியை விட இன்னும் ஒரு மடங்கு அதிகமாகவே துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந் தான் சிவானந்தன்.

ஸ்ருதியின் தாய் அவனை அழைத்துப் பேசியதி லிருந்து அவனுக்கு வாழ்க்கையே இருண்டு போய்விட் டாற் போலிருந்தது.

அதற்காக அவனுடைய வழக்கமான வேலைகள் எதையும் அவன் செய்யத் தவறினான் இல்லை.

ஆனால் ஸ்ருதியைப் பார்ப்பதை மட்டும் மிகவும் முயன்று தவிர்த்துக் கொண்டான்.

புது ஃபேக்டரியில் இருந்து கொண்டு அனைத்து தொழில் தொடர்பான வேலைகளையும் போனிலேயே பேசிக் கொண்டான்.

அப்படியென்ன ஸ்ருதியுடைய தாயின் வார்த்தைகளுக்கு அத்தனை மதிப்புத் தர வேண்டுமென்று சில சமயம் தோன்றவும் செய்தது.

விட்டிருந்தால் ஸ்ருதியை வழக்கம் போல பார்க்கவும், பேசவும் செய்திருப்பான்.

ஆனால் அவளுடைய தாய் மிகவும் வேண்டிக் கேட்டுக் கொண்டதில் தான், சை என்று மனம் வெறுத்துப் போயிற்று சிவானந்தனுக்கு.

அவனைப் பொறுத்தவரை ஸ்ருதியை உயிருக்குயிராகத் தான் நேசித்துக் கொண்டிருந்தான். ஸ்ருதியோடு வாழ்வில் இணைய எதைச் செய்யவும், உலகமே எதிர்த்தாலும் துணிந்து போராடத் தயாராகவும் தான் இருந்தான்.

ஆனால் அதே அளவு உறுதி ஸ்ருதியிடமும் இருக்க வேண்டுமென்று எதிர்பார்த்தான்.

இருக்குமென்பதில் நூறில் ஒரு பங்காகக் கூட சந்தேகமில்லையென்றாலும், அப்படித் தன்னைத் தேடி ஸ்ருதி வரும் நாளுக்காகக் காத்திருந்தான்.

ஏன் அதற்காகத்தான் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்று கூடச் சொல்லலாம்.

முதலில் ஒரு வாரம் ஸ்ருதி தன்னை தினமும் மொபைலில் அழைத்திருந்தது தெரிந்தது.

ஆனால் கடந்த ஒரு வாரமாக அவள் தன் மொபைலுக்கும் அழைத்திருக்கவில்லை.

ஒருவேளை கோடியில் ஒரு பங்காக, அதுவும் நடக்க வாய்ப்பே இல்லை தான் என்றாலும் சொந்தங்களின் எதிர்ப்புகளுக்கு பயந்தோ, பிரச்சனைகளுக்கு எதிராக நின்று போராடுவதற்கு பயந்தோ ஸ்ருதியே கூட மனம் மாறியிருந்தால்?

தனது ஸ்ருதியைப் பற்றி சிவானந்தனாலும் அந்தக் கோணத்தில் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.



இப்படிப்பட்ட பல விதமான தொடர்ந்த எண்ண ஓட்டங்களினால் தலை வலிக்க ஆரம்பித்திருக்க,

கண்களை மூடித் தனது ஸீட்டில் பின்புறமாக சாய்ந்தவாறு சற்று நேரம் அமர்ந்து விட்டான் சிவானந்தன்.

பத்து நிமிடங்கள் அப்படி அமர்ந்திருந்தவன், பிறகு எழுந்து தனது வேலையைப் பார்க்க ஆரம்பித்து விட்டான்.

ஸ்ருதியின் நினைவாகவே இருந்தவனுக்கு அவளிடமிருந்தே அழைப்பு வர, அவளிடம் பேசப்போகும் எல்லையில்லாத ஆசையில் உடனே அட்டெண்ட் செய்து மொபைலைக் காதில் வைத்தான்.

ஆனால் எதிர்முனையில் பேசியது ஸ்ருதியல்ல.

அவளுடைய தாய்.

அழுது கொண்டே அவர் சொன்ன விஷயத்தைக் கேட்டதில் இருக்கையிலிருந்து எழுந்தே விட்டான் சிவானந்தன்.

''என்ன சொல்றீங்க?''

............

''எந்த ஹாஸ்பிட்டல்?'' என்று கேட்டுக் கொண்டவன், கார் சாவியை எடுத்துக் கொண்டு மின்னல் வேகத்தில் பறந்தான்.

சில நிமிடங்களிலேயே சிவானந்தன் ஹாஸ்பிட்டலை அடைந்திருக்க, ரிஷப்ஸனிலேயே அவனை எதிர்கொண்டார் காவேரி.

அவர் அழுகையை சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பது தெரிந்தது.

''ஸ்ருதி எங்க?'' என்று கேட்ட சிவானந்தனின் குரலில் இருந்த பதட்டம் ஏற்கனவே அவருக்கிருந்த குற்ற மனப்பான்மையை மேலும் அதிகப்படுத்தியது.

''பயப்பட எதுவுமில்ல தம்பி, பெரிய டாக்டர் இப்பத்தான் வந்து பார்த்துட்டு சொன்னார்''

சில வினாடிகளில் சற்றுப் பெரிய மூச்சுகளை எடுத்து ஓரளவு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட சிவானந்தன், ''இப்ப அவளப் பார்க்கலாமா?'' என்று காவேரியைப் பார்த்தான்.

அவன் வந்து சேர்ந்திருக்கும் நேரத்தை வைத்துப் பார்த்தால், எந்த அளவு வேகத்துடன் வந்திருப்பானென்பது புரிந்தது.

சரியாக அதே நேரம் ஒரு நர்ஸ் வந்து ஸ்ருதியின் பெயரைச் சொல்லி உடன் இருப்பவரை அழைக்க, காவேரியை முந்திக் கொண்டு முன்னே சென்றிருந்தான் சிவானந்தன்.

''பேஷண்ட் இப்ப நல்லா இருக்காங்க, போய்ப் பாருங்க'' என்று சொல்லிவிட்டுச் சென்றாள் அந்த நர்ஸ்.

அதற்குள் தானும் சிவானந்தனை நெருங்கியிருந்த காவேரி, ''நீங்க போய் பாருங்க தம்பி நான் ஒரு போன் பண்ணிட்டு வந்துடறேன்'' என்று அவனது பதிலுக்காகக் காத்திருக்காமல் உடனே அங்கிருந்து நகர்ந்து விட்டிருந்தார்.

நல்லவேளையாக அவர் காத்திருக்கவில்லை.

ஏனென்றால் அவர் சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை. அதற்குள் ஸ்ருதியின் கட்டிலை நெருங்கியிருந்தான் சிவானந்தன்.

மிகவும் மெலிந்து, வேரோடு பிடுங்கி வீசப்பட்ட கொடி போல உயிர்ப்பே இல்லாமல் இலக்கற்று எதையோ வெறித்தவாறு படுத்திருந்த ஸ்ருதியைப் பார்த்ததில், நெஞ்சுக்கூடே காலியாகி விட்டாற் போல ஆகிவிட்டது சிவானந்தனுக்கு.

''ஸ்ருதி.''

சிவானந்தன் அழைக்க, குரல் வந்த திசையை நோக்கித் திரும்பினாள் அவள்.



சற்றும் எதிர்பார்த்திருக்காத ஸ்ருதி, அவனை அங்கு கண்டதில் ஆச்சர்யத்தின் எல்லைக்கே போய்விட்டாள்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

''சிவா'' என்று அழைத்தவள், அழுகையில் உதடு துடிக்க அவனை நோக்கிக் கையை நீட்டினாள்.

ஸ்ருதி வலது கையை நீட்டியிருக்க, இடதுகை மணிக்கட்டின் பக்கம் ஒரு கட்டு ஒன்று போடப்பட்டிருந்தது.

அவள் நீட்டியிருந்த கையைக் கண்டு கொள்ளாமல், ''என்னாச்சு?'' என்று கேட்டான்.

............

''சொல்லு ஸ்ருதி என்னத்தப் பண்ணி வெச்ச?'' என்று கேட்ட சிவானந்தனின் முகம் இறுகியிருக்க அவன் கோபத்தை சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவனைப் பார்க்கவே சற்று பயமாக இருக்க, ''இங்க பிளேட்ல அறுத்துட்டேன்'' என்று கட்டுப்போடப்பட்டிருந்த இடது கை மணிக்கட்டைக் காட்டி மெதுவாக சொன்னாள் ஸ்ருதி.

''ஏன் அப்படி செஞ்ச?''

''அப்படி செஞ்சதால தான உங்களுக்கு என் ஞாபகமே வந்திருக்கு.''

''ஏற்கனவே உடம்புக்கு முடியாம இருக்கையேன்னு பாக்கறேன், இல்லன்னா எனக்கு வர்ற கோபத்துல ஓங்கி ரெண்டு அற குடுத்திருப்பேன்.''

''என்ன உங்களால அடிக்க முடியுமா சிவா?''

''உடம்பு கொஞ்சம் குணமாகட்டும், அதுக்கப்புறம் என் அற எப்படியிருக்குங்கறதக் காட்றேன்.''

''சிவா, அப்படின்னா என்மேல உங்களுக்குக் கோபம் எதுவும் இல்ல தான?''

''இப்ப சிரி, கொஞ்ச நேரத்துல எப்படி ஆடிப் போயிட்டேன் தெரியுமா?''

அந்த நிமிடங்களை நினைத்துப் பார்த்தானோ என்னவோ அவனது உடல் ஒரு முறை நடுங்கி மீண்டும் நடப்புக்கு வந்ததை, சிவானந்தன் தனது கையைப் பற்றியிருந்ததின் மூலமாக ஸ்ருதியாலும் உணர முடிந்தது.

''சிவா, எம்மேல உங்களுக்கிப்பக் கோபம் இல்லையே.''

''கோபந்தான்'' என்றவன் ''இப்படி இளைச்சுப் போயிட்டயேமா'' என்றான்.

''ஓ, அதனால தான் நான் நிறைய முறை போன் பண்ணியும் கூட நீங்க அட்டெண்ட் பண்ணவே இல்லையா?''

அதைக் கேட்டு முடிப்பதற்குள் ஸ்ருதிக்குக் கண்கள் கலங்கிவிட, அவளைப் பற்றியிருந்த கரத்தை லேசாக அழுத்தி ''வேண்டாம்மா அழாத'' என்றான் சிவானந்தன்.

''எங்கம்மா உங்கள அப்படிப் பேசினது தப்பு தான் சிவா. அதுக்காக நான் உங்ககிட்ட மன்னிப்புக் கேட்டுக்கறேன்.''

''தங்களோட பிள்ளைகள் காதலிச்சா, நீங்க பண்றது சரின்னு வாழ்த்தி எந்த அம்மாவும் ஆரத்தி எடுக்க மாட்டாங்க.''

...........

''சொல்லுடா ஏன் இப்படி செஞ்ச? உனக்கு ஏதாவது ஆயிருந்தா அதுக்கப்புறம் இந்த உலகத்துல எனக்கு என்ன இருக்கு? முக்கியமா உங்க அம்மாவப் பத்தி நினைச்சுப் பாத்தியா?''

''ஆனா என் மனசு பட்ற பாடு மட்டும் ஏன் சிவா உங்க யாருக்குமே புரிய மாட்டேங்குது?''

''புரியாம என்ன, அதுவும் எனக்கு? யோசிச்சு முடிவெடுத்தா உலகத்துல எல்லாப் பிரச்சனைகளுக்குமே



நல்ல தீர்வுகளும் இருக்கும்மா.'

''அதனால தான் உங்ககிட்ட இதப்பத்திப் பேசலாம்னு நான் போன் பண்ணினேன், ஆனா எப்பவும் போல நாட் ரிச்சபிள்னு வந்ததால தான் உங்களுக்கு எம்மேல கோபமோன்னு ரொம்பவும் மனசு உடைஞ்சு போயிட்டேன்.''

''எப்ப போன் செஞ்ச?''

''நாலு மணிக்கு.''

''ஓ,'' வழக்கம்போல அதாவது கடந்த பதினைந்து நாட்களாக செய்வதைப் போல அப்பொழுதும் மொபைலை ஸ்வீட்ச் ஆஃப் செய்திருந்தான் சிவானந்தன்.

''நீ ட்ரை பண்ற அந்த நம்பர் என்னோட பர்ஸனல் நம்பர்மா. உனக்கு, அப்பாவுக்கு இப்படி இன்னும் சிலருக்கு மட்டும் அந்த நம்பர் இருக்கறதே தெரியும். போன்ல கூட உன் வாய்ஸக் கேட்டா என்னால என்னக் கன்ட்ரோல் பண்ணிக்க முடியாதுங்கற பயத்துல தான் அதக் கொஞ்ச நாளா ஸ்விட்ச் ஆஃப்லயே வெச்சுட்டேன்.''

''நிஜமாவா சிவா. அப்புறம் எதுக்காக உங்க மனசையும் வருத்திக்கிட்டு என்னையும் பதினைஞ்சு நாளா அழ வெச்சீங்களாம்?''

''அத்தையோட வார்த்தைகளுக்காகத் தான், என்னமா?''

''இப்ப எப்படி உங்களுக்குத் இதெல்லாம் தெரிஞ்சது?''

''உன் மொபைலிலிருந்து அத்தை தான் கூப்பிடாங்க. ஆனா என்னோட அஃபீஷியல் நம்பருக்கு.''

''அம்மாவா...?! ஆனா அம்மாவுக்கு நம்ம காதல் எப்படித் தெரிஞ்சதுன்னு எனக்கு இன்னும் கூட புரியவே மாட்டேங்குது சிவா.''

எதுவும் சொல்லாமல் அவன் தன்னைப் பார்க்க ''என்ன சிவா?'' என்று கேட்டாள் ஸ்ருதி.

''ஸ்ரீநிதியோட வேலதான்.''

''என்ன சொல்றீங்க? அதுவுமில்லாம நம்மளப் பத்தி அவளுக்கு எப்படி தெரியும்?''என்று நம்ப முடியாமல் கேட்டாள் ஸ்ருதி.

''ஏன் தெரியாம? முதல்ல எங்கூட தினமும் ஷோ ரூம்க்கு வந்துட்டிருந்தப்பவே மேக்ஸிமம் டைம் நம் மளத்தான் வாட்ச் பண்ணிட்டிருந்தா. ஆனா வேலைல மட்டும் ஒரு பர்ஸன்டேஜ் கூட அவ கவனம் போனதே இல்ல.''

''அதே மாதிரி புது ஃபேக்டரிக்கும் வேல கத்துக்க றேன்னு அவ வந்தப்பவே எனக்கு சந்தேகம் தான். அதுக்கப்புறம் நம்ம ரெண்டு பேரையும் அவ ரொம்பவும் வாட்ச் பண்ணினதுல எனக்கு கன்ஃபார்மே ஆயிடுச்சு, இது அவளோட வேல தான்னு.''

''ஆனா எங்க வீட்டு நெம்பர் எப்படி அவளுக்குக் கிடைச்சிருக்கும்?''

''திட்டம் போட்டு இவ்வளவு செஞ்சவளுக்கு அதுவா பெரிய விஷயம், என் மொபைலிலிருந்தோ, உன் பர்ஸனல் ஃபைல்லிருந்தோ எடுத்திருப்பா.''

''அப்ப உங்களுக்கு எல்லாமே தெரிஞ்சு தான் இருக்கு இல்லையா சிவா?''

''என்ன தெரிஞ்சு, என்னமா பண்றது? நீ என் சொந்தம் ஆகற வரைக்கும் மனசு பட்ற வேதனையை அனுப விச்சுத்தான் ஆகணும்?''

சிவானந்தனும் பார்ப்பதற்கு மிகவும் மெலிந்திருப்பது போலத் தெரிய, தன்னை விடவும் அவனுக்கு அனைத்து விதத்திலும் அதிகத் துன்பமல்லவா என்று வேதனை யுடன் நினைத்தாள் ஸ்ருதி.



''சிவா'' என்று ஆரம்பித்து மேலும் எதையோ சொல்ல வந்தவள், தனது தாயின் வருகையில் பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

தனது தாயுடன் நர்சும் வர, தான் அமர்ந்திருந்த ஸ்டூலில் இருந்து எழுந்து கொண்டான் சிவானந்தன்.

காவேரி எதுவும் பேசாமல் சற்றுத் தள்ளி நிற்க, ''என்ன உங்களால நடக்க முடியுந்தான?'' என்று ஸ்ருதியிடம் கேட்டாள் அந்த நர்ஸ்.

''முடியும்'' என்றாள் ஸ்ருதி.

''அப்ப நீங்க கிளம்பிக்கலாம். இதுல எழுதியிருக்கற மருந்தையெல்லாம் கரெக்டா சாப்பிடுங்க. மூனு நாள் கழிச்சு ரிவ்யூ வாங்க.''

நர்ஸ் சொல்லச் சொல்ல கவனமாகக் கேட்டுக் கொண்டார் காவேரி.

ஸ்ருதி மெதுவாக எழ, ''நீங்க அவளப் பாருங்க'' என்று காவேரி எடுக்கப் போன கவர்களைத் தான் எடுத்துக் கொண்டான் சிவானந்தன்.

''கார் வரைக்கும் கொஞ்ச தூரம் நடக்க வேண்டி யிருக்கும் நடக்கறதுக்கு சிரமமில்லையே'' என்று தானும் ஒருமுறை ஸ்ருதியைக் கேட்டுக் கொண்டவன், அவள் முடியும் என்றதும் காவேரியைப் பார்த்தான்.

''வேற எதுவுமில்லையே. வாங்க நம்ம கார்லேயே போயிடலாம்'' என்றவன் அவரது மௌனத்தையே சம்மதமாக ஏற்று முன்னே நடந்தான்.

தாய், மகள் இருவரும் காரின் பின் ஸீட்டில் ஏறி அமர, மேலும் ஒருமுறை அனைத்தையும் சரிபார்த்து விட்டுக் காரை ஸ்டார்ட் செய்தான் சிவானந்தன்.

வழியில் ஒரு பெரிய மருந்துக்கடை ஒன்று வர, காரை நிறுத்தி ஸ்ருதிக்குத் தேவையான மருந்துகளை வாங்கிக் கொண்டான்.

உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்? என்று கேட்க வாயைத் திறந்து விட்ட காவேரி, பிறகு எதுவும் சொல்லாமல் மருந்து சீட்டை மட்டும் எடுத்துக் கொடுத்து விட்டுப் பேசாமல் அமர்ந்து கொண்டார்.

மேலும் சில நிமிடங்களில் கார் வீட்டை அடைந்திருக்க, ''உள்ள வாங்க'' என்று சிவானந்தனை வரவேற்றார் காவேரி.

பிகு பண்ணாமல் இறங்கிக் கொண்ட சிவானந்தன் ஸ்ருதியோடு உள்ளே செல்ல, சிவானந்தன் எடுத்துக் கொண்டது போக இருந்த மீதிக் கவர்களை காரிலிருந்து தான் எடுத்துக் கொண்டார் காவேரி.

தன்னுடன் உள்ளே வந்த சிவானந்தனை அமரச் சொல்லி உபசரித்த ஸ்ருதிக்கு, அவன் முன்பு ஒருமுறை வீட்டிற்கு வந்தது தான் நினைவுக்கு வந்தது.

அவனுக்கும் அதே நினைவு தான் என்பதை அவனது முகத்திலிருந்து புரிந்து கொள்ள முடிந்தது.

தொடர்ந்து சில வினாடிகளில் காவேரியும் உள்ளே வந்திருக்க, ''போய் டிஃபன் செய்யறேன் இருந்து சாப்பிட்டுப் போகலாம்'' என்று சிவானந்தனைப் பார்த்தார்.

''இல்ல நான் கிளம்பணும் ஆன்ட்டி'' என்று அவன் மேலும் எதையோ சொல்லப் போக, அதற்கு விடாமல் இடைமறித்தாள் ஸ்ருதி.

''இருந்து சாப்பிட்டுப் போகலாமே'' என்றவளின் கண்களும் சேர்ந்து கெஞ்ச, அதற்கு மேல் சிவானந்தனும் மறுக்கவில்லை.

அதையே சம்மதமாக ஏற்று காவேரி டிபன் செய்யப் போக, சிவானந்தனுக்கு எதிரில் இருந்த சோபாவில் தானும் அமர்ந்து கொண்டாள் ஸ்ருதி.



ஒரு மணி நேரத்தில் டிபனை முடித்துக் கொண்டு சிவானந்தன் கிளம்புவதாகச் சொல்ல, அவர்கள் இருவருடையே முகங்களையும் மாறி மாறிப் பார்த்தாள் ஸ்ருதி.

அவளது கண்களில் இருந்த ஏக்கம் வெளிப்படையாகவே தெரிந்தது.

சிவானந்தனுக்கும் ஸ்ருதியின் நிலை தான் என்றாலும், இந்த விஷயத்தைப் பற்றித் தனது வருங்கால மாமியாரிடம் பேசுவதற்கு இது சரியான நேரமல்ல என்று நினைத்தான் அவன்.

ஆனால் காவேரியின் மனதில் வேறு எண்ணம் ஓடிக் கொண்டிருந்தது.

அதிலும் கையிலுள்ள நரம்பை வெட்டிக் கொண்டு மகள் இரத்த வெள்ளத்தில் கிடந்ததைப் பார்த்த அந்த வினாடியே அவரது மனம் முழுமையாக மாறி விட்டிருந்தது.

எப்பொழுது மகள் தனது காதலுக்காக சாகவும் துணிந்தாளோ, அதற்கு மேல் தன்னுடைய எதிர்ப்பில் அர்த்தமில்லை என்பதைப் புரிந்து கொண்டார்.

தன்னுடைய வறட்டு கவுரவத்திற்காக இருவருடைய வாழ்க்கை வீணாக வேண்டாமே.

மேலும் கடந்த இரண்டு வாரங்களாகத் தனது வார்த்தைகளுக்கு முழு மதிப்புக் கொடுத்து சிவானந்தன் நடந்து கொண்ட முறையில், காவேரிக்கு அவன் மேலிருந்து மரியாதை மேலும் அதிகமாகியிருந்தது.

அதோடு வேறு எந்த விதத்தில் யோசித்துப் பார்த்தாலும், சிவானந்தனின் மேல் ஒரு சிறு குறையைக் கூட அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

''நான் பேசினதுல ஏதாவது தப்பிருந்தா என்ன மன்னிச்சுக்கோங்க மாப்ள'' என்று காவேரி சிவானந்தனைப் பார்க்க, ஸ்ருதிக்குத் தன் காதுகளையே நம்ப

முடியவில்லை. ''நான் உணர்ந்து தான் சொல்றேன், உங்கள விட ஒரு நல்ல வாழ்க்கைத் துணைய எம் பொண்ணுக்கு என்னால தர முடியாதுங்கறது எனக்கு உறுதி.''

தனது அத்தையிடமிருந்து வந்த வார்த்தைகளைக் கேட்ட சிவானந்தனுக்கும் எல்லையில்லாத ஆச்சர்யமே.

அதை சந்தோஷமாக வார்த்தைகளிலும் வெளியிட்டான்.

''உங்க இடத்துல வேற யார் இருந்திருந்தாலும் நீங்க செஞ்சதத் தான் செஞ்சிருப்பாங்க. அதனால நடந்து போனதையெல்லாம் மறந்துடுங்க!''

''உண்மையை சொல்லணும்னா ஸ்ருதிய என்னோட வாழ்க்கைத் துணையா அடையறதுக்கு நான் ரொம்பக் குடுத்து வெச்சிருக்கணும். நீங்களே சொன்ன மாதிரி இவள வாழ்க்கை முழுமைக்கும் கண் கலங்காம ரொம்ப நல்லா வெச்சுக் காப்பாத்துவேன்.''

''அதுல எனக்கு எந்த சந்தேகமும் இல்ல'' என்று சந்தோஷத்துடன் தனது வருங்கால மருமகனைப் பார்த்தவள்,

''என்ன உனக்கும் இப்ப சந்தோஷந்தான?'' என்று தனது மகளைப் பார்த்தார் காவேரி.

''தேங்க்யூ மம்மி, தேங்க்யூ'' என்று சொன்ன ஸ்ருதியின் கண்களிலிருந்து அவளையறியாமல் ஆனந்தக் கண்ணீர் வெளிப்பட்டது.

''இதோ வர்றேன்'' என்று காவேரி உள்ளே செல்ல, திரும்பி சிவானந்தனைப் பார்த்தாள் ஸ்ருதி.

அவன் எல்லையில்லாத காதலுடன் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிய, அவனது பார்வையை நேருக்கு நேர் எதிர்கொள்ள முடியாமல் தலையைக் குனிந்து கொண்டாள் ஸ்ருதி.

*